MAHAMAHOPADHYAYA
SWAMINATHA IYER LIBRARY.
ANMIYUR :: MADRAS-41
VII. C. 5
714

திருச்சிற்றம்பலம்.

# ஸ்ரீ பகவத்கீதை.

இது

சமஸ்கிருதத்தினின்றும்

தமிழிற் செய்யுள் வடிவமாகப்

பௌராணிகர்-திருவிசைநல்லூர்

சிந்நயநாயகரவர்களால்

மொழிபெயர்க்கப்பட்டு,

சென்னை, ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல்

தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீமத்-கோ-வடிவேலு செட்டியாரவர்களால்

பார்வையிடப்பட்டு

சென்னை,

கோமளேசுவரன்பேட்டை

சச்சிதானந்த அச்சியந்திரச

பதிப்பிக்கப்பட்டது.

*Copyright Registered*

**1909.**

[விலை ரூபாய் ஒன்று]

# முகவுரை

நித்திய சுத்த முக்த சுபாவமாயுள்ள பரம் பொருளை மக்கள் அசம்பிரஞ்ஞா சமாதிவாயிலாக வெளிதில் அபேதமாயடைந்து பந்தநீங்கி விளங்குதற் பொருட்டுச் சிருட்டிதோறும் பரமேசுவரனால்அருளிச்செய்யப்பட்டுவரும் வேதத்தை முதனூலாகக்கொண் டெழுந்த நூல்களுள் பாரதமு மொன்றாம். இது வேதார்த்தத்தை விஸ்தாரமாக விரித்துக் கூறுவதுபற்றி ஐந்தாம் வேதமென்றுங் கூறப்படுகின்றது. வேதம்:ருக்கு யசுர் சாமம் அதர்வணமென நால்வகைத்தாமென்பது மிகு பிரசித்தம்.பாரதம் வேதத்தோ டொப்பதென்பது"முப்பாற்குப், பாரதஞ்சீ ராம கதைமறப் பண்டைமறை, நேர்வனமற் றில்லை நிகர்"என்று திருவள்ளுவ மாலையிற் பாரதம்பாடிய பெருந்தேவனார் கூறியிருத்தலால் நன்கு விளங்கும். இப்பாரதங்கூறு முக்கிய விடயங்களுள்குரு க்ஷேத்திரத்திற் றனது தாயாதிகளுடன் போர் புரியுமாறுநின்ற அர்ச்சுனனுக்கு ஸ்ரீ கிருஷ்ணபகவா னருளிச்செய்த (பகவற்) கீதையே மிகுசிரேட்டமா மென்பது வைதிகர்கள் யாவராலும் அங்கீகரிக்கப்பட்ட விடயமாம். இக்கீதை 18 அத்தியாயமுடையது. இது முறையே அவ்வாறு அத்தியாயங்களால் கன்மம் உபாசனை ஞானம் என்னும் மூன்றையுங் கூறுவது. பாரதப் போர் முடிந்தபிறகு பாண்டவர் தமது நாடுமுழுவதையும்பெற்றுச் சுகமாய் வாழுங்காலத்திலொருநாள் அவர்களு ளொருவனாகிய அர்ச்சுனன் மயன்கட்டிய மாளிகையில் பகவானோடு மகிழ்ச்சியுட னுலாவிவந்தான். அப்போது பகவான் அர்ச்சுனனை நோக்கி அன்ப! நான்

வந்து வெகுநாளாயின; உனக்காவனவெல்லா மாயின; யானினித் தாமதியாது துவாரகைக்குச் செல்லவேண் டும்;விடைதருதி யென்று அருளிச்செய்ய; அர்ச்சுனன் நாகத்தினின்று நடம்புரி மூர்த்தியே ! சோகத்தைத் தீர்த்த சொப்பிரகாச!தேவரீர் குருக்ஷேத்திரத்தி னிக ழ்ந்த போர்முகத்துக் கூறிய உபதேசம் மைந்தர் முத லாயினோரது மரணத்தாலாய துன்பத்தினால் மறைந் தொழிந்தது; தாங்களவ்வுபதேசத்தை அடியேனுக்கு மீண்டும் விளங்க உரைத்தருளித் துவாரகைக் கெழுந் தருளுவீராகவென்று பிரார்த்தித்தனன். அது கேட்ட வாசுதேவன் அன்பின் மிகுதியால் மீண்டுமதை அவனுக் குபதேசித்தருளினார். அதுபற்றி இது அநு கீதையென்று பெயர்பெற்றது. அநு பின், கீதை சொல் லுதல். இதனால் முன்சொன்ன பகவற்கீதையும் பின் சொன்ன அநுகீதையும் அர்த்தவிசேடத்தா லொத்த கருத்துடையன வென்பது செவ்வனே விளங்கும். மேலும்,பகவற்கீதை 18 அத்தியாயமுடையதும் அநு கீதை முப்பத்தாறு அத்தியாய முடையதுமா யிருத்த லால் முற்கூறியது மூலம் போல்வதும் பிற்கூறியது உரைபோல்வதுமாம்.இது ஸ்ரீ மகாபாரதத்தின் அஸ்வ மேத பருவத்திலுள்ளது. இது சங்கரபகவத்பாத பூச் யர் முதலிய மகாத்துமாக்களால் தத்தம் வியாக்கியா னங்களில் பெரிதும் பாராட்டி யுரைக்கப்பட்டிருக்கின் றது. பகவற்கீதையி னுடைய நிசார்த்தத்தை உள்ள வா றுள்ளங்கை நெல்லிக்கனிபோ லெளிதி லுணர விரும்புவோர் அநுகீதையை யின்றியமையாது படிக் கத்தக்கதாம். இதனை யுள்ளன்போடு படிப்பவர் இம் மையிற்றானே செம்பொருள் கண்டு இனிப்பிறவாநெறி யை யெய்துவரென்பது இதனது இரண்டொரு அத்தி

யாயங்களைப் படிப்பதினாலேயே நன்குவிளங்கும். இது பகவானது வசனமாயிருத்தலால் வேதம்போல் விசுவசித் தங்கீகரிக்கத்தக்கதாம். இது தேவபாஷையென்று சொல்லப்படும் சம்ஸ்கிருத பாஷையிலிருத்தலால் அத்தேவபாஷையைச் செவ்வனே உணர்ந்தார்க்கே யன்றி யேனையோர்க்குப் பயன்படாதிருக்கின்றதென்பது வெளிப்படையாம். இது நந் தமிழ்மக்களுக்கு உபயோகமாமாறு பட்டஸ்ரீ பாலசரசுவதி பண்டித நாராயண சுதர்சன சாஸ்திரியாரவர்களால் தமிழிற்செவ்வனே கத்திய வடிவமாக மொழிபெயர்க்கப்பட்டது. அது மனனம் பண்ணுவோர்க்கு அநுகூலமாகாதிருப்பது கருதி ஷை சாஸ்திரியா ரவர்களது உத்தரவின்படி செய்யுள்வடிவமாகத் தமியேனா லியற்றப்பட்டது. இஃ தச்சிடுங்காலத் துடனிருந்துதவிசெய்த சென்னை, இந்துதியலாஜிகல் ஹைஸ்கூல் - தமிழ்ப்பண்டிதர் - ஸ்ரீமத் - கோ - வடிவேலு செட்டியாரவர்களது நன்றியெஞ்ஞான்று மறக்கத்தக்கதன்றாம். இப்புத்தகத்தை யென் கருத்துக் கியைந்தவா றச்சிட்டுத்தந்த சென்னை, கோமளீசுரன்பேட்டை, சச்சிதாநந்த அச்சுக்கூடத்தாரது நன்றியு மறக்கத்தக்க தன்றாம். இவ்வநுகீதையைச் செய்யுள் வடிவமாகப் பாடுதற்குரிய சாஸ்திரஞானத்தைத் திருவருள்செய்த மகான் - சை - இரத்தின செட்டியாரவர்களது கருணாவிசேடமென்று மென்னுள்ளத்தினின்று நீங்கத் தக்கதன்றாம். இஃதென்னாளு நிலவுமாறு சிவபெருமான் கருணைபுரிவாராக. இதிற் பிழையுளதாயி னுலகம் பொறுக்க.

இங்ஙனம்,

சென்னை, சாது இரத்தின
வேதாந்த சபையினரு ளொருவனாகிய
சிந்நயன்.

102, நெ-வீடு, மன்னார்சுவாமி கோவில் வீதி,
இராயபுரம், சென்னை,

## பண்டித சிரோமணிகளி னபிப்பிராயம்.

திருவிசைநல்லூர் சிங்கநாயகரவர்கள் செய்யுள் வடிவமாக வியற்றிய அநுகீதையை முற்று மூன்றிப் படித்துப்பார்த்தேன்; அது வடமொழி மூலத்திற்கிணங்க ஒருசிறிதும் வேறுபாடின்றி யிருக்கின்றது; சந்தப் பாவாக விருக்கு மச்செய்யுள் படிக்குந்தோறு மனத்தைத் தன்வசப் படுத்துவதா யிருக்கின்றது. இது சாஸ்திரங்களின் இரகசியார்த்தங்களை யறிய விரும்பும் தமிழ்மக்கள் யாவருக்கு மிகவு மின்றியமையாததாம். படிப்பவர்க்குப் பாவ நீங்கவும் தன் னர்த்தத்தைப் பாவிப்போர்க்கு மகிழ்ச்சிதரவு முள்ள ஐந்தாம்வேத மெனப்படும் பாரதத்தி னொருபகுதியாகிய இவ்வநுகீதையைப் பாவடிவத்தில் தமிழில் மொழிபெயர்த்துத் தந்த ஷை நாயகரவர்கட்கு நந் தமிழ்மக்கள் என்றும் நன்றி பாராட்டக் கடைமை யுடையவ ராவரென்பது எனது அபிப்பிராயம்.

இங்ஙனம்,

பட்டஸ்ரீ-பாலசரசுவதி-பண்டித

நாராயண சுதர்சன சாஸ்திரியார்.

### சோழவந்தானூர்-ஸ்ரீமான்-அரசஞ் சண்முகனாரியற்றிய அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

உலகு மலர்ந்த மலரவனை யுந்தி மலர்ந்த மலர்க் கண்ண, னிலகு குலிசத் திறைமகனுக் கிசைத்த வரிய வநுகீதை, யலகில் பொருள்கொள் வடமொழியி லமைத ேனோக்கித் தமிழ்நாடு, நிலவ வுணர்ந்து களி கொள்ள நிகரில் யாப்பா னிகழ்த்தினனால். 1

உவமை கடந்த திருவிசைநல் லூரி னுதித்துச் சென்னையில்வாழ், நவமார் புலவ னரன்காதை நவினுந்

தொழிலே தலைக்கொண்ட, வவுபி லன்புன் பன்னூனு
மாய்ந்தோன் வன்னி குலஞ்செய்த, தவமே யுருவாய்ச்
சிந்நயப்போர் தாங்கு மரிய தகைமையனே. 2

பாண்டிநாட்டில் திருப்பத்தூர்க்கணித்தா யுள்ள மகிபால புரி
நிவாசியும் மதுரைத்தமிழ்ச்சங்கப்புலவர்களு ளொருவருமாகிய

ஸ்ரீமான்-மு. கதிரேசச் செட்டியாரவர்கள்

இயற்றிய

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பொன்மலையேட் டிற்பொறித்த நூலிற் கண்ணன்
புலனிரம்பப் புயனூர்தி புதல்வற் கன்று
சொன்மலைவி லறநீதை யெனுநன் னூலைத்
தூயதமிழ்க் கவியுருவாத் துலங்கச் செய்தான்
வன்மலைமென் முலையுமையாள் பங்கற் கன்பன்
மல்குதிரு விசைநல்லூர் வாழ்வோன் முன்னாட்
டென்மலையத் திருந்தவனற் குற்று லத்திற்
செய்கையெனச் சிந்நயப்போர் சிறந்து ளானே.

ஓம்

பரப்பிரஹ்மணே நமஃ

சென்னை, இந்து தியலாஜிகல் ஹைஸ்கூல்

தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீமத்-கோ-வடிவேலு செட்டியாரவர்கள்

இ ய ற் றி ய

# சிறப்புப்பாயிரம்.

நிலைமண்டில வாசிரியப்பா.

காரணங் கடந்த விறைவன தருளா
லாரணம் பெறவுயிர்க் காக்கிடு நாளிற்

போர்ந்து விளங்கும் பொருவறு மறையி
னும்பொரு ளனைத்து மமலமா முனிவரர்
பன்னூ லாகப் பகர்ந்தவற் றென்று
முன்னூ லாகு மொளிதிகழ் பாரத
நன்னூ றன்னி னவையற் றோங்குஞ்
சீர்த்தியான் மிக்குத் திகழுறு கீதையைக்
கூர்த்துணர் வோருளங் கொண்டுவப் படைய
நந்தமிழ் மக்க ணலம்பெற் றோங்கத்
செந்திரு மருகி செவ்விதென் றேற்பத்
தொன்னூற் றுணிபெலாந் துகளற வாய்ப்ப
வுன்னைக் கெல்லா மொருங்கே வயங்க
நில்லா வுலகி னிலைபெற் றென்றும்
வில்லார் தன்புகழ் மேவித் தோன்ற
வருத்தமற் றெவரும் வாய்ப்புட னோத
விருத்த யாப்பால் விளம்பினன் சீர்சா
றிருவிசை நல்லூர் சிறக்க வாழுந்
திருவுரு வேங்கடா சலவே டவத்தால்
வந்தவன் குணக்கடன் மாசறு கேள்வியன்
றொல்காப் பியங்க டோமறக் கற்றவ
னல்லா சிரியனாய் நடுவார்ந் தொளிருஞ்
சொல்லா ரிரத்தின னாயவ னடிமல
ருள்ளத் திருத்து முரநன் கோர்ந்தவ
னென்னுயிர் நண்ப னெழில்வே தாந்தம்
பன்னுறும் பாக்கியம் பளகற வாய்ந்தவ
னந்நல மெல்லா மழகுறக் கொண்ட
சிந்நய னென்னுஞ் சீரி யோனே.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஸ்ரீ பகவதநுகீதை.

## பாயிரம்.

### விநாயகர் துதி.

மணியிலகு மாமுகமும் வரமுதவு மைங்கரமு மறைமுன் னோது, மணியிலகும் பிரணவமே தனது வடிவெனப்பரித்திங் கடைந்தோர்க் கெல்லாம், பிணியிலகும் வெங்கோடை தணிப்பதற்குக் கருணையுடன் பிறங்கு ஞானத், தணிவின்மத மழைபொழியுங் குணரகிதன் றாண்மலர்க டலைமேற் கொள்வாம்.

### பரசிவம்.

முன்னமொரு நால்வருக்குச் சிலையாலி னிழலிருந்து முடிவற் றென்றும், பின்னமிலா மறைமுடிவைப் பேசாது குறிப்பதனாற் பிறங்கச் செய்து, மின்னமு மன் பதைக்கருள வெழில்வரத மபயமுட னிருள்சேர் கண்ட, மன்னுதிரி நயனமுங்கொண் டமர்வெள்ளி பொன் மலையிறையை வழுத்தி வாழ்வாம்.

### உமாதேவியார்.

கட்டியசெஞ் சடைக்கடவு ளிடமருவிக் கருணையினாற் கடன்ஞா லத்தோ, டிட்டமுட னெவ்வுயிரு மீன்றுமின மையினோடு மெழிலார் கின்ற, திட்டமுள தனுவிரண்டும் வரையிரண்டும் வேலிரண்டுந் திகழ வென்று, மட்டவிழு மலர்க்கூந்தன் ஞானமினோன் மணிமையைநித மனனஞ் செய்வாம்.

## முருகக்கடவுள்.

தெவ்வசுர ரடையின்புந் தேவர்கடம் மனத்துன் புஞ் சிதைய ஞானச், செவ்வியஞாங் கரைசெலுத்தித் தேமர்வாஞ் சூரனையுஞ் சிதைத்தே மீண்டு, மவ்வியமி லகத்தியருக் கன்றமல ஞானமதை யருளி யான்ற, திவ் வியமா மயிலேறுந் திருமுருகன் சேவடியைச் சென்னி சேர்ப்பாம்.

## கண்ணன்றுதி.

விண்டொடருஞ் சூன்முகிலின் மிளிர்கின்ற மின் னலென மேவுஞ் செஞ்சொற், புண்டரிகப் பொன்னோடு கௌத்துவமு நறுந்துளவும் பொலியு மார்புந், தண் டொடரு நிறைமதிபோற், கருணைபொழி திருமுகமுந் தயங்கப் பார்த்தற், கண்டருங்கா ணரியவநு கீதையரு ளமலனடி யகத்துள் வைப்பாம்.

## சொரூபவணக்கம்.

விண்ணினின் மண்ணினில் விளங்கு மாசையி
லெண்ணிய வெனதகம் புறமும் யாவுமாய்
நண்ணியும் பற்றிலா ஞான பூரணப்
புண்ணியப் பொருளினைப் போற்றல் செய்குவாம்.

## ஆசாரிய சுவாமிகள்.

உலகிலுள பல்சமயப் பேய்த்தேரை யுறுதியென வுள்ளம் வெம்பிக், கலகமுறு கலியிலுயிர் வர்க்கமனக் கவலையறக் கருணை யாலே, திலகமென வுதித்தத்து விதமொன்றே யுண்மையெனத் திரமாய் நாட்டும், பல கலைதேர் சங்கரசற் குருபாத மெஞ்ஞான்றும் பணிவா மன்றே.

## நூல்வரலாறு.

குருநில மதனின் முன்னங் குருகுலப் பார்த்தன் கேடப, வருளினுற் பகவற் கீதை யன்புட னுபதே சித்து, மருளினுன் மறந்த வற்கு மாயவன் பின்னுஞ் சொன்ன, தெருளனு கீதை சீர்செந் தமிழினுற் செப்ப லுற்றேன்.

## அவையடக்கம்.

நஞ்சுகா லரவ மீன்ற தென்றுயர் ஞாலந் தன்னி, லெஞ்சலின் மணியை நீக்கி யிகழ்பவ ருளரோ யார்க்குந், தஞ்சமா மிந்நூ றன்னிற் சாற்றுமென் மொழியிற் குற்றம், விஞ்சிய வறிவோர் போக்கி மெய்ப்பொரு ளுளங்கொள் வாரே.

---

ஸ்ரீபகவதநுகீதை, சிரத்தாகாண்டம், யோகசம்ஹிதை, சித்தகீதை, பிரபத்தியோகம்.

## முதலாவதத்தியாயம்.

உலகெலாம் புகழும் வாசு தேவனர்ச் சுனனு மொன்னுர், பலரையும் வென்று மிக்குப் பரவுமச் சபையின் கண்ணே, நலமிகு மேன்மை யோரா மிருவர்க்கு நடந்த வார்த்தை, வலமிகு மரசன் கேட்ப வைசம்பா யனருஞ் சொல்வார். 1

கனசன மேச யாகேள் காண்டீபன் கண்ண னேடு தனதர சுரிமை மாத்ர மடைந்துசந் தோடந் தன்னு னலருஞ் சபையிற் பல்கா லுலவினு னுவப்பை யெய்துந், தனிகரப் பரிச னத்தைத் தணந்துதம் விருப்பின் வண்ணம்.

தருவளர் சுவர்க்க மன்ன சபையிலோ ரிடத்
தைச் சார்ந்தே, திருவளர் திருமா லோடு சேர்ந்துநம்
பிக்கை வைத்த, குருகுலப் பார்த்த னந்தக் கோதிலாச்
சபையைக் காணு, விருளிலா வாநந் தத்திற் குரியதென்
றிதனைச் சொல்வான். 3

தேவகி தனைத்தா யாக்கொ டிரண்டுறு பெரிய
தோளா, தேவனே யெனக்கு முன்னஞ் செருச்செய
நேர்ந்த போதில், யாவுநின் னுயர்வு மீச னிடத்தினி
லுனக்கு வாய்த்த, வோவரு முருவு மென்னு லோர்ந்
தன வேயா மன்றே. 4

புருடரிற் சிறந்த கேச வாவன்பு பொருந்திப்
பூர்வ, மருளுப தேசந் தாழ்ந்த மனத்தினேற் கழிந்த
தையா, மருளின்மா தவனி ரைந்து வளமிகுந் துவரை
செல்வாய், வெருளிலப் பொருளைக் கேட்க மிகவிருப்
புடையே னென்றான். 5

இப்படி சொலக்கேட் டோனு மேர்பெறு மொளி
பெற்றோனுஞ், செப்பமாய் மொழிவார் தம்முண் முதன்
மையாந் திருமாற் செப்புந், தப்பிலந் தரங்க மென்னிற்
கேட்டனை தன்னைத் தானே, திப்பிய மாய்த்து லங்கத்
தெரிவிப்ப துவுமெஞ் ஞான்றும். 6

உளதுமா மறமும் பொன்று வுலகெலா மறிந்தா
யன்றே, மிளிரறி வின்மை யானீ விட்டனை மறந்தே
யத்தை, யெளிதிலெற் கதுவுஞ் சால வெறுக்கற்பாற்
றேனென் றுயேற், றளர்விலவ் வுபதே சத்தின் றுரை
யிப் போதுண் டாகா. 7

பாண்டவா வுண்மை யானீ பகர்கிரத் தையுளா ன
ல்லே, யீண்டன்றாய்ப் புத்தி யோனு யிருக்கின்றாய் செல்

வஞ் சேர்க்கும், வேண்டிய சீர்பெற் றோனே மீளவு மவற்றை யெல்லாங், காண்டகும் வண மெ டுத்துக் கரைந்திட முடியா தென்றால். 8

பிரமத்தி னியலைக் காட்டப் பேசுமவ் வறமே போது, முரமதாய் முற்று மத்தை யுன்றனுக் கெடு த்து ரைத்தன், முரணிலா வெனக்கு மாகா முனநிட் டை யியற்றிக் கொண்ட, வரந்தரு மென்று லந்த வான் பொருள் கூறிற் றன்றோ. 9

அப்பொரு ளுணர்த்தும் வண்ண மாதியி னடந்த காதை, செப்புவ னென்று தர்ம முடையவர் களிற்சி றந்தோய், தப்பிலவ் வறிவைப் பெற்றுத் தருங்கதி யடையும் வண்ண, மிப்பொழு தென்றற் சொல்லப் படும்பொரு ளியாவுங் கேளாய். 10

பகைவரை வருத்து வோனே பண்டொரு காலந் தன்னிற், சுகந்தரும் பிரம லோக மெனுஞ்சுவர்க் கத்தி னின்று, மிகைபய மில்லா நல்ல விப்பிர னொருவன் வந் தான், றகைமையோ டெம்மாற் பூசை தான்பணப் படுவோ னுன். 11

குலபர தர்களின் மேன்மை கொண்டவர்ச் சுன னே மீளப், பலவித மெம்மாற் கேள்வி பண்ணப்பட் டவனுய்த் திவ்ய, நலமுறு சம்பர தாயத் துடனெதை நவின்றான் கொல்லோ, யலமறும் புறம்பி னேக்க மற வதை யடைவாய்க் கேளாய். 12

மெய்யறி வுளனு மந்த வேதியன் மொழிவா னென்று, மய்யலற் றிடுமு தாரக் கண்ணனே மயக்க நீங்கச், செய்குவ தெதுவோ வந்தச் சீர்முத்தி னெறியை யண்மி, யுய்யவே வுயிர்கட் கெல்லா முடனருள் புரிய வேண்டி. 13

கேடடது மெதுவோ வத்தை யுண்மையாக் கிள த்து கின்றேன், வாட்டமின் மதுவைக் கொன்ற மாத வா நான்சொ லுங்கா, ஞட்டமாய்ப் புறஞ்செ லாத நல் லபுந் தியனுப்க் கேட்பாய், பூட்டற நெறிவி வேகர் தங் களிற் புகழுற் றோனும். 14

கனிதவ நெறியைச் சார்ந்தோன் கசியபர் தங்கு லத்தின், முனமுதித் தவன்சீர் சான்ற மூதறி வந்த ணாள, னனியற நூலாய்ந் தோனு நவிலொணுப் பெருமை யோனு, மனகனும் வேதி யன்பாற் சீடனு யடைந்தான் மன்னே. 15

பருவத்திற் கேற்பச் சீவர் வருதல்போ தலினும் பண்பாய்த், திரிபறு மியற்கை யோடு செயற்கைஞா னங்க ளென்னும், பெருகணை கடந்து ளோனும் பேருல கத்தி னுண்மைப், பொருளறி வதிற்ச மர்த்தும் பொ ருந்தியே நின்று ளோனும். 16

இன்பதுன் பங்க ளாய விம்மையின் பயன்கண் டோனும், வன்புறும் பிறப்பி றப்பின் மாவுண்மை தெரிந்து ளோனு, மன்புடன் பாவ புண்ய நெறியறி யறிவு ளோனுந், துன்பமோ டுயர்வுந் தாழ்வு மாகிய தொழில்க டம்மால். 17

தேகிக டமக்குண் டாகுஞ் செல்கதி களைக்கண் டோனுந், தாகமின் முத்தன் போறசஞ் சரிப்போனுஞ் சித்து ளோனு, மாகுமெய் யடக்கத் தோனு யடங்கிய புலனுள் ளோனு, மேகமாம் பிரமத் தின்பே ரொளி யினு லிலங்கு வோனும். 18

எங்குஞ்செல் பவனும் யார்க்குந் தோன்றியே மறையு மார்க்க, மங்கையின் கனியைப் போல வகத்

தினி லறிந்து ளோனுஞ், சிங்கலிற் கரந்து செல்லுஞ் சித்தர்க ளுடன்செல் வோனுந், தங்கிய விவர்க ளோடுந் தருமொழி வசனிப் போனும். 19

எண்ணிய வணங்காற் றைப்போ லெங்குஞ்செல் வோனு மாகும், புண்ணியச் சித்தன் றன்பாற் பொருந் திப விருப்பா னண்ணி, நண்ணறி வொருமைச் சித்த நுவறவ சரிமை பெற்றுக், கண்ணிய கதியை வேட்ட காசிபன் விதியா னுடி. 20

அந்தப்பே ரற்பு தத்தை யறிந்ததி வியப்புற் றேனு, யந்தவே தியனை யாசா னும்மதித் தவற்குத் தொண்டு, சிந்தையி லன்பி னோடுந் திருப்திய தடையு மாறு, தொந்தமா யிடைவி டாமற் சுத்தனு யியற்றி னானே. 21

திகழ்சனுர்த் தனனே யந்தச் சீடனுங் காசி பன் பான், மிகவிருப் புடைய னுகி விளங்குபேர் சித்தி யைத்தா, னகமகிழ்ந் தெதிரே நோக்கி யருள்புரி பவனுய்ச் சொல்வான், றருமொழி யதனை யென்றன் வாயிலாச் சாற்றக் கேளாய். 22

பொருவறுஞ் சித்தர் சொல்வார் புண்ணியத் துடங்க லந்த, பரவுகே வலகன் மங்கள் பலவற்றன் மாந்தரிங்கு, மருவுமண் ணுலகும் வானத் திருப்பையு மடைகின் றரா, ருருவிலெங் நாளு மெங்குஞ் சுகமென்ப தில்லை பாராய். 23

ஆராயி லெவ்வி டத்து மழிவுறா நிலைதா னில்லை, பாராய்நீ பெரிய தொல்லைப் பட்டடைந் திடுமே கத்தாய், நேராகும் பதவி தம்மு ளடிக்கடி நீங்க லும்முண், டோராயிவ் விருப்போ டுள்ள வெறுப்பினுற் பிணிக்க லுற்றே. 24

மாசுறும் பேர வாவான் மயங்கிச்செய் பாவந் தன்னாற், காசிலா வெனக்குத் துன்ப மானபல் கதி நேர்ந்தன்று, தாசனே மீள மீளச் சாதலுஞ் சனிப்பும் வாய்த்த, வாசையா லுண்ணப் பட்ட வுணவுக ளநந்த மான. 25

பாரிற்பஃ றனங்கள் பானம் பண்ணப்பட் டன தாய் மாருஞ், சாரவே யநந்த மீன்ற தந்தைய ரனந்த மின்போ, டாருந்துன் பழும நந்த மனுபவித் தனன் மா சற்றோய், நேரிலா வநேகம் வேண்டி யவற்றை நீத் தலுமீ தன்றி. 26

விருப்பிலா தனவ வற்றில் விருப்பமும் வருத்த முற்றிங், கருப்பமோ டொவ்வோர் வத்துஞ் சேர்த்தபி னழிவு நேர்ந்த, விருப்பங்கொண் மன்ன ராலும் விளங் குந்தம் மவர்க ளாலு, முருப்பமாஞ் சிரமத் தோடு மூறுசெய் யழிவு மன்றி. 27

இனவவ் மான மும்மிம் மெய்பற்றி யனவு மென் று, மனம்பற்றி யனவு மாய மாகோர நோயு மப்பா, லுனுஞ்சம னிடத்தும் வெங்கா லுதையடி கட்டும் வெட்டு, மினுநர கத்தில் வீழ்த லாகும்யா தனையு நேர்ந்த. 28

மீளவிவ் வுலகிற் பேத மதியா லுண் டாய மிக்குத், தாளொணாப் பிணிமூப் பாலுஞ் சந்தத மனத்திற் றுன்பு, மாளுறு மென்னாற் சால வனுபவித் தனவா லன்றோ, கோளுறப் பின்னும் யானக் கொடுந்துய ரத் தான் மாழ்கி. 29

நிதம்வெறுப் படைந்து நிர்வி கற்பமா நிட்டை யெய்தித், துதியுறு மென்னாற் பூமி வழக்கெலாந் துற க்கப் பட்ட, வதிகமிவ் வுலகின் முத்தி யடைதற்குத்

துறவ றந்தான், சதுர்நெறி யெனவா ராய்ந்து சந்த தம் பழகி னேனே. 30

மன்னுறு மதனு ளிந்த மனத்தெளி வடைந்திச் சித்தி, தன்னைநா னடைந்தீ தன் சீவர் தங்களிற் சிருட்டி யாதிப், பன்னுறு மோக்கங் காறும் பகரெற்கு முலகத் தார்க்கும், பின்னுள வாகு நல்ல கதியும்பே றுங்கி யாவும். 31

பார்த்துநான் வருகின் றேனிப் பந்தமாஞ் சமுசாரத்திற், பேர்த்துமேல் வருவே னல்லேன் பேணுமிவ் வணமிந் நன்மை, சேர்த்திடும் பதவி பெற்றே னிதி னின்றுந் திரம தாகு, மாத்தியாம் பரமென் கின்ற வருஞ்சத்ய வுலகு மப்பால். 32

பரதர முடனவ் யக்த மாம்பிரம்ம பதமுஞ் சேர்வேன், றிரமிதி லுனக்கிங் கையஞ் சிறந்தசிந் தையனே வேண்டாம், வருமிந்த மத்ய லோக மீட்டும்யான் வருவே னல்லே, னரியபே றுணர்வோய் நின்பா லன்புடையனு முள்ளேன். 33

உனக்கியான் யாது செய்வ துரையெஃ தறிய வேண்டி, நினைத்துவந் தனைய தற்கு நேர்ந்ததிச் சமய முன்றன், மனத்தினி லெதற்கா யென்னை மதித்தனைக் கலமா னுயோ, வினைத்தையு மறிவே னுனே வகலுவேன் விரைவின் மன்னே. 34

ஆதலா லுன்னை யிப்போ தன்புடன் றாண்டு கின்றேன், மேதையாம் புலவ னேயுன் சீலத்தான் மிகப்பூரித்தேன், காதலா லுனக்குக் காண வேண்டிய தனைக் கேளாய், கோநினீ கோரு மம்மங் களத்தைநான் குறித்துச் சொல்வேன். 35

காசிபா நானுன் றனமேல கண்டிங்஘ன் பிடிக்கப் பட்டே, ஞசினுண் ணறிவோ னேநீ யாகின்று யாகை யானுன், மாசிலா மதியை மிக்குச் சிறந்ததாய் மனத்திலெண்ணி, நேசமாய் மிகவு நின்னைப் புகழ்ந்திட நேசித்தேனே. 36

முதலாவதத்தியாய முற்றிற்று.

ஆகச்செய்புள் - 45.

சித்தகீதை.

சம்பராய யோகம்.

## இரண்டாவதத்தியாயம்.

டவுட னந்த ஞள னறைவன்பின் காசி பன்றன், விடைதாற் கரிய வாய வினுக்களை வினவத் தன்ம, முடையவர் களிலு யர்ந்த சித்தரு முறையே யோதுங், தடையிலா விடைக டம்மைச் சாற்றக்கா சிபனுங் கேட்பான். 1

சாற்றுமிவ் வுடல மெந்தத் தன்மையாற் சரிந்து போகு, மேற்றம தாகப் பின்னு மெவ்வித முருவ மாகு, மூற்றமாய்ச் சமுசா ரத்தி லோய்வின்றிச் சுழல்ப வன்று, ஞற்றலா லெவ்வா றுச்சீர் வீட்டினை யடைவன் மாதோ. 2

அய்யவெவ் வணமான் மாவு மறியாமை யாலுண் டாகு, மெய்யினை யகற்றி யந்தப் பிரகிரு தியைவி டுப்பான், மெய்யறு பகுதி தேகத் தினினின்றும் விடுபட்டோனுய்ச், செய்யவெவ் வனஞ்ச சீர மல்லாத கதி சேர் கின்றான். 3

எவ்விதமிந்ந ரன்று னியற்றிரு வினையுண் கின்றன், கவ்வையோ டிறந்தோ னுக்குக் கன்மங்கள் யாண்டு நிற்கு, மிவ்விதம் வினவி நிற்கச் சித்தரவ் வினைக்கட் கெல்லாஞ், செவ்விய விடைக ளீந்தா ரவற்றை யான் செப்பக் கேளாய். 4

இளர்விருட் டுணிகு லத்தோய் கீர்த்தியோ டாயுளைத்தான், றெளிவொடுண் டாக்கற் கெந்தச் செயவினைச் செய்கின் றனோ, விருமைவை யாவு மிந்த வுருக்கொண்ட பின்னர் வீய, வொளிரறு வயதால் வந்த வுயிரையு முடையோ னாகி. 5

அலர்விப ரீதஞ் செய்வா னழிவுநா ளனுக வென்றுஞ், சலமிலா விவற்கு மேதை திரிந்திடுந் தனது சத்வ, பலமொடு காலந் தேர்ந்துந் தேறுதும் பகருந் தன்னை, யுலகினின் மறந்தோ னுயொண் ணுதனை யதிக முண்பான். 6

எப்பொழு திவன்றன் மிக்குக் கெடுதியா யினவ வெல்லா, மொப்புடன் றொடர்வா னப்போ தூண்ணுவா னளவி லாமற், கைப்புறு மனத்த னுயோர் காலுண்ணு மலுமி ருப்ப, னிப்படி யொன்றற் கொன்று முரண்படு மியல்பு மன்றி. 7

குருவொடு மதிக மாகக் குற்றம துற்ற சோறு, மருவருத் திடும்பு லானு மருந்தொணு மதுவு மெல்லிற், பிரியமா யுண்ட தெல்லாம் பெரும்பாலுஞ் சீரணிக்கா, திருந்திட மீட்டு முண்பா னினுஞ்சக்திக் கதிக மாயும். 8

உழைகொளன் மிதமி லாமற் புணர்ச்சியு முவந்து செய்வான், விழைவுறுந் திரவி யத்தால் விடாதென் றுந் தொழிலே யேற்பான், பழுதினோர்ந் திம்வே கத்தை

னிறுத்துவான் பதமா காம, றுழையிருக் கவுமருந்துஞ் சமயமொவ் வாதி ருக்க. 9

தகுரசமிகுமூ ணுண்பான் முன்பகற் றுயிலுங் கொள்வான், றகையிலாத் தோட மெல்லாந் தானேசே றெவுஞ் செய்வான், வெகுவிதந் தனது குற்ற மிகுவ தால் வியப் பண்ணுந், துகளுறும் பிணியை யேற்பா னவ்தன்றித் துணிவு கொண்டே. 10

தன்னுயிர் சுருக்கு மாட்டிச் சாதலு முதலவாய, துன்னுறும் விபரீ தங்க ளியாவையுந் துணிவாற் செய் வா, னுன்னுமிக் கார ணத்தா லுயிர்களி னுடலஞ் சாயு, மின்னுமெய் யான்மா வுள்ளம் புலனிவை சமமா நின்றால். 11

உயிர்த்தலென் றுள்ள வண்ண முரைப்பதை மதி த்திங் கோர்வாய், வயிர்த்திடுங் கொடிய தான வாயு வாற் கிளம்பி வெப்ப, மயர்ச்சியோ டெலிற் பொங்கி யதனிடத் தெங்கும் பாய்ந்து, சயிக்கமாம் புலன்க ளெ ல்லாந் தகைகின்ற தாகு மாலோ. 12

பின்புமக் கனலி மீறிப் பெருவலி யுடன்மே லோங்கி, யன்புறுஞ் சீவன் மர்ம்மத் தானங்க ளழிக்கு மாய்வாய், துன்பமா யுடன்வி னைந்து செறிசீவன் றொலையு மந்த, வன்புறுஞ் சடத்தி னின்றுஞ் சரிகின் றான் மர்ம்ம மெல்லாம். 13

சிதைத்திடப் பட்ட காலைப் புதியதாம் பிறவி சேறான், மதித்துக்கொண் டவனுய்ச் சூழ்ந்த வல்வினை வுருவு ளோனாய், விதிக்குமிவ் வுடலை நீப்பா னஃதறி விதியி னிற்பாய், கதித்திடு முயிர்க ளெல்லாங் காலை யெரத் தேரய்வி லாமல். 14

அணுகுறும் பிறப்பி றப்பி லச்சமுற் றவரா யென்று, மெனுமுடல் வி[illegible]ன் றோரா யிருக்கின்றா ரேனென் றயேன், மணியு[illegible]ருப்பங் கொள்வ திலுமடிக் கடிமர் மங்க, ணணுகிட முரணி னாலு நான்வெவ்வே றுறுவன் றுன்பம். 15

அழியுமர் மங்க ளுள்ள வச்சிவன் பின்பு நீரா விழிவிலாச் சித ளத்தை யேற்கின்றா னினுந்தே கத்திற், கெழுமிய கொடிய காலாற் கிளம்பிய வைம்பூ தத்தின், குழுவொரு மைகளோ ழிக்குங் குணத்தி னான் மேற்பட் டோங்கி. 16

ஐந்துபூ தத்தும் பிராணா பானங்க ளிலும டங்கி, வந்துநின் றதுமி யாதந்த வுதானனும் வாயு மேலே, வுந்தநோக் குவதா யுற்ற வுயிர்களை யுட[illegible] டேகு நிந்தையார் சிவ னிந்த வாறுநீத் திடுவன் [illegible]. 17

உயிர்ப்பொழிந் தவனைக் காணப் ப[illegible]ன்றா னு[illegible] வெப் பம்போ, யுயிர்ப்புநின் றொளிம யங்கி யுண[illegible]ழிந் தறிவி னான்மெய், யயர்ச்சியால் விடுக்கப் பட்[illegible] வந்நர னழிந்தோ னென்றே, யியற்கையா யியம்ப[illegible] பட்டா னென்றுமே வுளவிச் சீவன். [illegible]

காயத்தைச் சுமந்தோ னாயெக் காயத்தி ல[illegible] லுண்டாம், [illegible] புலனை யுண்டு பண்ணிக்[illegible]ள் வானை வெ[illegible], மேயதோர் நெறியாற் பஞ்ச [illegible]யஞ் [illegible]றோனை, யாயவ னவற்றைக் [illegible]டங் [illegible] தவனா கின்றான். 19

[illegible]றுவெது வொரோவி டத்து நா[illegible]டனி கழ்ந்த, ததுவது சிவன் மர்மத் தான[illegible]லிவாய் நீயே, விதியுடன் கண்டு தும்மவ் வி[illegible] மர்ம

மெல்லாஞ், சிதைபட வாண்டு நின்று மேற்செலு மந்த வாதம். 20

செந்துவி னிருத யத்திற் சேர்ந்துமே விரைவ தாகச், சந்தத முயிர்த்தி ருத்த றனைத்தகை கின்ற தாகு, மந்தச்சே தனனுஞ் சீவ னென்றையு மறிவ தில்லை, முந்தைமர் மங்க ளெல்லா முறைமறைந் திடம யக்கால். 21

ஆங்குழ டுற்ற மேதை யுடையவ னுமச் சீவ, னாங்கிருப் பிடமற் றாதை புறந்தளப் படுவோ னாகி, நீங்குவ னதிக வச்ச மாகவோர் நெட்டு யிர்த்து, வீங் குறும் வேக மாக வெளியினில் வருவோ னாகி. 22

அசேதன மான வந்தச் சடத்தினை யசைப்போ னாகி, வுசாவுதன் வினைகள் சூழ வுடல்விட்டு வெளி யாஞ் சீவன், றிசாமுகஞ் சூழ்ந்து நிற்குந் திவ்யபுண் ணியங்க ளாலு, மசாரமாம் பாவத் தாலு மறிபடு பவனு கின்றான். 23

ஊகமாய் நாற்க ருத்தை யுணர்ந்தோரு மறிவு ளோரு, மாகுமந் தணர்க ளந்தச் சீவனை யணியி னாலே, லோகையிற் பாவி புண்ய வானென்று மோர்வ ராங் காங், கேகிரு ளிருக்குங் கச்சோ தத்தினை யெழிற்க ணுள்ளோர். 24

அடைவாயெவ் வணங்காண் பார்த்தா வவ்வண மறிவெ னுங்க, ணுடையாரவ் விதமே செல்லுஞ் சீவனை யுற்றுக் காண்பார், தடையிலிவ் விதமாய்ச் சீவன் சாம் போதுஞ் சனிக்கும் போதுங், கடைகன்ம கதியி னிற் குங் காலத்துஞ் சித்த ரெல்லாம். 25

ஞானக்கண் கொண்டு காண்பார் நவில்சீவர்க் கிங்கு மூன்று, தானமாம் பிறப்பி றப்புத் தருங்கன்ம

கதிய தென்று, மீன மி னூற்க ளெல்லா மியம்புவ வெவ்வி டத்து, மானசீ வர்களுள் ளாரோ வப்பூமி கன்ம பூமி. 26

அதனுமேல யெல்லாச் சீவர் களுஞ்சுபா சுபங்க ளாகு, மிதமுறு கன்மஞ் செய்தே பெறுவரிவ் விடத் திற் றனே, புதையுந்தன் வினைக ளாற்பல் போகங்க ளடைகின் றரா, விதமிற் வினையோ ரீண்டே வினை களா லிருளைச் சேர்வார். 27

தேகிக ளெப்போ திங்குச் சிதைத்திடப் படுகின் றரோ, வாகுமிவ் விழிந்த துன்பக் கதியுமே வதனி னின்றும், வேகமாய் வீடு சேர்தன் மிகவரி ததிலே யான்மா, தாகமாய் விழுந்தி டாமற் றடுத்திட வேண் டுங் கண்டாய். 28

சீவர்மேற் கதிய டைந்தெப் பதியைச்சேர்ந் தவ ரா வாரோ, வாவலா யுளவா றென்று லறைந்திடு மத னைக் கேளாய், மேவதை வினவிக் கன்மங் களின்மிகு துணிபு நிட்டை, தீவிர மாகச் சார்ந்த நீதியுந் தெளி வாய் நீயே. 29

எங்குமீ னுலக முண்டோ வெங்குண்டோ மதியு லோகந், தங்குமெவ் வுல கு நன்றாய்த் தனதொளி கொண்டு நின்றே, பங்கமில் பானு லோக மொளிக்கு மிப் பதிகண் மூன்று, மிங்குநல் வினையை யுள்ளார்க் கென்பது மறிவாய் நீயே. 30

முன்சொனோர் மீளக் கன்ம முடிவதாற் கீழே வீழ்வர், மின்படுஞ் சுவர்க்க மென்னும் விடத்துந்தாழ்ந் தோனு யர்ந்தோ, னின்புறு நடுத்தி றத்தோ னென்னும் பாகு பாடு முண்டாம்,வன்பொடாங் கதிக மான வளத் தைக்கண் டுளது போதும். 31

எனுநிறை வடைவ தில்லை யிவையெலாம் பிரித்து
ணக்கிங், குறும்வணம் விப்பி ரோத்மா வுரைத்தனன்
கருப்பை கொள்கை, யினுமப்பா லெடுத்து ரைப்ப
னின்பொடவ் விதமெலாநீ, யனுகுண மாக வெண்ணி
வகநோக்க மாகக் கேளாய். 32

இரண்டாமத்தியாய முற்றிற்று.

ஆகச்செய்யுள் - 77.

---

சித்தகீதை.

சமாவேசயோகம்.

## மூன்றாவதத்தியாயம்.

அந்தண ரறைய லுற்றார் நல்லதீ யனவு மாய,
வந்தமில் வினைக ளுக்கீண் டழிவில வவற்றிற் கேற்ப,
வந்துறு முடலை வாங்கிப் பயன்றரு மரங்கள் பூத்து,
விந்தையா யவைபழுத்து வெகுபலன் களையீய்ந் தாற்
போல். 1

அற்பமா கினுஞ்சுத் தஞ்சே ரகமுட னுற்றும்
புண்யம், பற்பல வகையான் மிக்குப் பயனீவ தாம
சுத்த, துற்குண முடன்செய் திட்ட துயர்செய்தீ வி
னையு மற்றே, விற்பன வான்மா விந்த மிகையகந் தனை
முன் னிட்டே. 2

வினைகளின் முயல்வான் காம வேட்கையை
யுடையோ னாகி, வினைதமக் குரிமை யான வேற்றுமை
களைப்பெற் றோனு, யனைபந்தார் சிவன் கற்ப மடை
குவ னினிய தைக்கே, டுனைவுறுஞ் சுக்கி லஞ்சோ
ணிதத்துடன் றெந்த மாகி. 3

நாரியின் கருப்பை சார்ந்து நன்மைதி மையிலே
தேனும், வீரிய வினையா லுண்டா மெய்யினை யடையு

மேலோ, யொருவாய் நுண்மை யாலு முருவிலா திரு த்த லானுஞ், சீரிய பிரம வித்தாய்த் தினம்விரும் பிய தைப் பெற்றே. 4

ஓதுறுஞ் சீவன் குணங் கொன்றிலு முயற்சி யில்லா, ஞதலா லதனைப் பற்றி யதுவென்றும் விளங் கும் பிரமம், போதமா ரதுவே யெல்லாப் பூதங்க டம க்கு மூலம், தீதறு மதனு லெல்லாச் செந்துவும் பிழை ப்ப தாமே. 5

வேறு.

புகல்சீவன் கருப்பகோ ளகத்தி னெல்லாப் புறங்க ளினும் விபாகமுறை யுடனே புக்குத், தகுமுணர்வைக் கொண்டியிரி னிலையுற் றேனுய்ச் சாற்றுமசே தனமத னுற் றரிக்கின் ருனன், மிகவதன்மேற் கருப்பிண்ட முணர்வைப் பற்றி மேலுறுப்பு களையசைக்கு மெவிதஞ் சொர்னத், துருதிரவம் பெய்தவுடன் குகையி லங்க மொருங்குபா வுதலுறுமவ் விதமே போலும். 6

இவ்வுயிருங் கருப்பமதிற் பரவுகின்ற வியலறிவா யெவிதமயற் றுண்டிற் றியுங், கவ்விமிகப் பற்றிடுமோ வவிதங்கறப மதிலுயிரு முணர்வுகொள லெனவே காண்பா, யெவ்விதம்வீட் டினிலேற்றப் பட்டதிப மில ங்கிடுமோ வதைப்போன்மூ வுடலை யுந்தான், செவ்வை யாய்ச் சேதனனே விளக்கு கின்ருன் றியவைநல் லவை யேனு மெவையா னுலும். 7

இந்தவுயிர் புரிந்திடுமோ வதைமுன் றேகத் தினிற் செய்த வவைகண் மெய்யாத் துய்த்த லாகுந், தொந்த முறு மதுவதனுற் குன்றும்வேறே தோன்றுமொன்றே யாகையினுன் முத்தி மார்க்கம், வந்தடைய முயலுமட்டு

மந்தவுண்மை வகையறியா னென்றிங்கிலோன் றும்பி றப்பிற், சந்திதத்தே சுழலான்மா சுகத்தை யெத்தாற் சாருவனோ வவ்வினையைச் சாற்று கின்றேன். 8

கொடையோடு நோன்புறுதல் கலவிநீக்கல் குரு கூறும் வணம்பிரமந் தன்னை யெண்ண, விடைவிடா தகம்புறமு மடக்கழுக்க மினும்பூதங் களுக்கிரங்கல் பொல்லாங் கின்மை, தடையாமன் னியர்பொருள்வவ் வாதவுள்ளந் தன்னுடனெவ் வுயிர்க்கூறு தான்செய்யா மை, யடைவாய்த்தாய் தந்தையர்க்கூ றியமுந் தேவ ரதிதியரைத் தொழுதல்குரு பணியுஞ் செய்தல். 9

அருளொடுதூய் மையுமென்றும் புலனடக்க லன் றியுநல் லவைகளையே யியற்ற லென்ன,வருபதினெட்டி வைநல்லோ ரொழுக்கமாகு மற்றவற்றி னெக்காலு முள்ள தாகு, மருமுயிரெ லாங்காக்குந் தன்மமுண்டா மறையுமிதை நல்லோர்பா லறியலாகு, நிருமலரா மவரி டத்திவ் வழியுறுநன் னெறிநிலையாந் துறவுதனை யடைந் துளோரும். 10

நவிலெதனை யடுத்திருக்கின் றனரோ வந்த நல் லொழுக்க மறமென்ப ததையே யோதும், புவியிலெது பிரசித்த வறம தென்னப் புகலவெந்நா ளும்முளதோ வவ்வாசார, மவியமிலவ் வுத்தமர்பா லவைகளெல்லா மமைவுபெறு மெவனதனை யாராய் வானோ, தவறுட வன் கெடான்றரும நெறியினின்றே தவறிடுந்தே கிக ளேதண் டனைக்குள் ளாவார் 11

எவனொருவன் யோகியுமுத் தனுமாவானோ யெல் லார்க்கு மேற்போனோ னவனே யாகு,மிவர்தலிலா வற நெறியிற் செல்வோனுக்கிங் கெந்நாளு மெவ்விதநற்

சுகமு முண்டாக், தவறில்வற் கஙனமே வெருநாட் சென்று சமுசாரத் திருந்துகளை யேறலுண்டாம், விவ ரமுட னிவ்விதமெப் போதுமுன்செய் வினைகளையே சீவரெலா மடைகின் றாரால். 12

எதனாலே வருமாறி யவனுய்ச் சீவ னிங்குவந் தனனோவ வீதல்லா மிங்கே,யதனைக்கா ரணமாக்கொண் டிவ்வான் மாவுக் காதியிலே தனுவெடுத்த லெதனால் வந்த, திதெனவிவ் விதஞ்சங்கை யுலகிலுண்டா மினிய தனை யியம்புகின்றேன் சுத்தப்பிரம, மதமாகு மாயை யெனு மவ்வியாகிர் தாகாச வுருத்தன்பாற் றேன்றச் செய்தே. 13

உடலொடுசே தனவடிவா யுள்ளமூன்று முலகெ வையு முண்டாக்கிப் பின்பு வேண்டு, மிடப்பிரதானத் தையுமுன் னெதனு லியாவு மீங்குவியா பிக்கப்பட் டுள வோ வின்னுங், தடமொடதைச் சிறந்ததென வறிவ ரோவச் சரீரிகளின் பிரகிருதி தனையுந் தந்த, தடை வான சரமொடுவட் சாமுந்தேவ ரமுதமா மூன்றி னிலே முதலிரண்டும். 14

புகலுமொரோ வொன்றிற்கு முளபிரமாவும் பூர் வக்கண் கொண்டவனுய்ப் பூதம் யாவும், பகரரிய தாவரசங் கமங்களாய பௌதிகங்கள் படைத்தான்றெ ன் மறையா மீது, மிகுமவிதிக் குக்கால வரையுந்தேக வேற்றுமையுஞ் சுழல்வதையு மீட்டு மீய்ந்தான், றகவுட னோர் ஞானியுமுன் பிறப்பில்வந்த தன்னியலோர்ந் தவனுய்ச்சாற் றுவனவ் வண்ணம். 15

நானெனவைக ணவிலுவனோ வவைகளியாவு நம்பிக் கை யவ்வணமே யுண்டாம் யாவ, னினைக்க துக்கமனித்

தியங்க ளென்று மிழிவுடலை யசுத்தச்சேர்க் கையதா மென்று, மூனமுற வழிதலையூழ் வினையினாலே யுண் டான தென்றுமுள படிகாண் பானே, னானவவன் சுக மென்ப தியாவுந் துக்க மாமெனவே நினைந்திதன்மேற் செல்வ தற்கே. 16

தாங்கமுடி யாதசமு சாரகோர சாகரத்தைக் கடப்பான்பின் மரண நோயாற், றீங்குடனே பிணிப்பு ண்டு பிரதா னத்தைத் தெரிந்தவனுய்ச் சேதனஞ்சேர் பூதத் தெல்லா, மோங்கியசை தன்னியமே யெனப் பார்க்கின்ற னேதுநல்லோர் களிற்சிறந்தோ யதன்பின் மன்னும், பாங்குபெறு பதமுழுது மாராய்ந் தோனுய்ப் பகருமிவன் மிகவும்வெறுப் படைகின்றனே. 17

வேறு.

அன்றி யங்நெறி யுள்ளவா றுரைப்பனந் தணனே
யென்று முள்ளதும் வேற்றுமை யென்பது மிலதா
மொன்ற தாகிய சேதன வுயருப தேச
மின்றெ னுலுரைத் திடுமிதை முழுதறிந் திடுவாய்.

மூன்றுவதத்தியாயம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 95.

சித்தகீதை.

சாதனயோகம்.

## நான்காவதத்தியாயம்.

நீடுலகி லெவன்மௌனி யாயெதையு நினையா தோர் நிலைநிற் பானே, யீடிலவன் முன்முன்றேன் றிய தைபெலாங் களைந்துபந்த மிகந்தோ னுவ, னடுகின்ற யாவருக்கு நேயனு யெலாம்பொறுக்கு நலமு ளோனு ய்ப், பாடொழிபில் விருப்புற்றுப் பொறியடக்கி யல்ல லுடன் பயமு நீங்கி. 1

வேறு.

திடமுட் கொள்ளுவோன் முத்தனு மெவனெலாச் சீவர்க ளிடத்துந்த, னிடமி ருப்பது போற்சரித் திடுவ னே யிதுவலால் விதிக்குட்பட், டடர முக்கினை யறுத் துமா னத்தையு மகற்றியா தினுமுள்ள, விடல ரும் மபி மானமும் விடுத்துளோன் முததனு குவன்மேலும்.

பிறபபி றப்புட னின்பொடு துன்பினும் பெருந பம் வியத்து, மறும்வி ருபபுடன் வெறுபபிலுஞ் சம முளோன் முத்தனு மன்றி, யுறவொ டெவ்விதத் தானுமொன் றையும்விரும் பாதொன்று மிகழாம, லிறுமி ரண்டறச சங்கற்ப மொழிபவ னெழின்முத்த னுவானே. 3

எங்க ளுநதரி யலரற்றிங் குறவின்றி யெழின்மை ந்த ரீனுமற், றங்க றம்பொரு ளின்பற்று நசையிலான் றன்முத்த னுவானே, யிங்க றம்பற்ற லதைவிட லென ுமிரண் டல்லனு யூழ்நீப்பா, னங்கஞ் சாயதா துக்கள் போ யிரண்டறு மவன்முத்த னுவானே. 4

வேறு.

எவன்விருப்பற் றவனுவா னேவவன்று னிருவி னைக ளற்றென்றும் பிறப்பிறபபி னுடனே, தவமுப்போ டச்சுவதத் திற்கொத்த தருமாஞ் சகமனித்ய மெனத் துணிந்து தான்முத்த னுவா, னெவன்சதா வவாவறு த்த லுளபுந்தி யுளனு யினுந்தன்குற் றங்களறிந் த கற்றினனு குவனே, வவன்விரைவிற் றன்கட்டி னின்று ம்விடு தலையை யடைவானுற் றம்பரிசஞ் சுவையொலி யொ டுருவம். 5

அற்றதும்பற் றற்றதுமிங் கறியவொண்ணு ததுவு மான்மாவே யெனத்தரிசித் தவன்முத்த னுவான், மற்

றுமெவன் குணங்களைத்துய்த் திடுமோரான் மாவை மாறுமைம்பூதக்குணமற் றுருவமிலா ததுவும், பற்றுகாரணமிலதும் குணநீங்கி யதுமாம் பரப்பிரம மெனக்காண்போன் றானுமுத் தனுமாங், குற்றமிலா தெவன்புத்தி யுடலுளத்தி லுள்ள கொடுஞ்சங்கற் பம்விடுத்துக் காட்டமிலாக் கனல்போல். 6

ஆருவனோ வவன்மைய வொழிபுதனைப் பெறுவானன்றியெவன் றபசினு லைம்புலனை யடக்கி, யேகியேற்றிடலற்று வாசனைக ணீத்தே யிரண்டற்றோ னுருவனோ வவனுமுத் தனுமாம, போகும்வா சனைகளால் விடுபட்ட பின்பு பொன்றுநித் தியமொடுமட் சரமசலமுடனே, வாகுசம சாந்தமாஞ் சனுதனமிர் மத்தின் மருவிநிற்பான் பற்றிலா தெங்கெங்கு மவனே. 7

வேறு.

இனியோக ரியற்கையதாஞ் சுயவடிவை யெவ்விதங்காண் பார்களோவவ், வுனுமேன்மை யோகநாலுரைப்பனெவ் வுபாயத்தா லுடலி னெஞ்சைத், தனிச்செலுத்தி யென்றுமுள ததைத்தரிசித் திடுவாரோ சாற்றப் போத, முனதிடத்தி லுள்ளவண முரைத்திடுவ லவற்றையுமென் னிடநீ யோர்வாய். 8

ஈவிவுசெயைம் புலனையுளே யடக்கிச்சேத் திரஞ்ஞனிட மாட்ட வேண்டுஞ், சலியாது கடுந்தவமு னியற்றிமுத்தி சமாதிகொள றானும் வேண்டு, மவனிங்கு னோன்பிலெடுப்போது நிட்டைமன மடங்கி யோனுய்ச், சலனமறு நன்மனதாற் சேத்திரத்திற் சேத்திரஞ்ஞன் றனைக்காண் போனுய். 9

...வாக யோகமதை வாசரித்தவ் வணஞ்செய்வோ ...வன் ..., ...டன்மனமதை யுண்மையிலே நாட்

டவல்ல னுருவனே லதற்குமேலோர், திடநிலேயி னிலே த்தவனுய்ச் சேத்திரஞ்ஞன் றனேத்தெரிசித் திடுவன் யாவ, னுடனவிதம் பழகுபவ னுய்ப்புலன்கள் வென் றாக்க முடனுள் ளத்தை. 10

அடக்கியென்று நிட்டையுளோ னுருவனே லா ன்மாவை யவனே காண்பான், கடத்தலுறு கனவினி லெவ் விதம்புருடன் பார்த்திவன்று னெனவேகண்டு, பிடிப்பானே வவ்விதமே நன்குநிட்டை கொண்டவ னும் பெருஞ்ச மாதி, யிடத்தினிற்கண் டவ்வணமே புலகையெலா மான்மாவா யினிது காண்பான். 11

எவ்வண்ண மொருவன்புன் முஞ்சையினின் றீர் க்குருவி யெழிலாய்க் காண்பா, னவ்வண்ணம் யோ கியுட லூடுருவி யான்மாவை யடைவாய்க் காண்பா, னிவ்வண்ண முஞ்சமென்ப துடலீர்க்கு வான்மாவி லிருக்கு மாயை, செவ்வியோ யிதையோக ருத்தமதிட் டாந்தமெனச் செப்பு வாரே. 12

எப்போது சுயவடிவைத் தேகியுஞ்ச மாதியினி லினிது காண்பா, னப்போதங் கவனுக்கிங் கீசனிலே மூவுலகிற் கவன்று தாவா, மெப்போதும் வேண்டியவா றுடல்வெவ்வே றெடுத்திடுவு னெழிலின் மூப்புங், கைப்பாகு மிருத்துவையுங் கடந்தவனு புவகையல்லல் காணுன் றுனே. 13

சுரர்களுக்குச் சுரனுக விருப்பதற்கே யோகிசுதந் தரனுய்ச் செய்வான், பெரிதனித்ய மாமிவுட னீத்த ழிவி லாப்பிரமம் பெறுகு வான்பி, னுருவாகும் பூதங்க ளழியும்போ தவற்கச்ச முண்டா காது, வருகின்ற பூதங்கள் வருந்துங்கா லொன்றுலும் வருந்தி டானே. ()

ஆசைநீத் தொழிவுபெறு மனமுடைய யோகியனு வுறவா லுண்டாங், கூசுகுறை யழல்வடிவாங் கோரங்க ளாற்சலியான் படையுங் கொல்லா, வாசுறுகூற் றிவற் கில்லை வதனலிவ் யோகத்துக் கதிக மான, மீசுகமீ வது யாது வேறெங்கு மிவ்வுலகில் விளங்கக் காணேன். 15

மனதையொரு நிலைநாட்டிச் சுயவடிவி னிலைத்திடு வான் வருமூப் பின்றுன், பிணுநீங்கி மோதங்கொ டிவரிதுதுயில் வான்றுய்ப்போ னிவனு லாசை, யினை நீங்க வாசரிக்கப் படமாட்டா திம்மனித வுடலை நீத்து, நினையுமனஞ் சென்றவா றுடலடைவான் சதாக்கொ ண்ட நிட்டை யோனுய். 16

மெய்யில்சுய வடிவத்தைக் காணுவனப் போதந்த விசித்ர கன்மஞ், செய்யுமீ சுரன்மஞ்சன் பதவியையும் விரும்பாஞேர் சீலத் தோனு, யையமிலா யோகியெவ் வா றடைகின்று ஞேயோக மதனைக் கேளாய், பையமு தற் கண்டகதி யைச்சிந்தித் தெப்புரத்திற் பரிவாய்ச் சார்வான். 17

நவிலந்தப் புரத்தில்வெளி செல்லாதுள் ளேயுள த்தை நாட்ட வேண்டுங், குவிபுரத்தி னுள்ளிருப்போ னெம்மனையிற் குடியிருந்து குலவு வாஞே, வுவமை யிலா வெம்மனையி னுளும்புறம்பு முடனிகழு முளத்தை நன்றுய்ச், சவியாயோர் நிலையிருக்கச் செய்துசதா வவ ன்மனதைத் தானே யூன்றி. 18

வீட்டினிட முள்ளவெலாங் காண்பனவ னுளஞ் சிறிதும் வெளிப்ப டாது, கூட்டுவா யின்மூடக் குடி யுளோர் வெளிவருகக் கூச்ச லோய, நாட்டியவக் காட் டகத்தி னுள்ளிருக்கு முறுப்புகளை நாடி நன்றுய்த், தேட்டமொடெல் லாம்பார்த்துச் சிந்தித்தே பறகவு ணுச் செய்ய நெஞ்சம். 19

மண்டுகழுத் திருநயனா டிகளினைவயி லாராயவான
மதுவை மாய்த்தோய், பண்டிவித யென்னுலே போதி
க்கப் பட்டவனாய்ப் பகரச் சிடன், விண்டிடுதற் கரிய
வித்த முத்திநான் முறையீட்டும் வினவி னானா, ஒண்
டிமிசைந் தாண்மையிடம் பதமாவ துதிரமெவ்வா
றுறுவ தேயோ. 20

எந்தவிதம் ரசத்தன்மை பெந்தவிதங் கறைத்
தன்மை யெய்துகின்ற, வெந்தவிதந் தேகிகளுக் குறுப்
புகளா மிவையன்றி யிறைச்சி நாடி., தொந்தவெலும்
புகளிவையு மாதர்கருப் பையிலெவிதந் தோன்று
கின்ற, வெந்தவிதம் வளர்பவற்கு வளர்கின்ற திவையு
ரமு மிசைவ தேயோ. 21

தடையாக நிற்கின்ற மலங்களுக்கெவ் வி[illegible]ம்
போக்குத் தனிமை யாக, விடையிலுயி ருட்கொள்வ
தென்னைமேற் கொள்வதெனிவ் வுடலி லான்மா, திட
மாவெத் தலத்திருந்து வருகின்றான் சேட்டிக்குஞ் சிவ
னெவ்வா, றுடலூர்வா னெங்கிருமா யெத்தனைத்தா
யுடலமைத்துக் கொள்கின் றானே. 22

உள்ளவனா மிவைகளெலா முபதேசிக் கத்தகுவி
ரெனவே யோதுந், தள்ளரிய விப்பிறப்பு முறையாக
விடையியந்தேன் றரிய லாரைத், துள்ளலடக் கியபெ
ரிய தோளாயெவ் விதஞ்சொந்தக் கருவூ லத்தின்,
மெள்ளநிறைத் திடுபொருளின் மனமுடைய னொருவனவ்
விதமே போல. 23

தன்னுடலிற் றனைகள்வலி வுடன்மூடி மனைதான்
வித் தன்னை யாங்கே, முன்னங்கே டதல்வேண்டுந்
தவறுகணீத் திடல்வேண்டு முயன்றெக் காலுஞ், சொ
ன்னவித விதங்களிப்புத் தோய்ந்தமன முடையவனாய்த்

துரித மாக, வன்னியமில் பிரமத்தி லடைவிப்பான் முதலதைப்பார்த் தறிந்தோ ருவான். 24

இருவிழியா லவன்காணப் படுவனல னெலலா விந் திரியத் தாலு, மருமையா யெட்டப்பட் டவனுமல ன் மகிமைபெறு மந்த வான்மா,வொருமைமன தெனுந் தீபத் தாற்காணப் படுகின்று னுரைப்போற் கென்று, முருவெங்குங் கைகால்கள் கண்தலைவாய் செவிகளுமே யுடையோ ருகி. 25

உலகதனி லெவைகளிலுஞ் சூழ்ந்து நிற்பான் சீவ னுந்தன் னுடலி லுள்ளே, சொலுமதற்கு வேருகத் தன்னுடைய வுருவமதைச் சுகமாய்க் காண்பா, னலகி லவ னதைப்போக்கி யவ்வுடலிற் றன்னையுபா திகடா ன்ற, நலமிலகும் பிரமமெனத் தியானிப்போ ருய்த் தானே நகைசெய் வான்போல். 26

மனதிலுற் றனதுசுய வடிவத்தைக் காண்கின் ருன் வழுத்து மிவ்வா, றுனும்வணமோர் பற்றுகி யதன்வழியா யான்மாவி லோய்வைச் சேர்வான், வின வுஞ்சர்வ ரகசியமா மிதுவென்று லுன்றனுக்கு விளம் பப் பட்ட, தினிச்செல்வேன் விப்பிரனே யின்பமுள வணகீயு மேகென் றேனே. 27

இவ்வாறென் னுலப்போ துரைத்திடுசீ டனுங் கண்ணு வேகி னுனென், றவ்வாறு பார்த்தாவிவ் வித மெனக்கு வசனமொழிந் தப்போ நன்றுய்ச், செவ்வாறு முத்தியுற் முடித்தவிப் பிரனெளித்துச் சென்று னங்கே, தெவ்வாறு கலைக்கடந்தோ!யொருநிலையோ டுன்றன் மனம் செலிக்கே நிற்றே. 28

உருளிரத மிசையிருந்து வினவியது மிதுபுறமோர்க் குள்ளோ ருலும்;தெருண்மனமாய் வித்தியா சப்பிரதா யந்தெரியா திருப்போ ருலும், வருமெளிதிற் றெளியக்

கூ டியதல்ல விதுவென்றே மதித்துக் கொள்வாய், மரு வுபர தரிற்சிறந்தோ யுனக்குரைத்த திதுசரார்க்கு ம றைவு தானே. 29

பார்த்தவிங்கே யுறுமெம்மா னிடனுலு மிதுகேட கப் படவே யில்லை, திர்த்தவுனை யன்றியே யெவரிதனைக் கேட்கின்ற திறத்தோ ராவா, ரார்த்தியாய்ப் பலவற்றிற் கலந்தமன முடனிதுநன் கறியொ ணாது, சீர்த்திடுஞா தியின்புதல்வ வறவினையார் சுரருலகு சேர்வர் தாமே.

இதுமனித வுடன்மாற்றுந் தேவர்களுக் கிட்ட மிலை யெதுவெக் காலுந், துதிசெயந்தப் பிரமமோ வரு முடலைத் தொலைத்தென்றுஞ் சுகியே யாகி, சிதைவுறுந் தன்மையினை யடைவனே வஃதன்றே சிறந்த மோக்க; மதிபாவப் பிறப்பினர்பா வையர்நாய்கர் சூத்ரரெனு மவர்க ளெல்லாம். *31

இந்தவறங் கொண்டவராய்ப் பரகதியைப் பெறுவ ரெனி னெழிலார் கல்வி, யந்தமிகு கேள்வியொடு மெக்காலுஞ் சுவானுபவ மறிவோ ராகு, மந்தணரு மரசர்களு மடைவரென வறைந்திடுத லதிக மாகுஞ், சந்தமிகு மதையடையத் தந்திரங்க ளுத்தியுடன் றுன் காட் டிற்றே. 32

ஆதலான் மிகுந்தசுக மிதைவிடவே றொன்றுமிலை யகநோக் குற்றுத், தீதிலா தெவனுலகி னுட்பொருளைத் திரணமெனத் தினநீப் பானோ, கோதிலவன் விரைந்து பர கதியடைவ னிவ்வளவே கூற லாகு, மீதென்று முயல்வோற்கு ம தி யா றி ன் மேல்யோக மெய்துந் தானே. 33

சிரத்தாகாண்டம், சித்தகீதை,
நான்காவதத்தியாயம் முற்றிற்று.
ஆகச்செய்யுள் 128.

ஸ்ரீ பகவதநுகீதை,
உபாசனகாண்டம், தர்மசங்கிதை,
பிரஹ்மசித்தை, வைஸ்வானர யோகம்.

# முதலாவதத்தியாயம்.

பரதன் றன்குலச் சேட்டனும் பார்த்தனை யிந்த
வரும்விட யத்திற் றட்பதி யவர்கட்கு முன்னங்
கருஞ்சம் பாடனை நடந்தா லப்பழங் கதையை
யுரைசெய் கின்றன னெனப்பக வானுத கரிப்பார். 1

இயற்கை யுஞ்செயற் கையுமிரு பலன்கடந் தவனுந்
துயரற் றுத்தனி யிற்றிருப் பவனுட்பூ சரனு
மயலற் றோனுமாம் பதியினை யவன்மனைக் குரிய [ள்.
பயிர்ப்பு றுங்குணப பார்ப்பனி விளித்தொன் று பகர்வா

எனைச்சன் மானியா தென்னிட மிரக்கமற் றோனு
முனக்கு றுந்தொழி னீத்திருப் பவனுயா முன்னை
யெனக்கு நாயக னெனக்கொளு னெவ்வுல கடைவே
னினைக்குந் தம்பதி சேர்ந்தடைந் திடுமந்த வுலகே. 3

அடைவ ரென்றுகேட் டுளனுனைப் பதியென வடைந்த
மடமை யேனுந்தக் கதியினை யடைவன்மா சற்றோய்
விடைய ளித்தியென் றிவ்வணம் வினவிட வொழிபாங்
கிட மனமுளோ னருவன்போ லவட்கிது செப்பும். 4

பாவ மற்றிடும் பாக்கிய வதியுன்றன் மொழிக்கு
கோர்விக் கேனெந்த விதமுநான் குறித்தொரு செய்கை
காவ லாய்ப்பற்றப் பட்டதுங் காணக்கூ டியது
மாவ லாய்நிலை நாட்டப்பட் டதுவுமா மதனை. 5

கரும மேயெனக் கருமிக டுணிபுறி வின
ரரும்வி னையினுல் வருமறி யாமையே யாள்வா
ரொருமு கூர்த்தமு முயற்சியற் றுலகினி லில்லை
வருமு டலுளம் வாக்கொடு நலதுதீ யதுமாம். 6

கன்ம மச்செடுப் பதுமுதன் மாறுதல் கடையா
தின்மைப் பூதம்யா விஹுமுள தேடிய பொருளி
னன்மை யைத்தெரிந் திடும்வழி யரக்கரா னசிக்கப்
பன்னும்மெறி நீத்தென்றன் மனத்திஞர் பார்த்தேன்.

எங்கி ரண்டறு பரம்பொருள் விற்றிருந் திடுமோ
வெங்குத் தீயொடு மதியிருந் திடுவனே வெங்குத்
தங்கு பூதங்க டரித்தென்றும் வாசஞ்செய் திடுமோ
வெங்கு நான்முக னென்னையோர் நாட்டமுற் றவராய். 8

எங்கி யம்புமட் சரமதை யடுத்துநிற் பாரோ
பொங்க மாயடங் கியபுலன் மனமுட னறிவைத்
தங்கப் பெற்றுமேளா ருந்தவ மாகக்கொள் வாரோ
பங்க மில்லது முசுரமும பகரவொண் ணாதும். 9

கன்னிற் காணவுங் காதினுல் வினவவு மாகா
நன்று முஞ்சுவை யுருவொலி பரிசநாற் றமதென்
றெண்ணி லசுகண மற்றது யாமெதோ வென்றுந்
திண்ண மாயெதிற் சிருட்டியா திகள்செனித் திடுமோ.

வேறு.

எத்த லத்தினி னிலைக்குமோ வதனினின் றிலங்கும்
ப்ரா ணனுங்கூட, வொத்த பானச மானவு தானவி யா
னமு முயலுங்கா, ணத்தை யேமறித் தடையுஞ்ச மான
வி யானங்க ணடுவாக, வுந்தி யாய்ப்பிரா ணனுமபா
னனுஞ்சரித் துலவிடு மவையோய்ந்தால். 11

அடைச மானவி யானமு மடங்கும புானபிர
ணன்க, ளிடையு தானனும் வியாபித்து நிற்கின்ற விவற்
றினுற் றுயில்வோனே, நடைசெய் பிராணன பானன்
இடையோடுவ திலேப்பிரா ணனோநன்று, யடநன் ருள்வு
தா லதனையு தானமென் றறைகுவ ரதுகொண்டே. 12

வேறு.

நானெனுமப் பொருளிடத்தே நாட்டங்கொ டவ மு முண்டா மெனவே பிர்ம, வூனமில்லா திகடுணிவா ரொன்றை யொன்று கலந்துடலி னூர்ந்து செல்லுந், தீனமுறு மவைகட்கு வைசுவா நராக்கினியேழ் திறங்க ளாகு, மீனமுறு நாநாசி கண்செவிதோன் மனம்புத்தி யிவைக ளாமே. 13

நாசிநா விழிதுவக்குச செவிமனம்புத் தியுமென வே நவிலிவ் வேழு, மாசிலா வைசுவா நராக்கினியி னொளியுஞ்சிங் வைகளு மாகு, மாசையாய் மோத்தலுரை காணறொடல் வினவலைய மறித லென்னுங், காசுறுமா மிவையேழு நானெனுஞ்சீ வாக்கினிகருக கா ட மாமே. 14

முகர்புவனு முரைப்பவனுங் காண்பவனுந் தொடு பவனு மொழிகேட் போனு, மிகமைய முறுபவனு மறி புவனு மிவ்வெழுவர் ரித்விக் காவார், மிருபாக்கிய வதி சதா முகர்வதிலுஞ் சுவைத்தலினு மினிர்நோக் கத் தும், வகையாகத் தொடல்வினவல் சம்சயஞ்ச் சயங் களினு மான மாவார். 15

நாசிமுத லெழுகனலி னூற்றமுத லவிசுகளை நவிலே ழேதா, மோசையபி மானிகளா மோத்துருக்க ணன்றாக வோமஞ் செய்தே, பாசமுட னறிந்தவராய்த் தந்தம்யோ னியின்மீளப படைபபார் பூமீ, ரேசிலன லூனையொளி மனம்புத்தி யிவையெழுயோ னிகளே யென்ப. 16

ஏகுநில நீர்தீகால் வானமனம் புத்திகளேழு யாம் யோனி, யாகுதிக ளாங்குணங்க ளக்கினியா த்தகுண மதனைச் சாரும், வாகுடனே யகத்திருந்து தங்

தம்யோ னிகளில்வெளி வருவ தாகும், வேகமறு மொ டுக்கத்தி லகத்திலேயே யொடுக்கமுறும் விரிக்குங் காலே. 17

அங்குமணஞ் சுவைரூப பரிசமொலி யையநிட் டை யவையுண் டாகுந், தங்கிதனை யேழுவிதத் தோற் றமென நிச்சயித்துத் தக்கோ ரோர்வா, ரிங்கிநெறி யாலான்றோர் தேர்ந்தறியப் பட்டதுமுன் னியம்பு மூன்று, பங்குபூ ணுகுதியான் மூன்றுலகு மொளிமூட் டப் பட்ட தாமே. 18

பிரஹ்மகீதை,
முதலாவதத்தியாயம் முற்றிற்று.
ஆகச் செய்யுள் 146.

பிரஹ்மகீதை.
வாங்மனசயோகம்.

## இரண்டாவதத்தியாயம்.

இனியதச களத்திரவி தானமுந்தா னெவ்விதமோ வினிய தோர்வாய், நனிபாவா யிதிலுமிந்தப் பழங்க தைகே ளெனமறைபோ னவில்வ தானுன், றுனியறி யுஞ் செவிமெய்கண் நாநாசி வாய்கால்க டொழிற்செய் பாணி, யுனுகின்ற குறிகுதமா மீரைந்து மோர்வகை யோத் துருக்க ளாமே. 1

வேறு.

பகரும் மொலியும் பரிசம் வடிவம்
முகரும் மணமுஞ் சுவையும் மொழியும்
நிகழ்செய் கைநிடே தம்விசர்க் கநடை
யகல்பத் திவையா குதியா குமரோ. 2

வேறு.

ஆசைமா ருதமிரவி மதிபூமி யனலிந்த்ர னயன்மா லோடு, பாசிலா மித்திரனு மீரைந்து மக்கினியா மழ கார் பாவாய், விசுபுலனீரைந்து மோத்துருக்கள் விட யமா மிவைவி ரைந்தும், தேசாருஞ் சமித்துமா குதி யாத்தி யொருபதினுஞ் செய்வ வோமம். 3

சித்தநெய் விடுகருவி யறிபவெலாம் வித்துமுமாஞ் செறியு ஞானஞ், சுத்தமுமுந் தமமாகுந் தனித்தனியா யுறையுமிவை தோய்ந்தே யாவு, மித்தலமா யுதித்த தெனக் கேள்வியினி யறியப்பட டவைக ளியாவுஞ், சித் தமே வறிவோபார்ப் பதுவாகு மறிபவனே திரள்சுக் லத்தின். 4

திரிபாகுந் தூலத்தைத் தொடர்ந்துநின்று வருஞ் சூக்ம தேகங் கொள்ளும், விரியும்விஞ் ஞானன்மா வாகுவான் பினுமந்த விஞ்ஞா னன்மா, வரியகா ருக பத்திய மென்கின்ற வனலாவ னதனி னின்றும், பிரி வாகு மாகவநீ யமுமதிலே யாகுதிகள் பெட்போ டுய்ப் பார். 5

அதினின்று மறையுதித்த தைமனது சூழ்ந்து நின்ற ததன்பின் னுகப், பதியாக நிறமினுருந் தோன் றியதம் மனஞ்சேர்ந்து பாறு நீங்கி, மதிவிளங்கும் பா ர்ப்பனியும் வினவுவான் மனதினு னினைந்தே வாக்கி யம், விதிமொழிவ தாயிருக்க முன்பேயுண் டானதே வன் வேதந் தானே. 6

எதனுவிம் மனப்பிறக்குண் டாயிற்றெவ் விஞ்ஞான வெழில்யோ கத்தாற், றிதமதியுஞ் சித்தமதை நாடுதன் மேற் செலுத்திடப தெரியா தாகு, மதிகமா யாதித னைத் தீங்குறச்செய் குவதெனவர் தணனுஞ் சொல்

வா, னதிபதியா யபான னந்தப் பிராணகதி யபானத்
திற் கடங்கச் செய்வான். 7

நீக்குமிதை மனோவிருத்தி யென்பவதான் மனது
மபேட் சித்தே நிற்ப, வாக்குமன விடயமதாய்க் கேட்
கின்று யதனாலும் மனம்வாக் கிற்கே, யூக்கமாய் நடந்த
தொரு சம்வாதந் தனையிப்போ துனக்குச் சொல்வேன்
வாக்குமன மெனுமிரண்டும் விச்சுவரு பனையடைந்து
வழுத்து மாலோ. 8

வேறு.

எங்களி லுயர்ந்து ளோனைக் கூறியே யெங்க
ளைய, மிங்கறுத் தருளு மென்றே யியம்பின பகவா
னப்போ, துங்களின் மனந்தா னென்றே யுரைத்தன
னவனை நோக்கி, யிங்குவாக் குமக்கு நானே யெண்
ணிய யாவு மீயும். 9

வனக்காம தேனு வாகும் வாணிநா னெனவே
வேதா, வெனக்குறு தாவ ரஞ்சங் கமமென மனமி
ரண்டா, முனப்படு மவற்றி னிற்று வரமென தருகி
லுள்ள, தனைத்துசங் கமமோ வுன்ற னிடத்தினி லுள
வா மன்றே. 10

மந்திர மாக வேனும் வன்னத்தா லாக வேனுந்
தந்திர சுரமா யேனுந் தன்விட யத்தை யாது
சந்தமா யடையச் செய்யு மம்மனஞ் சங்க மந்தா
னந்தமா மதனை னீயு முயர்ந்தவ ளாகின் றுயே. 11

வேறு.

எதனாற் றானே தேனுவென வந்துன் மாற்ற
மெழுந்ததுவோ, வதனாற் சுவாச முதைந்தபின ரறை
வேன் வாணி யனவரத, மி[illegible]ார் வாணி பிராணுபா

னங்க ளிடையே யுள்ளவடா, னிதனுற் பிராண னின்றி வலி யபானங் கொண்டே யெழுபவளாய். 12

## வேறு.

பகவனே பகர்வீ ரென்று பிரசாபா லகனைச் சார்ந்தா, டகைமையோ டெனவ் வாக்கைத் தான் குதா கலிக்கச் செய்து, மிகவளி வெளியே போந்து மேன்மூச்சு வீசுங் காலே, யிகல்வாக்கு வசித்தி ருத்த லெங்குமே யில்லை யென்றும். 13

வாக்குக்கோ டினிநிர்க் கோடி யெனவரு முயற்சி யோடு, மாக்குக்கோ டினியி லும்நிர்க் கோடியே யதிக மாகு, மூக்கமாய் முதலி லுள்ள துயர்ந்ததா யாவை யொத்து, மேக்கமி லறமர்த் தம்மின் பெனுஞ்சுவை யவற்றை யீயும். 14

ஏகமாம் பொருளை யோதுந் தன்மையா யென்று முள்ள, வோகையா முத்தியின்பு முதவுவ திவ்யத் தோடு, வாகிலா வதிவ்யத் தாலும் வாக்கது தேனு வாகு,மாகவிவ் வணம்ப யன்க ளற்பமா யீயுந் தானே. ()

ஈதினுன் மனம்வாக் கிற்கு மேற்றத்தாழ் வறிவா யென்றே, யேதுடன் கூறப பன்னி யிதன்வகை யியம்பு கென்ன, வோதுறும் விருப்பா லேவப் பட்டதோர் வாணி வார்த்தை, யாதுமில் லாதிருக்க வேன்முன மொழிய வில்லை. 16

உரைப்பனந் தணனெவ் வாக்குப் பிராணனு லுடலி லுண்டாய்ச், சரிப்புறு மதனைப் போக்கி யபான னைச் சார்வ தாமோ, வுரப்புட னதுவு தான மாகியே யுடலை நீத்து, நிரப்புறியா னத்தின் கூட்டால் விண்ணெலா நிறைந்து நிற்கும். 17

பின்னரிவ் வுடல்ச மானத் தினிலினி பெறுவ தாகு, முன்னுதன் மையினில் வாக்கு மூதன்முதன் மொழிமொ ழிந்த, தன்னதான் மானதந்தா வாமாதற் பற்றி மேலா, மின்னணம் வாணி யுஞ்சங் கமமாதற் பற்றி யேற்றம். 18

பிரஹ்மகீதை,
இரண்டாவதத்தியாயம் முற்றிற்று.
ஆகச்செய்யுள் 164.

---

பிரஹ்மகீதை.
விருத்தியோகம்
## மூன்றாவதத்தியாயம்.

மிருபாக்ய வதிசப்த களத்திரவி தானமெனவிள ம்பு மீதிற், றகுதியாம் பழங்கதையொன் றுதகரிப்பே ஞசிவிழி தணிநா காது, நகுமனம்புத் திபுமென்வே ழோத்துருக்கள் வெவ்வேறாய் நாடி நிற்பார், பகுசூக்ம வெளியிருப்பா ரவரொருவ ரொருவரைத்தாம் பார்ப்ப தில்லை. 1

இவ்வெழுவ ரியற்கையிலோத் துருக்களா யறி யெனப்பார்ப் பணியீ தோது, மிவ்வெழுவர் சூக்மவெளி யிருந்துமொரு வரையொருவ ரறியா தென்னே, வெவ் வியற்கை யுடையரவ ரிசையுமென விளம்பு மியம் பும் பண்பைச், செவ்வனே யறிகின்ற சிறப்பறிவின் மையின்குறைவே தேர்ந்தி டாயே. 2

குணமறிதற் சிறப்பறிவா மவையொன்றின் குண மற்றொன் றுணரா நாவு, மணிவிழியுஞ் செவிசருமமனம்புத்தி யிவைகண்மண முணரா நாசி, மண முணரு மிவ்வகையோ ரோர்புலனு மாகுமென மதித்

பாவாய், தணிவிலாப் புலன்களுக்கு மனதிற்கு நடந்திடு மோர் சம்வா தத்தை. 3

இதனிடையோர பழங்கதையா யிசைத்திடுவன் மணமிப்பு மெழுநா னின்றி, விதிநாசி முகராது நாசி ரதமறியாது விழிரு போரா, தெதிர்துவகரும் பரிச மறி யாதெனவிட் டிச்செவிபு மிசையோ ராது, சதுரு டனும் சருவவிந் தியங்களுக்கு மெப்போதுந் தலைவ னுவேன். 4

என்னினீத் திடும்புலன்க ளெப்போதும் பாழ்த் தனிலி னியல்லை யொகரு, முன்னொளிபோந் தீப்போ லும் விகசியா வெனையன்றி முயன்று நிற்கும், பன்னு புலன் களினுலும் பசியவிற கினிற்றீப்போற் பார்க்கி னெல்லா, மன்னுயிருங் குணப்பொருளை யறிவுறு வென பபுலன்கண் மறித்துக் கூறும். 5

எமதுவிட யங்களாம் போகநல மெமையின்றி யேற்பீ ராகி, லமையுமுண் மையதாக யாமடங்கிற் கிள ர்ச்சியின்ப மடைவீர் கொல்லோ, விமையளவு போ தும்யா மொழிநதபினும் விடயத்தி லிருக்கும் போது, முமதுசங் கற்பமதாற் போகமெலாந் துய்த்தாலீ துண் மை யாமே. 6

எப்போது மெம்மாற்காண் பனவுனக்குக் கிடை த்திடவே யெண்ணு வாயே, லப்போது நாசியினு லுரு வமறி யின்சுவைகண் ணதனுற் காண்பாய், தப்பாமற் செவிகளான் மணங்கவர்வாய் பரிசமதைத் தாலு வாற் காண், டுமருஞ் சருமத்தா லொலியுணர்வாய் புத்தி யினுற் றுக்கை யோர்வாய். 7

மற்றுந்தூர்ப் பலர்களா மெங்கண்முறை வலியோடு வசமா காது, பற்றியொரு வருமுன்கொள் ளாதபோ

கங்களை நீ பற்று வாயோ, வெற்றைக்கு மெமதெச்சி விடவுண்ணத் தகுந்தவனீ யெவிதஞ் சிட, னற்றகுர வனைநாடி யவனுபதே சப்படியந் நெறிநிற் பாயே. 8

அவ்வண்ண மெங்களாற் காட்டும்விட யங்கணெறி யடைப்பாய் நாடி, யவ்வண்ணஞ் சொப்பனசாக் கரத்திலு ஞ்சென் றனவும்வரு வனவு மாய, வவ்விடயம் யாங் காட்ட வறிகின்றாய் மனமிலா தனவு மற்பங், கவ்வுமன முள்ளனவு மாமுயிர்க ளெங்கள்விட யமதாங் கன்மம். 9

பயிலுதலா லுயிர்த்திருக்கும் பல்விதஞ்சங் கற் பித்துங் கனவைப் பார்த்து, மயிற்பசியி னுல்வருந்து பவனுகி விடயங்க ளாராய்ந் தோடி, வியசனமாய் நித் தியமும் வகையின்மனை புகுந்துவிட யத்தா னைந்திங், தியல்பாய்ச்சங் கற்பம்விதித் துயிர்குறைந்த போது பற்றி யெரியுந் தீயும். 10

இந்தனங்கள் குறையவணை வதுபோலோய்ந் திடுவனெங்கட் குணத்தி னெங்கட், கந்தமதாய் நினைந் தவண மடைதலுள வேண்டியதோ ரளவுமொன்றை, குந்தகமாய் வேறொன்றின் குணமறிந்து கொள்வதிலை யாங்க ளின்றிச், சந்ததநீ யறிவதிலை யுனையன்றிச் சந் தோடந் தானு மில்லை. 11

பிரஹ்மகீதை
மூன்றாவதத்தியாயம் முற்றிற்று.
ஆகச்செய்யுள் 175.

---

பிரஹ்மகீதை.
பிரசன்னவிர்த்தியோகம்.
## நான்காவதத்தியாயம்.

பகர்வான்[illegible] மிகுயாதிய வதிபஞ்ச வோத் ருக்கள் பயில்செய்கை[illegible]கலாத விதமதனி யிஃ

தோர்ப ழங்கதையை யறைவன்பி ராணன்முதலாங்,
தகுமைவ் ரோத்ருவென வறிவோர் நினைப்பரெனச்
சதிவினவி முதலிலடியாட், ககலாத போதனையி லெழு
வோத்து ருக்களென லைந்தான தெவிதமவர்கள். 1

உன்னதம தாநிலையை யருள்வா யெனப்பிராண
ணாற்சேர்க்கை யுறுமுறையும், பின்னருமபானமா
மீளவும பானனாற் சேர்த்தகாற் பினும்வியானமா, முன்
னரும்வி யானனாற் சேர்க்கையுறு காற்பின் னுதானன
வுதானத்தினான், மன்னவே சேர்த்தலுறு காற்பின் ச
மானமென வதியுஞ்சௌ பாக்கியவதியே. 2

இன்னணமி ருந்தவர்முன் முதலிற்ச னித்தவிதி
யினைநோக்கி யெமருளுயர்வா, மன்னவனை யோதிடுதி
யவனெங்க ளுக்குமுத லாவா னெனக்கழறலு, முன்
னும்பி ராணிகளி னுடலிற்பி ராணனவை யெதுவோய
வோய்தலுறுமோ, பன்னுமெது சாரிவரின் மீளவுமு
லாவுமது மேலென வயன்பகரலும். 3

நானொடுங் கிற்சீவர் பிராணங்க லோய்வடையு
மாலுலா விடினுலாவும், யான்முதல்வ னாகையா லோய்ந்
தனெனைக்கா ணெனப்பிரா ணனுமோய்ந்தனன்,ருன்
மீட்டுலாவினன் சமானமு முதானமுந் தக்கமறு மொ
ழியுகலுமா, லேனுங்க ளெவ்வித மிருந்திடுவ தவிதநீ
யாவுமிதி னிறைபவனலை. 4

அதனாற்பி ராணனே நீயெங்க ளுட்சிறந் தவனல
வபானமலவோ, யதிகமா யுள்ளசம தாகுமென மீளப்
பிராணனுமு[illegible]வவதனை, மதிய[illegible] பா[illegible]முங் கூறுநா
ஞெய்ந்திடின் [illegible]ன் னுயிர்ப் பிரா[illegible]வையுங், கதி
யின்றி வோய்வ[illegible]யு ந[illegible]லா [illegible]மீளக் கதியோ
டுலாவுமதனால். 5

இறைவனு னேய்வதைக் காணென வியானனு முதானனு மியம்புமிதனை, யுறைவுறு மபானனீ யாவர்க் கு முதல்வனல பிராணனே யுன்வச முளோன், முறை யென வபானமு முலாவினவி யானனு முதல்வன் யான் யாவர்க்குமே, மறைவிலா வேதுயா தெனிறு றொடிங்கிடின் மன்னுயிர்ப் பிராணனெவையும். 6

அடங்குவன நானுலா விடின்மீட் டுலாவுவன வது பற்றி யான்முதல்வனு, மொடுங்கினேன் காணெனப் பின்வியான னேய்ந்தனன் மீளவும் மேலோங்கின, னடங்காப்பி ராணனு மபானனுமு தானன்ச மானனுமி தறையுமெமருண், மடங்கும்வி யானனீ யிறையல சமானனே வசமா முனக்கெனலுமே. 7

மீளவும்வி யானனுமு லாவச் சமானனும் விளித் தோது நானெலார்க்கு, நீளச்சி றந்திடுவன் யாதுகா ரணமெனி னிகழ்த்திடுவ னுனேய்ந்திடி, லோளிப்பி ராணிகளி னுடலிற்பி ராணனவை யோயுநான் மீட்டு லவ்வே, தாளொடு வுலாவுவன நானேய் வதைக்கா ணெனச்சமா னனுமோய்ந்தனன். 8

பின்புதா னன்பகரு நானெலார்க் கும்முயர்வு பெற்றுளே னேதேதெனில், வன்புசெய் நானேய்ந்தி டிற்பிராணி பிராணன்கள் வலிவாடு நானுலாவின், மன் போடு லாவுவன நானேய்ந்த னன்னென மறித்துமே தானுலவவே, யின்புடன் பிராணனு மபானன்ச மான னும் வியானனுமி யம்பிடுமரோ. 9

உதானனீ யெங்களுள் ளுயர்வலன் வ்யானனே யுன்வசமு ளோனென்னவே, பிதாமக னீரெலாம் பெருமையீர் யாவரும் பெருமையில ரேனென்றிடிற், ச்தாவொருவ ரோடொருவ ரொத்துப்பி ழைப்பவர்க

டந்தம்விட யத்திறலையா, நிதானமா யோர்விரேன வல
ரைப்ர சாபதியு நேர்நோக்கி யிஃதுரைசெயும். 10

வாருட னெனக்குள்ள வாத்துமா வொருவன்
வெகு வகைவிரியு மவனேநிர, மாகிடி லொருவனு
மஃதன்றி யத்திரம தாம்போது மேன்மையாகப், பாக
மா யைந்தென் பிராணன்க ளென்னப் பகர்ந்திடப் படுவ
னதனாற், சேகின்றி நீவிரொரு வரையொருவ ரன்ப
ராய்ச் சேர்ந்துசுக முடன்வாழ்கவே. 11

பிரஹ்மகீதை.
நான்காமத்தியாய முற்றிற்று.
ஆகச் செய்யுள் 186.

---

பிரஹ்மகீதை.

சித்தியோகம்.

## ஐந்தாவதத்தியாயம்.

மன்னுநா ரதர்க்குந் தேவ மதமுனி வருக்கு நேர்
ந்த, பன்னுசம் வாத மீதிற் பழங்கதை யாகச் சொல்
வான்,றுன்னுமை வகையாங் காற்றிற் றோன்றிய தெது
முன் சொல்வீ, ரென்னநா ரதருந் தேவ மதமுனிக்
கியம்பு வாரே. 1

எதனைவிவ் வைந்துண் டாக்கப் பட்டவோ வவற்
றின் வேறென், றதுமுனே யஃத டைந்து நிற்கின்ற
ததுவே யிந்த, விதப்பிரா ணனினி ரட்டை மேவியே
மேலுங் கீழு, மதிநடு விலுமி ருக்கு மெனத்தேவ
மதருங் கேட்பார். 2

இந்தவைந் தெதனுல் வந்த விவற்றின்வே றொ
ன்று முன்பே, யந்தமா யஃத டைந்து நிற்பது மேல்
கீழ் மத்தியந், தொந்தமா யுளதோ பிராணன்

கவினிரட் டையுஞ்சொல் லென்னப், பந்தமில் விதி
யின் கூறு பகருஞ்சங் கற்பத் தாலும். 3

சத்தத்தி னாலு முண்டாஞ் சந்தோட மிரதத்
தானு, மொத்திடு முருவத் தாலு முண்டாஞ்சோ
ணிதங் கலந்த, தத்துசுக் கிலத்தி னின்று முதற்பிரா
ணன்று னுண்டாஞ், சுத்தமாம் பிராண னாற்சுக் கில
மாறி யதன்பின் னாலே. 4

விதித்திடு மபான முண்டா மிருசுக்லம் ரசமி
ரண்டி, னுதித்திடு முபய நாப்ப னுள்ளதோ ரானந்
தந்தான், கதித்திடு முதான மாகுங் காமத்தாற் சுக்கில
முண்டாம், பொதித்தசுக் கிலத்தி னின்றும் ரசசுண்
டாம் பொதுவ தாகி. 5

வேறு.

வோதுசுக்ல சோணிதமுஞ் சமானவியா னன்
றன்னு லுதித்த தாகு, நீதியாப் பிராணபானம் மிரண்டு
மேல்கீழு நிற்ப தாகு, மீதலாற் சமானவியா னனுமி
டையே செல்வனவா யிசைப்ப தாகுந், திதிற்றீ தேவ
ரெலா மாவனென விசன்சா சனமே செப்பும். 6

இப்புத்தி யுடனிருக்கு மெழிற்சத்வ வறிவுவே
தியர்க்குண் டாகு, தப்பிலொளி யுறுமதற்குப் புகை
தமோ குணவடிவா மிரசசோ சாம்பர், செப்புமதிலெ
வையவிசாச் சேர்ப்பனவோ வவைவெல்லா மதனி னின்
று, மெய்ப்படிமீட் டுறபவிக்குஞ் சத்துவத்திற் சமா
னவியா னமுமுண் டாகும். 7

எனயக்ய வித்துக்க ளிவையறிவார் பிராணபா
னமுமாச் யங்க, ளுனுமவற்றி னடுவுதா சனனிருப்ப
னிஃதுதா னத்தின்ருப, மௌனமறையோ ரறிவரிது

6

துவந்துவங்க ளிகந்ததென்ப விதைநீ கேளா, யினும் பகலு மிரவும்மோர் துவந்துவமு தாசனனீ திடையி லுள்ளோன். 8

இதையுமுதா னத்தினுய ருருவாக வந்தணர்க ளினிதி னோர்வார், விதிசத்து மசத்துமா மிரண்டினடு தாசனனு மேவா நிற்கு, மதனையுதா னத்துயர்ந்த வுரு வாக வந்தணர்க ளறிவார் மேலே, பதிவாஞ்ச மான வியா னமும்வியான னுற்கருமம் பகுப்ப தாமே. 9

நேருமூன் றுவதாந் தேயுசமா னனைப்பற்றி நிலை த்த தாகுஞ், சீருடனோய் வதற்காக வியானசமா னங் களையுஞ் சோர்ந்தொன் றுக்கிப், பேராகு மாநந்த வடி வுடனே யெப்போதும் பிறங்கும் பிர்ம்ம, மோரிதுவே தானத்தி னுயர்ந்தவுரு வெனமறையோ ரோர்வரன்றே.

பிரஹ்மகீதை

ஐந்தாவதத்தியாய முற்றிற்று.

ஆகச்செய்யுள் 196.

பிரஹ்மகீதை.

அதியஞ்ஞயோகம்.

## ஆறுவதத்தியாயம்.

அவ்வியமி லந்தணனு மிதிற்சாதுர் கோத்திரவி தான மாவ, தெவ்விதமோ வதனிலுமிப் பழங்கதை யை யினிதுரைப்பான் முறையா யெல்லா, மொவ்வ மொழிந் திடுமிந்த வற்புதமா மந்தணநா னுரைப்பன் கேளாய், கவ்வுகர ணங்கன்மங் கர்த்தாவோ டபவர்க் கங் களையிந் நான்கும். 1

ஆதாரவ் மோத்துருக்க ளிவர்களா லகிலமெலா மடர்வ தாகு, மேதுவின்சா தனங்களையு மியும்புவன் கே ளிணங்குழக் கெழிளுக் கண்க, ளீதலாற் றுவக் கோடு செவிமனம்புத் திகளேழுங் காண வேதாங், காதன்மண முருசியுருப் பரிசமொலி யெணலறிதல் கரும வேதாம். 2

முகாலுணல் காண்டறுடல் கேட்டலெண லறித லா முதலேழ் பேரும், பகர்தருவே துக்களா யறிவதற் குத் தருவரிவ பண்பி ேனாடு, மகலாது நலந்தீது மாகி யத்தங் குணங்களனு பவிப்ப தாகு, நிகரிறு னொ னும்பொருளோ நிர்க்குணமு நித்தியமு மெனவு னேர்ந்தே. 3

இவ்வேழு மறிவதுவே மோக்கவே துக்களிந்த விதியே தத்தஞ், செவ்வியதோ ரிடமதனை வறிந்த வறி வுடையோர்க ளேவ ராகித், திவ்வியமா மென்றுமா குதிக ளுண்பார் தெரியாதோ னனமுண் பாறு,யவ்விய மாய்த் தனக்கெனவே வனஞ்சமைக்க நாடுபவ னடை வன் ருழ்வே. 4

உண்ணலா காதவையும் பருகலா காதவையு முட் கொள் வோனை, யண்ணுதலோ டவையவனை யழிக் கின்ற வவனனத்தை யழியா நிற்பான், றிண்ணமா யறிந்தவனே வழித்தாலுந் திரும்பவுமீ சுரனே யாகி, நண்ணவதைப் படைப்பனனத் தாலாம்வி காரமற்ப நண்ணு தாமே. 5

மனம்வாக்குச் செவிவிழிக டுவக்குவள நாசி கட்டு வகுப்ப தாகு, வுனலுரைத்தல் வினவல்காண் குதல்பரிசித் திடன்முகர்த லுளவாம் யாவு, மன

துடன்சே ரிவையெல்லா மெங்குமடக் கிடப்பட்டா குதிக ளாகு, முனுமெனதுள் ளூடனூரதுங் குணமு ளது மாமறிவே முளரி யாகும். 6

அரையுமங்கே பிராணனெனும் தோத்திரமு முடையதுவ பான மென்னு, மிரைசஸ்திர முடையது மெ லாந்துறத்த லெனுங்காணிக் கையுமுண் டந்தப், புரையிலறி வெனுமனலைத் தூண்டிடுமா ரம்பமதாம் பொருவி லாத, நிரையோக யாகமென்ப தெனக்கு நடக் கின்றதின்னு நிகழ்த்தக் கேளாய். 7

பெறலரிய புந்தியே கர்த்தாவு மனுமந்தா பிரமா வாயு, முறைகின்ற வோதாவத் வாயுவுமுத் காதாப்ர சாஸ்தா வாவன், கறவாம ளுளதுசஸ் திரந் துறத்த லிதற்குக்கா ணிக்கை யாகு, நிறமருவும் பசக்கனு ராயணனேயெனுந் தேவ னிமித்த மென்றே.

முன்பவற்றைப் பெற்றார்நா ராயணனை யறியுமவர் மொழியு மீதிற், சம்பிரமமாய் முதலிரண்டா மறைக ளையுஞ் சாற்றிடுவர் சாம கான, மின்பொடியற் றிடுவ ரென வதிலதிக திட்டாந்த மிசைப்பார் சர்வ, வன்பு சார் வடிவினனு ராயணனே யவ்வக்னி யறிவாய் நீயே.

பிரஹ்மகீதை

ஆருவதத்தியாயம் முற்றிற்று.

ஆக்ச்செய்யுள் 205.

அந்தர்யாமியியல்.

## ஏழாவதத்தியாயம்.

ஓதும் மறையோன் சாஸ்தா வொருவ னிரண்டோ வின்று, மீதி லெவன்ற னுள்ளு மிருப்ப னவனே சாஸ்தா, மேதை யவனு லேவ மேட்டி னின்று நீர்போற், றீதின் றிச்செல் கின்றேன் சிறந்த குருவு மொன்றே.

நடத்துங் குருவு மிரண்டோ விலைநா டெவன்ற னுளத்திற், கிடக்கின் றனனே யவனைக் கிளத்து கின்றேன் குருவா, படக்குங் குருபோ தனையை யரவ மெல்லாங் கேட்டும், படாந்த வுலகி லென்றும் பகையுள் ளனவா யினவே. 2

உறவு மொருவனவனி லிரண்டா முறவிங் கில்லை, யுறையு முளத்தி லுளனே யவனே யொக்க லென்பேன், றிறமா ரந்த வுறவாற் செலுத்து பவரா யுறவாய், விறலார் வானின் முனிவர் களுமாய் விளங்கா நிற்பார். 3

வினவு வோனும் மொருவ னவனில் வேறிங் கில்லை, துனையு முளத்தி லுளனே யவன்கேட் பவனுய்ச் சொல்வே, னினிய வந்த குருவி னிடமே தங்கி யிந்திரன், பினையெவ் வுலகும் பரக்கு மிறையாந் தலைமை பெற்றான். 4

பகையோ னொருவ னவனிற் பகைப்போன் வேறிங் கில்லை, யிகழா துளத்தி லுளனே யவனே பகைவ னென்பேன், பகையிற் குருவா லேவப் பட்டும் பகைமை யில்லா, மகலா துலகி லென்று மாறு பகைய வாகும்.

பதுமா சனன்பாற் றேவர் பனகர் முனிவர் பெற்ற
விதமா ஞானந் தனையு மிதிலோர் பழைய கதையாய்
விதியாய்ச் சொல்வான் றேவர் விளங்கு முனிவர் நாகர்
வதிபு மசுரர் யாரும் வழிபா டியற்றி விதியை. 6

நலமுள் ளதையிங் கருள்வீ ரெனவே நவில விதியு, முலகிற் கீர்த்தி வினவு மவர்க்கோ மெனுமோ ரெழுத்தாந், தலைசேர் பிரமந் தன்னைத் தான்போ தித்தானிதனை, நிலையாய்க் கேட்டோர் பற்பன் னெறிகைக் கொண்டு சென்றார். 7

வேறு.

ஞானபோ தகத்தை யிவ்வா றனேகவிதங் கொடு சென்றார் களினு கர்க்கோ,வினமாங் கறித்தலிலேகருத் துதித்த தசுரருக்கோ வியற்கை யாலுண், டானதம்பத் திற்கருத்துந் தேவரெலாந் தானமென வறுதி யிட்டார், ரூனமிலா விருடிகளோ தவமெனக்கொண் டனரிவித மோரா சானே. 8

அடைந்தவரா யொருமொழியா லனுக்கிரகம் பெற்றவர்க ளாகிப் பற்பற்,றிடங்கொளிவர் நாகர்சுரா ரிருடிகளுந் திறன்மிகுந்த வசுர ராவா, ருடனிவனுங் கூறுவதைக் கேட்கின்று னவ்வாறே யுட்கொள் கின்று, னுடைவாகக் கேட்பதற்குச சிறந்தகுரு வாத்மாவுக் கவனின் வேறில். 9

அவ்வான்மா வனுமதியா லிவனிடம்பின் வினைகளுண்டா மாகை யாற்றன், செவ்வியவுள் ளத்திருக்குமான்மாவே குருசீடன் சோரர் கேளா, யிவ்வுலகிற் றீமையைக்கொண் டொழுகுமவன் றீவினையோ னெனவே யாவ, னவ்வியமி னன்மையைக்கொண் டொழுகுநல்வினையோ னாகின் றனே. 10

காமத்தா லெவன்புலன்கள் கவலுறுமோ வவன்
காம சாரி யாவான், சேமத்தா லெவன்புலனைச் செயித்
தவனே வவன்பிரம சாரி தேர்ந்த, நேமநிய மங்களாம்
வினைநீத்துப் பிரமமாய் நிலைத்தோ னாகிப், பூமியிற்
சஞ் சரிப்பவனே பிரமசா ரியனென்று புகல்வ தாமே

அவன்றனக்குப் பிரமமே யாணியனல் விறகுகன்ம
மருளு மாசா, னவன்சதா பிரமத்தி னிலைத்தவனில்
விதஞ்சூக்கும மாகி யுள்ளத், தவறிலாப் பிரமசா ரியமிது
வே யெனச்சேத்தி ரஞ்ஞன் றன்னு, லிவண்போத முற்
றவரா யறிந்துபின ரதன்வழியே யிருப்பர் தாமே. 12

பிரஹ்மகீதை

ஏழாவதத்தியாயம் முற்றிற்று.

ஆகச் செய்யுள் 217.

பிரஹ்மகீதை.

அந்தர்வனோபதேசயோகம்.

## எட்டாவதத்தியாயம்.

ஓதுவன் மறையோன் சங்கற்ப மெனுங்காட் டிடக்
களுங் கொசுக்களு முளவு; மீதலா வின்ப துன்பெனு
மிமமு மியங்கிடா தபம்பொருந் தியது, மோதுறு
மயக்க மெனுமகா விருண்மூ டலுமவா வழலெனும்
பணிக, ளோதையோ டென்றுஞ் சூழ்வதும் விடய
மென்னுமோ ரடிநெறி யுளதும். 1

ஆசையுஞ் சினமும் புதர்களா யமைந்த வப்பெ
ருந் துர்க்கத்தைக் கடந்தே,யேசிலாச் சிறந்த விவ்வன
மடைந்தே னென்னப்பார்ப் பனியுமீ தியம்பு, மாசிலா

வறிவோ யவ்வனமெங்கே மரங்களா றுகளெவை யதி லே, தேசுறு குன்று களுமெவை வனமுஞ் செய்மை யெத் துணையுள தெனவே. 2

அந்தண னறைவா னதனிலும் வேறொன் றருஞ் சுக மென்பதொன் றில்லைச், சந்தமா யதனிற் றுக்க ம்வே றொன்று தனித்துநிற் பதுவுமே யில்லை, நந்தி டா வதனிற் சிறியது மில்லை நவிலதின் பெரியது மில்லை, தொந்தமா யதனிற் சூக்மமு மில்லை யதற்கொ ப்பாஞ் சுகமும்வே றிலையே. 3

அதனுளே புகுந்து பார்ப்பவர் துன்ப மடை வரோ வின்பமு மடையா, ரிதுவலா லெவர்க்கு மஞ் சிடா ரவர்க ளிடஞ்சில ரஞ்சுவா ரந்த, மதுநிறை வனத் திற் பெருமர மேழு வளங்கனி யேழதி திகளேழ், வதியுமா சிரமஞ் சமாதிதீக் கைகளும் வகைக்கெழு விதமதாய் வயங்கும். 4

அவ்வன முற்றும் பரவிச்சின் மரங்க ளேவணமல ரொடு பலமுஞ், செவ்வனே யீயுஞ் சிலமர மிரண்டு வகையிலுந் தெருளின்ப முதவுந், திவ்விய நிறமா மல ர்கனி களையு மீவன வாச்செறிந் திடும்பி, னவ்வன மெ ங்கு மேசில மரங்க ளடர்ந்திரு வகைத்துங்கந் தம தாம். 5

மலரையுங் கனியை யுந்தரு வனவாய் வதிவனவக் கட முழுதுஞ், சிலதுரு மங்க ளோர்நிற முற்றுச் செவ் விய மணமுடை யனவா, மலர்தரு வீயுங் கனிகளும் வழங்கும் வளருமவ் வனமெலாஞ் சூழ்ந்து, விலகலாப் பெரிய விரண்டுபொ தபங்கள் வெகுவகை வெளிப்படா நிறங்கள். 6

பொருந்தியே மலருங் கனிகளு மென்றும் பொற்
புடன் படைப்பன வாங்கே, திருந்துநன் மனங்கொண்
முனிவர ரொருவன் றீயுமொன் றரசனைச் சார்ந்த,
வெரிந்திடை வகையாஞ் சமித்துக ளுளவா மவற்றி
னின்றேழுதிக் கைகளும், பரிந்தடை யேழு மோக்கமு
மேழு பண்புள பலமுமேழ் பயனை. 7

மாந்திடு மதிதி களும்பலிக் கின்றார் மாமுனி வர
ருமாங் காங்கே, போந்துவா தித்யம் பெறுகின்றார்
பெற்ற பேர்களாய்ப் புறம்புபோம் போது, நீந்துறு வனை
மும் வேறதாய் நிகழு மதுபிரஞ்ஞை பென்னுநீன் மர
மும், வீய்ந்திடா வேய்வா மென்னுநன் னிழலும்
வீடுபே றெனுமுயர் கனியும். 8

அறிவெனு நிலையு மாற்றலா மமுத மமைந்ததா
யகத்தினுள் ளிருக்கும், பிறிவிலாச் சேத்தி ரஞ்ஞனுங்
கதிரோன் பேரொளி கொண்டுநின் றிடுமால், குறி
செயல் வனமேற் கீழ்நடு முடிவு மிலையெனுங் கொள்
கையா மெந்த, வறிஞர்க ளறிவா ரோவவர்க் கச்ச மனு
குறு தப்பொழு தன்றே. 9

ஈன்றவர் பிரசை கட்குச்சத் தியமு மனித்திய
மெனுங்கொங்கை யிரண்டின், றேன்றமேவ சுரக்குந்
தூயபா லினைத்து மளித்துடன் விடுத்துநிற் பவரு, மா
ன்றதோ ரொளியை யுடையரு நாண முடையரா மடந்
தைய ரெழுவ,ரூன்றியங் கிருப்பார் வசிட்டனே முதலா
முயரிரு டியரெழு வர்களும். 10

சித்தர்க ளெழுவ ரவ்விடத் திருப்பார் யசன்வர்ச்
சன் பகன்சித்தன் விசயன், மொய்த்ததே சசுவா மிவ்
வெழு வொளியு முளரிநா யகனைச்சேர்ந் திருக்கும், பத்
தியா யங்கே குலமலை யேழு பருப்பத மேழ்பிர மத்

திற், சத்தியோ டெரித்த வினைகளாம் பாவை தனைவகித்
திடுஞ்சிறு வாறும். 11

தழங்குபே ராறு மேழுள வேதனைச் சார்ந்தவர்
தனிற்றிருப் தியதா, மொழுங்குடன் விதியை நெருங்
குகின் றனரோ வோதுமவ் வந்தரங் கமதாஞ், சழுங்க
லில் வேதி வெளியிலிவ் வாறு தாமென்று சேர்தலு
ழுளதா, மழுங்கியே யாசை நியமமா மாசை வளர்ந்
துமே தவத்திஞற் றீங்கை. 12

எரித்துநின் றவர்க ளுடலினுட் புகுந்து வினிய
சேத் திரஞ்ஞனும் விதியை, யருத்தியோ டுபாசிக் கின்
றனர் புத்தி கதிப்படி யவ்வனம் புகுந்தோன், றிருத்து
று தீர ஞவனு லிவ்வித் யாரண்யந் தெரிந்திடு வோர்க
ள், பரித்திடுஞ் சமர்த்தை யேயிங்குச் சிலாகிக் கின்ற
னர் பகருமிவ் வண்ணம். 13

வேறு.

எண்ணுந் தன்ம வனமிது வேயென
நண்ணு மந்தணர் நன்கறி கின்றனர்
திண்ண மாயொத் தறிசேத் திரஞ்ஞனு
னிண்ண யந்தெரிந் தவ்வழி நிற்பரால். 14

பிரஹ்மகீதை

எட்டாவதத்தியாயம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 231.

## கர்மயோகம்.

## ஒன்பதாவதத்தியாயம்.

சொல்லுவான் பிராமணன் சுகந்தநான் முகர்கிலன் சுவைகளே யறிந்திலன் சொருபமுந் தெரிந்தில, னுறல் லெனத் துவக்கையு மறிகிலனோசையு முணர்கிலே னெண்ணமுங் கொள்கில னியற்கையாய், மெல்லவே விரும்பிடும் பொருட்களை விரும்பிடும் வெறுத்திடத் தகுவதை வெறுக்கின்ற தியற்கையாய், நல்விருப் புடன்வெறுப் புமைந்துமெய் களினுளே நன்குபோய்ச் சுழன்றிடும் பிராணபா னனெனனவே. 1

மெய்யினும் மதனின்வே றுகவுள் ளவற்றையும் விளம்பவற் றிலும்மழித லில்லதோர் பொருளையு, மையமற்ற பூதவான்மா தன்னையுநேர் காண்பரா லவனிடத்தி லேநிலேத்த நான்விருப்பு டன்வெறுப், புய்வின் மூப் பிறப்பிவற்று லெவ்விதத்தும் பந்தம துறுதிருந்துளேனனுகு காமங்க ளனைத்தையும், வெய்ய தென்று காமியாது தோடமா மெவற்றையும் வெறுத்திடா தவனுமா யிருந்திடு மெனக்குமே. 2

ஒளிருமுண்ட கக்குழையி னிற்குநீர்த் துளிகளுக் கொக்கவே யியற்கைகளின் பற்றெனக்குண் டாகுமோ, தெளியுநித்ய னனவெற்கு யாவுநித்தி யங்களாஞ் செய் வினைக டம்மிற்காணப் படுமென் போக ராசியும், பளகிலாத பல்வித வியற்கை யாகி வெளியினிற் பரவுசூரியன்காங்க ளைப்போற் பற்று றுதமே, வளமுளத்து வர்யுவுக்குந் துறவிக்கு நிகழ்ந்தசம் வாதமாம் பழங்கதையை மாதுகே ளெனச்சொல்வான். 3

### வேறு.

இனியொரு துறவி சுகாதனந் தனில்வீற் றிருந்தவனுய்ப்பினோர் வேள்வி, தனிலிடும் பசுவைப் பார்த்திங்

திம்சை தானென விகழ்ந்துசாற் றுதலு, முனிவ
னுக் குத்து வர்யவும் விடையு மொழிவனிச் செந்துகே
டடையா, தினுமிந்தச் சீவப் பிராணியு நன்மை யெய்து
மென் றிருக்கியம் பிடுமால். 4

வழுத்துறு மிதற்குப் பிருதிவி யாக மண்ணினை
யடைந்திடும் புனலாற், செழித்திடு பாகம் புனலினிற்
சேருஞ் செப்பிதன் விழியிர வியையு, மழித்திடுஞ்
செவிய காயமுஞ் சுவர்க்க மதையுயி ரடைவவா கமத்
தின், வழிபடி யியற்று மெனக்கிதாற் றீங்கு வருவது
யாதுமிங் கில்லையால். 5

நீத்துமோ றுரைப்பா னுயிர்விடுந் தகர்க்கு நீநல
நினைப்பையே லதற்கே,யேத்திடும் யாக மியற்றுவ தாகு
மிதினுனக் கென்பய னுன்னைக்,காத்திடுந் தாய்தந் தைய
ரயினோன் றேழ மென்னவ ரதியராற் கருதிய, பாத்
தியமில்லாப் பரவச முளவிய பசுவையு மெனிவின
விடுவாய் 6

இன்னண மவர்க ளினைதயனு மதிப்பா ரோவென
வெளியறிந் திடுவாய், முன்னமே யவர்க ளனுமதி
வினவி முழுதுமாய்ந் தியற்றுதற் குரிய, தின்னமிப்
பசுவி னுவியு முன்னு வியமபுதந் தம்பிறப் பிடத்தின்,
மன்னுறச் சேர்க்கப் படுமசை வறுமெய் மாத்திர மிரு
ந்ததென் கொள்கை. 7

இந்தனம் போன்று சேதனை நீங்கு மிவ்வுடற் பற்
றியே கொலையிற்,பந்தமாய்ப் புகுவோர் தங்களுக் கெல்
லாம் பசுவெனும் பெயரொரு தறியாம், முந்தியெவ்
வுயிருங் கொலைசெயா தெல்லா வறங்கட்கு முதலென
மொழிவார், சிந்திக்கி லிம்சை யில்லதோர் கருமஞ்
செயத்தகு மெனநினைக் கின்றேன். 8

வதைத்தல் செய்யாமை வாய்மொழி மாத்ர மெனி னதன் வகையினி மொழிவே, னிதத்துட னீபல் வித மெக்காரியமு மிம்சையென் றிகழ்ந்திட லாகு, மதற்கு நாமிணக்க முறைசெய்வோம் பிரத்தி யக்கத்தி லனைத் துயிர் களையும், வதைத்திடா திருத்த லெங்களி லென் றும் வயங்கிடும் பரோபட்சமா யெதையும். 9

வதைசெயா மையைநாம் புகழ்கில மெனவத் வர் யுவும் வழுத்துவான் மண்ணின்,றுதைவுறு கந்த குண மனு பவிப்பீர் தூயநீர் விகாரமாஞ் சுவையை, யதிகமா யுண்பீ ரொளியினைச் சார்ந்த வனைத்துரு வங்களு மறி வீ,ருதைத்யுறும் வளியின் குணங்களைத் தொடுவீருறும் வெளி வருமொலி யுணர்வீர். 10

எண்ணுதன் மனத்தா லியற்றுவீ ரெல்லாப் பூதமு யிர்ப்பன வெனவு, மெண்ணுவீ ரன்றே வவற்றின துயிரா மிவற்றினைக் கொள்வதி னீரு, முண்மையா யொழிபு பெறவிலை யதனு லிம்சையே யுடையைநீ யிம்சை, நண்ணிலாக் கரும மில்லைவிப் பிரனே நவி லென யதியிதை நவில்வார். 11

இதுசர மெனவு மட்சர மெனவு மிருவித வாத் துமா தம்மு, ளிதமுறும் பாகு பாடுள வவற்றி லென் றுமுட் பொருளதட் சரமாம், மதிவலோ யென்று மில் லது சரமாம் வாக்குயிர் மனமனு பவமே, வதியிவை செய்கை யுடன்கலந் திருக்கில் வழுத்திடு மட்சர மாமே. 12

இவைகளால் விடுத லுடையனுப் தனித்தே யிச் சைக ளனைத்தையுநீத்துத்,தவவெலாப் பூதங்களினுமா சையினைத் தனதென லொழித்துவைம் பொறியைக், குவிவுற வடக்கிச் சமரச பாவங் கொண்டெங்கும் விடு

தலை யடைந்த, வவன்றனக் கெதிலு மச்சமே யில்லை யென்னவு மத்வர்யு மறைவான். 13

இலகுமிவ் வுலகிற் சத்வங்க ளுடனே யிருத்தலே யியற்றிடத் தகுங்காண், கலகமி லுன்மேற் கோபமும் வினவிக் கழறுமுன் வேதமே யெனக்கு, நலமெனத் தோன்று கின்றன நீமுன் னவிலும்போ தகவலி கொளு நான், குலவுமந் திரஞ்சொல் வணந்தவம் புரியு மெனக் கிலை குற்றமென் றிசைப்பேன். 14

இச்சமா தானத் தால்யதி யதன்மே லியம்பிடா தொழிந்தன னபயாற்,பொசசமி லத்து வர்யுவு நீங்கிப் பொருவின்மா வேள்வியைப புரிநதான், சொச்சமா மொழிபுஞ் சூக்கும மெனபபூ சுராறி கின்றன ரறிந்து, நிச்சயப பொருடேர் சேத்ரஞ்ஞ னேவ வதன்வழி யேகிலைத் திடுவார். 15

பிரஹ்மகீதை
ஒன்பதாவதத்தியாயம் முற்றிற்று.
ஆகச செய்யுள் 246.

பிரஹ்மகீதை.
நிவிர்த்தியோகம்.

## பத்தாவதத்தியாயம்.

வாரிதிக்குங் கார்த்தவீ ரியனுக்கு நடந்திடுசம் வாத மாகுஞ், சிரியதோர் பழங்கதையை யிதினுரைப் பான் வேதியனுந் திரைசூழ் பூமி, வீரியவில் லாலெவ ருல் வசமாக்கப பட்டதுமேவா விளம்பு மந்த,வீரைந்து நூறுகர கார்த்தவீ ரியனென்போ னிருந்தான் மாதோ.

அவனொருகால் வல்லமையான் மதர்த்துவரி யருகினிற்சஞ் சரிக்கும் போது, கவனமாய்க் கடலதனிற்

கடுஞ்சரங்கள் கடத்தினனென் றெமக்குக் கேள்வி, தவ
னமாய்ச் சாகரமு மஞ்சலிசெய் தவன்றனக்குச் சாற்
றும் வீரா, விவண்சரங்கள் விடவேண்டாம் யானுனக்
கிங் கியற்றுவதை யியம்பா யென்ன. 2

அரசர்களிற் சிறந்தவிபு நீவிடுக்குஞ் சரங்களனை
யடுத்தே நிற்கும், பரவியசத் துவங்களழி வனவவற்
றிற் கபயமது பணிபடா யென்னச், சரம்விடுக்குங் கார்
த்தவீ ரியனுரைப்பா னென்றனக்குச சமமாம் வில்லார்,
பொருமெய்போ ரினிலேனு மிருப்பரே லுரையென்
னிற் பொருதும் வண்ணம். 3

அலையெறியுஞ் சாகரமு மாசசம தக்கினியை யறி
வா யாயி, னலைவிலவன் சூனுவுனக் குபசாரம் விதிப்ப
டியே யமைப்பா னென்னப், பலமிகுதோ ளவ்வரசன்
சினமாகி யவன்பன்ன சாலை பாற்போ, யிலகிடுமி ராம
னையே சிறியவ னினத்தருட னினும னேகம். 4

அடாதவற்றை யியற்றியிரா மனுக்குந்தன் பங்
கள்பல வமையச் செய்தான், படாதபுகழ் ராமனுக்குத்
தேசசொன்று துணைவந்து பகைவர்ப் பற்றி, விடாதெ
ரித்தே யோங்கவுடன் ராமனுங்கோ டரியதனை விரை
வில் வாங்கிக், கெடாதவர் யிரங்கரங்க ளைச்சேதித்
தருச்சுனனைக் கீழே சாய்த்தான். 5

அடிபட்டு வீழ்ந்தவனைச் சூழ்ந்துநின்ற வவன்ப
டைக ளனைத்தும் நோக்கி, யிடியேறு போல்வாள்சத்
தியுங்கொண்டு ராமனிடத் தெதிர்த்தார் வேக, முடியி
ரத மேறிகொடு மரமேந்தி ராமன்முரண் சரங்களெய்
தே, படையரசர் படையலறச் செய்தனன்பின் ராம
னது பயத்தி னாலே. 6

சிதைந்துசில வரசரெலாஞ் சிங்கத்தாற் சிதைக்
தோடுஞ் செம்மான் போலத், துதைந்தனர் திர்க்கங்கட்

புகுந்தொளித்தார் பரசுராமன்பாற் றேன்றும், வதிந் திடுபீ தியினலந் தணர்களையே காணுமன் மறைந்தே யெங்கும், பொதிந்திடவர்க் கெல்லாந்தம் வருணவிதிப் போற்றுமற் போன தாலே. 7

வேறு.

அவர்சந் ததியினர் விருடள தருமம தனுபெற் றனர்களிவ் விதமாக,வெவரும் மிகபூறு மறவர் களிலள வினராய் வெளிவரு மதனுலே, புவனந் தனிலர சர்க ளுக் குரியதோர் பொருவிற் பெயருடை யவராகி, யவ னிம் மிசைதிர விடரா பிரர்புண் டரரா ஞர்பினர்ப் பர சுடையோன். 8

வேறு.

வேந்தர் மனைவியர்பால் வேதியர்சேர்ந் துற்பவித்த சாந்தமுறவ் வரசர்குலத் தையுமறுத்தான் சத்திரிய மாந்தரிவ்வா றிருபத்தொன் றும்வதையி னீற்றினிலே போந்தசரீ ரியுமுலகம் வினவவிது புகன்றிடுமால். 9

விட்டேகு ராமவிந்த வேந்தர்களை மேதினியி லட்டதனுல் யாதுகுண மப்பாநீ யறிந்தனையோ யிட்டமுட னவ்வேலை ராமன்பி தாமகராந் திட்டமுள ருசீகர்முதன் முனிவர்களுஞ் செப்பினரே.

தந்தைவதை யைச்சகிக்கா தவனுகி யீதிலெனை வந்துதகைந் திடநீவிர் தக்காரன் றெனமறுத்தான் பிந்தியுமப் பிதுர்க்களுநீ பிராமணனு யிருப்பதினு லிந்தவர சரையழித்த லிதுவுனக்கு நீதியல. 11

பிரஹ்மகீதை

பத்தாவதத்தியாயம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 257.

நைஷ்கர்மயோகம்.

# பதினொன்றாவதத்தியாயம்.

பின்ன ரந்தப் பிதுர்க்க ளுரைசெய்வா
ரொன்ன வேயிதி லும்பிப் பழங்கதை
தன்னை யோதினன் றனத னையுங்கேட்
டன்ன வண்ணமுன் னலனுட் டிக்கவே. 1

சாலவுஞ் சிறந்த தவமுடை யவனுந் தருமமுஞ் சத்திய மொழியு, மேலுறுந் திடமாம் விரதங்கொண் டவனு மெண்ணுறு மலர்க்கனென் றிடுமோர், மாலுறு வரச விருடியும் வில்லான் மகிமையென் றியற்றுதற் கரிதாம், பாலுறு கருமம் புரிந்துருக் குமத்திற் படர்மன நிலைநிறுத் தினனால். 2

சிறந்திடு மதியோய் மிகவுந்து லமதாஞ் செய்திடு கருமங்க ளகற்றி, யறமுடன் சூக்ம நெறியினை நாடி யமர்ந்திடு மவற்குப்பா தபத்தின், றிறமுறு மூலங் களின்மன மதுதான் சென்றது செப்புவ னலர்க்கன், மறமுறு மனதால் வலிவெனக் காயிற் றனதால் வளையு மொன் ஞர்மேல். 3

சுடுசரம் விடுவ னுகையா லிந்தத் துயர்தரு மனத்தினை வென்று, லடைந்திடி சயமு மென்றுமே யுளதா மம்மன மனைத்துமாந் தரையு, மடானித் தியத்தாற் றொழில்களை வியற்ற வாற்றிடு மாகையா லதனைப், படுவண நோக்கி யெனதுகூர் மையவாம் பாணங்க டமைவிடு வேனே. 4

அன்னதை யின்வி மனஞ்சொலு மிந்த வாசக மெதுமெனை யடரா, துன்னுடை மருமந் தன்னையே

சிதைக்கு முனதுரம் பிளந்துநீ யொழிவா, யென்னையிங் கழித்த லெவற்றினா லாமோ வியன்றிடுஞ் சரங்களைப் பார்ப்பா, யென்னவும் வினவிச் சிந்தியா ததன்பி னிதற்குமே யிவ்வண மிசைப்பான். 5

வெகுவித கந்த முகர்ந்துமற் றதையே மீளவும் விரும்புமூக் கினையும், வெகுவித வுருசி யுணவையுண் டதையே மிகவுமே கருதுநா வினையும், வெகுவிதம் பரிச மறிந்தும்பின் னதையே வேண்டிநின் றலைதுவக் கினையும், வெகுவித வொலியை வினவியு மீட்டும் வினவுதற் கவாவுகா தினையும். 6

பலவித வுருவைப் பார்த்துமவ் வுருவைப் பார்த்திட முயல்விழி யினையும், பலவித நிட்டை களைச்செய வியற்றும் பண்பிலா விந்தப்புந் தியையும், பலமிகு மௌது கணைகளாற் சிதைப்ப னெனமுன மனம்பகர்ந் ததுபோற், பலபுலன் களுமே பகர்ந்தன வலர்க்கன் பயிற்றருங் கடுந்தவம் பயின்றும். 7

தனதுரத் தாலிவ் வேழின்மே லெய்யுஞ் சரங்களை யறிந்திலன் பின்றைச், சினமிலாப் பிரபு வாகுமவ் வலர்க்கன் செப்பமாய் நிலைமன முளனாய், மனனஞ் செய் தந்த விதம்வெகு கால மதியுளோர் களிற்சிறந் தவனா, யினியதோர் தியான யோகதை விடவே றிலைநல மெனவறிந் தனனே. 8

ஓர்நிலை யதனின் மனதைவைத் தசைவில் யோகமா மொருநெறி யடைந்தே, யார்வலி யுடையோ னுமொரு கணையா லடர்பொறி களையுட னெய்தான், சீர்பெறும் யோக மதுகொடான் மாவிற் சேர்ந்துயர் சித்தியை யடைந்த, நேர்பெறு மரச முனியதி சயித்து நிலைபெறிக் கதையையு நிகழ்த்தும். 9

விணிலே நம்மா லெய்வன யாவும் வெளியிலே யுள்ளன வந்தோ, மாணிலாப் போக விச்சையாற் பூர்வம் வளரா சதுபுரிந் ததுமேற், ஞானுமிவ் விதம்யோ கதைவிட வேறு சுகமிலை யெனவறிந் ததனாற், கோணிலிவ் வணநீ குறிக்கொள்வா யிராம யினியரை யரைக் கொலை புரியேல். 10

வேறு.

அருந்தவம் புரிவா யத்தா லடைகுவாய் நன்மை யென்றே, யரும்பிதா மகர்தாங் கூற வினவுமப் பரசு ராம, னருமையாய்ச் சிறந்த வம்ச முடையவ னதனா லவ்வா, றிருந்தவத் தாலே யெய்தற் கருஞ்சித்தி யெய்தி னானே. 11

பிரஹ்மகீதை

பதினொன்றாவ தத்தியாயம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 268.

பிரஹ்மகீதை.

ஸ்வாராஜ்யயோகம்.

## பன்னிரண்டாவ தத்தியாயம்.

மொழிகுவன் மறையோ னுலகினி லுள்ளவி ரோதிகண் மூவர்களே, பழகுறு பண்பா லொன்பது விதமா மெனவே பகருவராற், றழுவுறு மதனிற் பிரகர்ஷம் பிரீதித் தருமா னந்தமெனும், வழுவிலிம் மூன்றுஞ் சாத்விக மென்ன வழுத்திடு நற்குணமாம். 1

ஆசைசி னம்பகை யென்பன ரசசா லாகிய பண்புகளாங், கூசிடு மல்லற் சோம்பன் மயக்கந் தமரா னுள

குணமாந், தேசுறு திடனுய்ச் சோம்ப லகற்றிச் சிலே யா விவைகளையே, நாசஞ் செய்தைம் புலனையும் வென் று நசையறு தன்மையனுய். 2

வாய்ந்திடு முட்பகை யோர்களை வெலவல னுரு வன் முற்கால, மாய்ந்தறி மதியின ரோய்ந்திடு மம்பரி டனனுன் முன்னொருகா, லேய்ந்திட வோதிய காதை யை யிவ்விட யத்தி லியம்பிடுவான், றேய்ந்திடு பாவம் தோங்கி யறங்கள் சிதைவுறு மத்ததியில். 3

அரியதொர் புகழுடை யம்பரி டன்று னரசதை யாள்வுற்றுள், வருதனியற்கைப் பழுதுக ளறநல் வழி யோர்களை நன்ருய்ப்,பெருக சிறப்பித் தேபே றெய்திப் பேசுவ னிக்கதையை, யொருவிடு குற்றப் பகுதிகள் யாவு மொடுக்கப் பட்டனவே. 4

ஒன்று ரெவருங் கொலேயே யுண்டன ரோர்போர் வழுவதுவு, மென்றுற் கொல்லத் தக்கவை யானவை யின்னம ழித்திலனு, லின்னே யெதனு லேவுமி வைந் தினி ராசையை யெய்தாமற், கொன்னே நசையாற் றுன்பொ டேத்ாகதி கொண்டும யங்குவதோ. 5

வேறு.

எதனு லேவப் பட்டாநர னியற்று ததனை யியற்று வனே,வதுபோ னம்மை யழித்திடுமிவ் வாசை யாகும் விருத்தியினை, வதைமின் கூர்வா ளிதனுலிவ் வாஞ்சை யதனை மகிதலத்தி, லதனு லல்லல் வருமிவித மர்சை யடைந்தோ னறவேதான். 6

இகழும் ரசசாங் குணங்களையே யேற்பா னவற்றை யேற்றபினர்ப், புகலுந் தமசாங் குணங்களையும் பொருந் தி யந்தக் குணங்களினு, ல க ல ா தென்றும் பிணிப்

புடைய வாக்கை யுளனு யுடனுடனே, மிகவும் பிறந்து
வினைப்பொருளை விரும்பி விளைந்த தொழிந்திடவும். 7

பிறிந்து சிதறு மெய்புளனுய் மாண்டுமீளப் பிறவி
யெய்த், தறிந்து முன்போன் மாள்வதையு மடைவா
னதனு லிவ்விருப்பை, யுறவே நோக்கி யூக்கமதா
யொருங்கே யடக்கித் தனிற்றனே, திறமா மரச னுக
நெறி தேடு மிதுவே யரசியலாம். 8

இதனை விடவே றரசியலிங் கில்லை யுள்ள வணமறியு
மிதமா ருளமே யரசனு மெனவே யரசை முன்னிட்டே
பொதியு மாசை தனக்கொய்த புண்ய கீர்த்தி யாகியநல்
லதிப னம்ப ரீடனெனு மரசன் காதை யாமிதுவே. 9

பிரஹ்மகீதை

பன்னிரண்டாவதத்தியாயம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 277.

---

பிரஹ்மகீதை.

ஸ்வாராட்யோகம்.

## பதின்மூன்றுவதத்தியாயம்.

மன்னுஞ் சனக ராசனுக்கு மறைதே ரோரந் தன
னுக்கு, முன்ன நடந்த சம்வாத மாமிப் பழங்கா தை
யை முறையாற், பன்னு மிதனின் மறையவனும் பாவாய்
கேளென் றிதகரிப்பான், சின்ன மாயோர் தவறுதனைச்
செய்தே தவற்றுள் ளவனுகி. 1

நின்ற மறையோன் றனைச்சனகன் நேரே நோக்கி
சிட்சைசெய்வா, னென்று மெனது நாட்டினின்ர் வசி
யா தேகு மெனமொழிந்தான், வென்றி யரசர் களின்

மிகவு மேலாஞ் சனகன் றனைநோக்கி, யொன்று மொழி வான் வேதியனுன் வசமாந் தேச மெவ்வளவோ. 2

அருளு வீரே லதையறிந்து நான்வே றரச ருடைதனின், மருவி வசிக்க விரும்புகின்றேன் விபுலே மகியி னதிபதியே, பொருளின் முறையா லனுசரிக்கப் புகலுன் மொழியை விரும்பினனென், றொருவி லறத்தின் புகழுறுஞ் சரனு மோத வவ்வேலை. 3

அந்த வரச னெட்டுயிர்த்தே யதற்கு விடையீ யாதிருந்தா, னிந்த விதமாய்ச் சிந்தனைசெய் திருந்த வளவி லொளியடைந்தச், சந்தச் சனகன் றனைக்கதிரைத் தனியி ராகு சூழ்வதுபோன், முந்திக் கலக்கம் பற்றுதலு முடைத்த கால மயக்குளனாய். 4

உடனோர் விதமா யமைதியடைந் தோது மிணக்க மதனோடு, மடனில் வேதி யனைநோக்கி மறுமாற் றம தொன் றியம்பிடுவா,னடலார் தந்தை மூதாதை முறையால் வந்த வரசியலிற், றிடமா யடங்கு நாடிருந்துந் தேச முழுது நான்றுருவி. 5

தனதே யெனுமோர் நாடதனைத் தெரிந்தே னில்லைத் தாரணியின், றனிலே யறியா துறும்போது தகைசான் மிதிலை யெனுநகரும், பனுமென் றலை தேடியதே யதிலு மதைப்பார்த் தறித லின்றேற், றனதே யென்னு மறிவதுதான் சாற்று மென்றுற் றேடியதே.

மடனி லதிலு மதைபறியா திருந்தா லெனக்கு மயக்கதுதா, னுடனுண் டாயிற் றதன்பினரக் கலக்க மொழிய வெனக்கொர்மதி,தொடர்பாய் மீளத் தோன் றியன சொலுமவ் வேலை நானினைந்தே, னிடர்செய் யிதுதா னெனதென்னும் விடய மில்லை யெங்கணுமே.

எனக்கு விடய மீதெனுடலென்ப தில்லை யுலக மெலா, மெனக்குத் தனுவே யெனக்கெவண மோவவ் வணமே யெவர்க்குமென, நினைக்கின் றேனீர் வறுமை யுள வரைக்கும் வசிப்பீர் வசித்தபினர், நினைந்தே யீங்கு வருங்காறு முன்பீ ரெனப்பூ சுரமிகழ்ந்தும்.

முன்னுன் றதை மூதாதை முறையால் வந்த வர சியலாங், தன்னி லடங்கு நாடெனக்குச் சார்பா யிருக்க மதியாம, லுன்னுன் மமதை நீக்கியதை யுரைப்பாய் மதியா துலகமெலாம், பன்னுன் விடய மாயினதைப் பாங்கா பெனக்குப் பகர்ந்திடுவாய். 9

உணர வில்லை யெதனுனீ யாவு முனக்குத் தேசம தா, முணர வுரைப்பா யெனர்சனக னுரைப்பா னிந்த வுலகதனிற், றணவாச் சகலப் பொருளினும்பே தனையு மழிவு மெனவறிந்தே, னனுமா றெனதே யிதென்ப தெதுவோ வதைநா னுணர்கில்லேன். 10

வேறு.

இழிபொரு ளெவனுக் குத்தா னுரிமையி தன்றி வேத, மொழியும்பொய் யென்றே சொல்லி மறுத்த லான் மொழியு மீதே, யழிவிலார்க் குடைய தென்று ராயுங்கா லெனதி தென்று, வழுவிலா துளதை யென் றன் மதியினு லறிந்தே னல்லன். 11

இந்தப்புந் தியினைக் கொண்டே யென்றனுன் மம தை நீத்த, தெந்தப்புந் தியினை யெய்தி யாவுமென் னு டா யிற்றோ, முந்துற வதனைக் கேளீர் மூக்கினுன் முக ர்ந்தி ருந்துஞ், சொந்தமாய்ச் சுகந்த மெல்லாம் விரும் பலே னுதலாலே. 12

என்றனுல் வசஞ்செய் பூமி யென்கீழ்நிற் கின்ற தென்று, மென்றுரு சியையோர்ந் தாலும் விரும்பலேன்

MAHAMAHOPADHYAYA

சுவைகண் மும்மை, யென்றனுல் வென்ற தாயென் வச
கீர்நிற் கின்ற தென்று, மொன்றுநேத் திரத்தா லோர்ந்
து முருவத்தை விரும்ப கில்லேன். 13

மற்றெனுல் வென்ற தாயென் வசந்நிற் கின்ற
தென்றும்,பற்றிய துவக்காற் சேர்ந்தும் பரிசநான் விரு
ம்ப கில்லேன், வெற்றிகொ ளென்வ சத்தில் வளியெ
ன்று மேவி நிற்ப, துற்றிடு செவியாற் கேட்டு மொலி
யையுட் கொள்வ தில்லை. 14

வாகைகொ ளென்வ சத்தி லொலியெலாம் வசிக்கு
மென்றுஞ்,சோகமா மனமா னித்துஞ் சுகதுக்கங் கொ
ள்வ தில்லை, யோகையால் வென்ற தாயென் னிடமன
மொன்று மென்று, மாகையாற் றேவர் கட்கும் பிதுரர்
க்கு மாயிவ் வெல்லாம். 15

எனவெவ் வோர் தொடங்க லுண்டா யிற்றெனு
மரசை நோக்கி,யினியதோர் முறுவ லோடந் தணன்மீ
ள விசைப்பா னிங்கே,யுனையாய வேண்டி யிவ்வா றுவந்
திங்கு வந்த வென்னை, யுனலரும் தரும மாகு மென்ன
வே யோரு வாயே. 16

ஒருபோதுந் திரும்பி வாரா ததுந்தடுத் திடவொ
ண் ணுதுங், கருதுசத் துவமா மட்டை யாற்கட்டுண்
டதும்பிர் மத்தை, யொருமையா யடைய மிக்க வுதவி
யாம் விருத்திக் காற்குப், பிரவருத் தகனுஞ் சக்ர வர்த்
தியாம் பெயரும் பெற்றாய். 17

பிரஹ்மகீதை

பதின்மூன்றுவதத்தியாயம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 294.

## கைவல்லியயோகம்.

# பதினான்காவதத்தியாயம்.

யானேதா னவனென்னு மதிநீ கொண்டு மகிழ்ந்
துதர் சனஞ்செய்யும் வணம்யா னிந்த, வானாரு முலகி
லென தெனவே யொன்றில் வைத்திலே னாசையைவிப்
பிரனா னானே, தானாகு முத்தனானான் கான கத்திற் சரி
ப்பவனு மில்லறத்தோன் றானு னானே, நானாவாம் விர
தங்கொண் டவனு னானே யென்னவே வேதியனு
நவினு வானே. 1

வேறு.

வருநலந் தீதினும் மாறுபா டாமெனக்
கருதியே காண்பது போலலேன் காணுவா
யரியபே ருலகிருந் திடுவதே ததுநனிப்
பரிவொடு மென்றனாற் பற்றிடப் பட்டதே. 2

அகிலமேற் சரமுட னசரமாம் பிறவியைத்
தகவுடன் கொண்டவாய்த் தாமெனை யுள்ளவோ
விகலவற் றிற்கெனை யிந்தனங் கட்கெலா
மகலன லந்தக னென்னவே யறிகுவாய். 3

மண்ணின்மே லெங்கணு மலதுவா னெங்கணு
மெண்ணுறு மெனதர சியலதே யிவ்வண
மொண்ணுமிப் புந்திதா னோர்வதா மன்றியே
நண்ணுறும் புந்திதா னடிடி லெண்பொருள். 4

பேசிடுங் கல்வியில் லப்வனம் பிச்சையா
மாசிலா தெதனினின் றும்மதை யோர்ந்துளோர்
கூசிடா ததனையே கொண்டுசெல் வார்களோ
மாசிலா வறிஞரெல் லார்க்குமோர் வழியரோ. 5

குறியைவிட் டகலுறுக் கூற்றள வற்றதாங்
குறைவறக் கொண்டுமெல் லோர்களுங் கொண்டிடு
முறுவதோர் கொள்கையே யொழிபுகொண் டுயர்தரு
மறிவெவர்க் குள்ளதோ வவரனை வோருமே. 6

பற்றிடுங் குறிநெறி பற்பல கொள்கினு
முற்றிடுங் கொள்கைய தொன்றுதா னுறுகள்
வற்றிலாத் திரைபெறி வாரிதி சார்வபோற்
குற்றமி லறிஞர்கொள் வார்களந் தத்திலே. 7

செல்லுமிந் நெறியுய ரறிவினாற் சேர்வதே
யல்லதிங் குடலினா லடைவதா காதுகா
ணெல்லுமிவ் வினைகளோ முதன்முடி புள்ளவாம்
வெல்லவற் றுற்பிணிப் புண்டதிம் மெய்யுமே. 8

உறுதிசேர் பாக்கிய வதியுனக் குப்புற
வறிவினு லாம்பய மிலையெலா மிவனெனுங்
குறிபொடு மனமிடம் பற்றியக் குணமுட
னறியுமென் னுத்துமா வாகவே யாகுவாய். 9

பிரஹ்மகீதை
பதினன்காவதத்தியாயம் முற்றிற்று.
ஆகச்செய்யுள் 303.

---

பிரஹ்மகீதை
க்ஷேத்ரஜ்ஞயோகம்.

## பதினைந்தாவதத்தியாயம்.

பார்ப்பனி பகர்வா ளிவ்வுப தேசம் பயில்கின்ற
கூர்ப்பதி லற்ப மனதா லேகொள் ளுதலாகா
தார்ப்பொடு பதியா மனதா லும்மறி வுறலாகா
சேர்ப்புறெ னுளமோ வற்ப முடன்சித றியதாகும். 1

இவ்வறி வெதனாற் பெறுகுவ தற்கெளி யதுவா மோ,விவ்வகை தன்னை யெனக்கருள் வீரே லெதனாலே, தெவ்வண முண்டா மந்தவு பாயம திஃ நும்மாற், செவ் விய தாய்க்கேட்டுத்தெளி வேனெனச் செப்புவனே.

ஆழ்ந்திடு புந்தியை யரணிய தாய்க்கொ ளதற்காசா
னேய்ந்திடு முத்த ராரணி யாவா னினிதாக
வாய்ந்திடு தவமுங் கேள்வியு மதனம தாகுமதிற்
றேய்ந்திடு மெய்யறி வாகிய வனலுந் தோன்றிடுமே.

இன்னுமி யம்பும் பார்ப்பனி சேத்தி ரஞ்ஞனெ னும், பின்னமி லாப்பெயர் கொண்டது பிரமத் தியலெ ன்ன, முன்னமு ரைத்தது மெதுவோ விஃதெவன் மு றையாக, வுன்னிவு ணார்ந்திட வொண்ணுமோ வெங்குள தவனுருவம். 4

குணமுறு மறைபோ னேது மவன்குறி குணமில்லா
னணியுறு மவனுக் கேது குறித்திட விலையவனை
யுணர்வொடு மெதனா லொருவ தாமோ வுணராதுந்
தணர்தலு மாமோ வந்த வுபாயஞ் சாற்றுவனே. 5

கழறும தற்கொரு தந்திர நலமாய்க் கண்ணுற்றே
சுழலுறு ஞிமிறுக ளவைபோற் றாய வறிவோராற்
பழகிய கன்மப் புந்திய தென்றே பகர்வதுமா
மழிவுறு மதுவும் புந்திய தாகா தாதலினால். 6

சோதிகொளறிவின் குறியாற்சூழ்ந்தது போற்றோன்று
மோதிய வெதனிற் காணுதல் வினவுத லுறுசீவர்க்
காதர வாகிய ஞானமு திப்பதோ வதினின்று
மேதுறு மொழிபி லிதுகண்ம் மம்மித கன்மமென, 7

உறவுப தேசிப் பதுமி லவற்று னுணர்ந்ததுவு
மறியா தனவு மாய்நா ருயிர பிரிவோடு
நெறியொ டனேகம் பகுதிக ணிருமித முஞ்செயலாஞ்
**செறிவுடனெதனைக்கொண்டதன்மேற்பற் றிரவியமுஞ்.**

கொண்டன யாவுங் காட்சியி னேதாற் கூறெனை
யுங், கண்டிட லீலையோ கழறுப யிற்சியி லதுதோன்று,
மண்டம துண்டோ னறைவான் பின்பத னுலந்த, வண்
டணி பார்ப்பனி மதிசேத் திரஞன் மறையுங்கால். 9

ஒத்துரை சேத்ரஞ வுணர்வைக் கொண்டுயர் வாய்
கின்ற, சாத்திடு சேத்தி ரஞ்ஞ ரொனுந்தடை களினின்
றும், வேத்திய மாய்வெளி யாய்ச்சுப வடிவாய் விரி
வாச்சென், றுந்த னுரைக்க வர்ச்சுன னறைவா னச்
சுதனே. 10

எவரா லிந்தப் பேற்றினை யெய்திய தோவந்தத்
தவறு மறையோன் பார்ப்பனி யென்பவர் தாமெங்கே
யவரிரு வரையுங் கண்ணு வடியேற் கருளென்னப்
பவமறு பகவான் பற்குன னுக்குப் பகர்வானே. 11

ஓதிய வென்றன் மனமது பார்ப்பனி யெனவோர்வாய்
தீதறு சேத்தி ரஞ்ஞ னெனவே செப்புமவ [தே
னேதில னவனே வென்னவு னெஞ்சினி லெண்ணு
தாதவிழ் கண்ணித் தலைவா வவனே நான்றனே. 12

உபாசனா காண்டம், பிரஹ்மகீதை
பதினைந்தாவதத்தியாயம் முற்றிற்று.
ஆகச் செய்யுள் 315.

ஞானகாண்டம், குருகீதை.
தத்வசங்க்யானயோகம்.

## முதலாவதத்யாயம்.

அருச்சுன னுரைப்பா னுன்னுடைய யருளா லடி
யனேற் கரியசூக் குமத்தில், விருப்பமாய்ப் புந்தி நிற்
கின்ற ததனுன் மேலறிந் திடற்குரி யதுவு, மொருமை
யாய்ச் சிறந்த ததுவும்வி யாம லுள்ளதோர் பிரமமா

மதனை, யருமையா யடியேற் கருளுவா யெனவே யறை குவன் வாசுதே வனுமே. 1

நிலமிசைச் சிடன் குரவற்கு மோக்க நெறியினைச் சார்ந்ததாய் நிகழ்ந்த, வலமுறு வாத மாம்பழங் கதை யை வதத்தினி தாயிதி லுரைப்பா, னலகினுண் ணறி ஞ ருமொரு சிட னதிகமா நியமம தடைந்து, விலகில் விற் றிருக்கும் வேதிய னுமோர் குரவனை நோக்கியே வினவும். 2

தவத்தினிற் சிறந்த பூசரா கீர்த்தி தானெனப் படு வது யாதோ, பவத்தினைக் கெடுக்கு மோக்கமா நெறி யைப் பற்றியே யுன்சர ணடைந்தே, னவத்தைக ளகல வணங்கியா சித்தேன் யானதைக் கேட்பனோ வத னைத், தவக்கற வடியேற் கருளுவா யென்னத் துதிக் குமச் சிடனை நோக்கி. 3

தவறிலா சானு முரைப்பன்விப் பிரனே சங்கைக ளேங்குனக் குளவோ, வவற்றினை யிசைப்பா யென்ன மா னுக்க னுர்வமு மச்சமு மடைந்து, குவியுறு கரனுய் வினவிய தியாதோ குருகுல திலகனே கேட்பா, யிவறி லாச் சிடன் வினவுவன் யானு மெதனினின் றிங்குவந் தனனே. 4

இப்படி யெதனி லிருந்துநீர் வந்தீ ரியம்புமே னுளதுமுண் மையுமா, மப்பரம் பொருளை யறைகுவிர் சரமு மசரமு மாகிய பூதக், குப்பைக ளெல்லா முதித் தனு முயிர்ப்புக் கொண்டிருப் பதுமெத னுலே, தப் பிலா தவைகட் குயர்ந்ததோ ராயுட் சத்தியந் தவமிவை சாற்றுய். 5

குணமென நல்லோர் கூறுவ தெவையோ குறிக்கு மெய் நெறிகணல் லனவாந், தணவுறாச் சுகமுந் துக்க

மு மியாவை தகுநல நியமங்கொள் பகவ, யணியதா
யுள்ள வுன்னவா றிந்த வினாக்கட்கு விடையளித் திடு
தற், கெனிலுனை யன்றி யிவ்விட யத்தி லியம்புவா
ரொருவர்வே றிலையே. 6

அருளுவீர் மிகவு மிதிலெனக் காசை யாகிய தற
மதா முத்திப், பொருளினிற் றிறமைப் பொருந்தினீ
ரெனவிப் புவனத்திற் புகழ்ந்திடத் தருவீர், வெருவரு
மைய மியாவும்விட் டகலச் செய்பவ ருனைவிட வேறே,
யொருவரு மிலையிப் பவத்தினைப் போக்க வுன்சர
ணடைந்தன னென்ன. 7

விதியுடன் றன்னை யடைக்கல மடைந்து வேண்
டியே வினவுஞ்சி டற்குப், பதியுநற் குணங்கொண்
டுபரதி யடைந்து பாசநீத் தன்புட னின்று, முதிர்த
ருஞ் சாயை யாயக மடக்கி முயல்வொடு பிரமத்தை
நாடி,வதிகுவோ னதனாற் சிறந்திடு மதியான் மானுறுத்
தவத்தனு மாகும். 8

அன்னதோ ராசா னவன்வினா வியதற் கருமை
யாய் விடையரு ளினனா, னுன்னரும் வேத வித்தையை
நாடி யுண்மையா யுள்ளதோர் பொருளை, யென்னிலா
ராய்வ தோடுடன் சேர்ந்த விப்பொருண் முழுதும்வே
தாவான், முன்னமே மொழிய முனிவரிற் சிறந்தோர்
முகமனா யனுட்டித்த துளதால். 9

ஒள்ளிய வறிவே யுத்தம பிரமந் துறவதே யுத்
தம தவமாய்க், கொள்ளுவோன் யாவன் றிடமொடு
பூதங் களிலுமே குலவுமான் மாவை, பெள்ளலி லுண்
மை யழிவுறு வறிவே யென்னவுங் காண்பனோ வவனே,
தள்ளலி லெங்கும் பரவினே னென்னத் தானெனப்
படுபவ னாமே. 10

பிறிதுமோ ரறிஞன் கூடுதல்பிரித லொற்றுமை பன்மையும் பிரித்தே, யறிவினேற் றுன்ப மகனுவன் யாவ னென்றையு மவாவுத லிலதே, வுறவொடொன் றினையு மதித்திட விலையோ வோதவ னுலகுளா னெனினு, மறுவற வீண்டே முத்தபா வத்தின் மன்னுதற் குரியவ னாமே. 11

பகர்பிர கிருதி குணங்களி னுண்மைப் பகுத்தறிந் தவனும்பூ தங்கள், சகலமு முண்டு பண்ணுத லெந்த விதமெனத் தானெரிந் தவனு, மிகமதி லெனது யானெ னுமிரண்டு மிறந்துளோ னாகியு மிருப்போன், விகலமின் முத்தி மேவுவ னையு மிலைப்பிர கிருதியாம் விதையில். 12

உதித்ததும் புத்தி யெனுங்கவை கிளைக்கொண் டோங்கியே வளர்ந்தது மன்றி, விதிக்குமாங் கார மென்னுமோ ரகண்ட கிளையுடன் மினிர்பொறி யென்னும், பொதித்திடுந் தளிர்சேர் புலனெனும் பொருந்தும் பூதங்க ளெனும்பெரு முட்டுஞ், ததைந்திடு கன்ம மெனுங் கொம்புந் தளராச் சங்கற்ப மாமிலை யுடனும். 13

வினைகளாம் வியு நன்மைதீ யனவாங் கனிகளு மே வியேமேலா, மினியதோர்பிரம மெனும்விதை கொண் டிங் கென்றுமே யுள்ளது மெல்லாப், பனும்பிரா ணிக ட்கு முறைவிட மாகும் பாதப மொன்றுள தலவா, வின வுமாகாய மளாவிய முடியும் விருத்தியாம் விரிவொடு மிகவும். 14

பரந்துமிற் பதுமா மிதனையு மிதனி லுளதையும் பகுப்பொடு முணர்ந்து, விரிந்தமெய் யறிவாம் வாளி னால் வீசி வீழ்த்திவி யாததோர் நிலையைப், பொருந் தப்பெற் றவனு யிறப்பொடு பிறப்பைப் போக்கியே யிறப்பெதிர் நிகழ்வா, யரும்பிய காலு மதையடைந் ததுவு மறம்பொரு ளின்பமென் பவற்றின். 15

## வேறு.

தெளிவைக் காட்டுகின் றதுஞ்சித்தர் கூட்டத்தாற் றேர்ந்தது மென்னாளு, முளது மாகுஞ்ஜித் தாந்தத்தை விரித்துமே யுனக்குநா னுரைசெய்வ, னொளிரு மேதையோர் களிற்சிறந் தோயிந்த வுலகிலப் பதந்தன்னை, பணி பொ டோர்ந்துமூ தறிஞரப் பேற்றினை யடைந்தவ ராளுமே. 16

முன்னோர் காலத்தி லாய்ந்திட விரும்பியே முனிவரர் தாஞ்சேர்ந்தார், பன்னு மேற்பிர சாபதி கௌதமன் பார்க்கவன் பரத்வாசன், மன்னுங் காசிபன் கௌசிக னத்திரி வசிட்டனுந் தம்முழாற், சொன்ன மார்க்கங்கள் யாவினுந் துருவியே சோர்ந்தவ ராய்ப்பின்னும். 17

சேட்ட னங்கிரா முனிவனை முன்னிட்டம் முனிவரர் திகழ்வேதா, விட்டின் மாசறவ் விதிபினைக் கண்டனர் மிகவணங் கினராகி, வாட்டித் துன்பத்தை விற்றிருந் திடுமேவன் மலர்ப்பதந் தனைப்போற்றிக், கேட்டை நீக்குமேல் வருமிந்தப் பதவியின் விடயமாய்க் கேட்கின்றார். 18

வினையை யெவ்விதஞ் சாதுவா யியற்றலா மேவுசிவனும்பாவர், தனினிக் றெவ்வண நீங்குவா னெங்கட்கு நன்மையைத் தருமார்க்க, முனிலெ வையெதிவ் குண்மையேயா வெதுகெட்டு நிற்பதோ வருமாறி, வினவு தக்கண ருத்தர ரிவர்களுந் வினைகளி னெறியேயாய்.

எந்தப் பேதமா மார்க்கமெ தெய்துவ ரினிப்பிராணிகளெல்லா, முந்தைத் தோற்றத்தோ டிறப்பையும் பிரளய மோக்கமு மருள்விரென், றந்த மாமுனி வரர் வின விடவிதி யருளிய தெதுவோமுன், சந்த மாயதை யாகம விதிப்படி சாற்றுவன் மகனேகேள். 20

தங்க யன்சொலுஞ் சத்தியத் தினினின்றுந் தாவ ரங் களுஞ்சங்க, மங்க ளாகிய பூதங்க ளுதித்தன வாழ் வன தவத்தைக்கொண், டுங்க தோருயிர் சுவரதர் கா டீந்தம் வினைகளோ டடனேகி, யங்குத் தத்தம யோனி யை யடைந்தன வாயவை யமர்கின்ற. 21

பிரமமும்பிர சாபதி தவமுமே பேசுசத் தியமா மும், பொருளிற் சத்தியத் தினில்வரு பூதங்கள் சத்தி யம் பூதத்தி, னுருவ மாகிய வுலகெலாஞ் சத்திய மோ திலக் கணமைந்து, மொருமை யாக்கொண்டு குணங்க ளோ டளாவிக்கட் டுண்டது நிசமாமே. 22

ஆன தாற்பிரா மணருமெக் காலமு மரியயோ மும் றோரு, மூன கோபதா பங்களை யொழித்தவர் நியமம துடையோரு, மான மாமற நெறியடைந் தவருமெய் வடிவினைச் சார்ந்தோரே, தான தொன்றிலொன் றிணை ந்தது மெய்யறி வினைத்தமு வியதும்மேல். 23

அறமதென்றுமோ ரணையினைத் தாங்கிடச் செய் வது மகிலத்தை, முறைநடத்தலு மென்றுமுள் ளன வுமாய் மொழிநிச வடிவெல்லாங், குறைவி லாதி யா னுமக்கினி மொழிகுவன் குலவுவித் தைக ளுன்கு, முறையுஞ் சாதிக ளுன்குமா சிரமங்க ளொவ்வொன் றும் வெவ்வேறாய். 24

நிலவு நால்வகைப் பயன்களைத் தருவதாய் நின்று நித் தியமாமோ, ரலகி லாதநாற் காலுடை யறமென வறிஞர்க ளுரைக்கின்ற, ரிலகு றும்மனக் கட்டுடன் மா யையை யில்வகை செயமுன்னம், புலனு ளோர்கள் கைக் கொண்டதுஞ் சுகமதைத் தருவதும் பொன்றாத.

சிவமு மாகிய வவ்வற நெறியினைச் செப்புவ னின் றென்னு, லவன மாய்ச்சொல வறிவரும் பரகதி யறி

குவி ரதுகொண்டு,பவம தின்றியா தினுநிகழ் பரமமாம் பதத்தையும் பெறுவீர்க, ளிவணம் பிர்மசா ரியமுத னிலையதென் றென்னவே யிசைப்பாரால். 26

இல்ல றம்பிரண் டாவதா மதன்பின ரிலகுவா னப்ரத்தஞ், சொல்ல தற்குமே லத்தியாத் துமமெனுஞ் சுகமிகுஞ் சன்யாச, மல்ல வில்லதோர் பரமமா பதமெ ன வறிகுவ தெதுகாறும், புல்லவ் வத்தியாத் துமம னம் பெறவிலை யோபுக லதுகாறும். 27

சோதி வான்வளி சூரியன் சுரர்பதி சொலும்விதி யெனலுண்டா, மோதும் பின்பிவை காண்டலி லத னது பாயத்தை யுரைசெய்வன், காத லாயதை மேலறி குவிரினிக் கனிகந்த மொடுகாற்றை, மோத மாய்ப்புசிப் பவர்களு முனிகளாய் மொய்த்தபேர் கடந்தன்னில். 28

வாச மாயிருப் பவருமாய்ப் பிரமசத் திரியர்வை சியரென்னு, மாசின் மூவகைத் துவிசர்க்கும் விதித் தது வானப்ரத் தமதாகு, நேச வில்லறம் வருணங்க ளனைத்திற்கு நியமித்த முறையாகு, மாசின் மேதை யோ ரறமென்ப தாத்திக்ய மெனுமிய லுளதென்பார்.

இன்ன தன்மையை யோதுவ ரிவ்வண மெழின் மதி யுள்ளோரான், மன்னெ ழுக்கங்க ளாசரித் திடு வன வாமற வரம்பாகு, முன்னு தேவயா னங்களாம் வழிகடா முமக்குரைத் தனவாகும், பன்னி வைகளிற் றனித்துள வறநெறி யினிலெவன் பயில்கூர்மை. 30

கடுந்த வத்தினி னிற்பனே வவனுமே* காலகா ரணங்கொண்டு, மடிவிற் பூதங்க ளென்றுமே யுதித் தலு மாய்தலு மெனக்காண்பாண், வடுவி லுள்ளதை யுள்ளவா றுத்தியாய் வதிந்திடும் பொருடம்மிற், படர்வ

கைவகை வார்த்திக்குந் தத்துவ மனைத்தையும் பகர்வேனே. 31

அரிய வாத்துமாச் சிறந்ததா மவ்வித மாகுமே யவ்யத்தம், வருமகங்கரம் பதினொரு புலன்களா மைந்தா மாபூதந், கரிய பூதங்கள் விசேடமு மைந்தாங் கணிக்குமீ தெக்காலு, முரிசிருட்டியா மிருபத்து நான்குமே யோதிய வகைதம்மேல். 32

தகும்பு ருடனென் றுகதத் துவங்களின் சங்கியை சொலப்பட்ட, துகவை யோடெவன் றத்துவங்களினுதிப் பொடுங்குத றனைமெய்யா, யிகம தோருவனெவன் றுணிபினை யெய்தியப் பூதங்கண், மிருமவைகளின் மயக்கமுற் றிருந்திடான் மேலெவ னுளவண்ணம். 33

தத்து வங்களைக் குணங்களை யவைகட்குச் சார்ந்தவே வதையாவு, முத்தி யாய்த்தெரிந் திடுவனே யவனந்தப் பாவங்க டமையோட்டிப்,பொத்துக் கட்டினை யவிழ்த்துமே பரிசுத்த மாகியும் பொறைசார்ந்த, பத்தியாய்ப்படர் பிரபஞ்ச மனைத்திலும் பாவிநின் றிடுவானே. 34

குருகீதை
முதலாவதத்தியாயம் முற்றிற்று.
ஆகச்செய்யுள் 349.

---

## குருகீதை.
## ஆவரணயோகம்.
# இரண்டாவதத்தியாயம்.

ஆங்கய னருள்வா னவற்றுளவ் வியக்த மனசவொடு தனும்புத லிலதா, யீங்கெங்கும் பரவி யிருப்பது முடிவே யில்லது முதலற்ற ததுவே, யோங்குமுக்

குணமா யைந்துதா துக்க ளுடையதா யொன்பது வா யிற், பாங்குட னுளதாய்ப் பதிறொரு புறமும் பகர்மண மெனுமதி காரி. 1

உள்ளதாய்ப் புந்தி யெனுமதி பதியு முடையதா யுடலதா யினதாற், றள்ளுறு விதுவே பரமதாம் பதி ஞென் றுவது தத்துவ மெனவே, யுள்ளவா றறிய வேண்டிய திதனி றுடனுட னிரப்பபபட் டனவா, வொள்ளிய வெந்த மூன்றரு விகளு முள்ளவோ வநத மூன் றருவி. 2

குலவுறும் பிராநா டிகள்குண ரூப மவைகளாய் வர்த்திக்குங் கோதா, ரிலகுறுந் தமசு ரசசுசத் துவமா மிவற்றினைக் குணங்களென் கின்றார், விலகிவை யாவு மொன்றினை யொன்று மேற்கொள்ளு வனவுமவ் விதமே, நிலவுமொன் றினையொன் றடுத்துநிற் பனவு நீத்தொன்றை யொன்றுநீங் குவதும். 3

அப்படி யொன்றை யொன்றுபின் றொடரு வன வுமா யொன்றுட னென்று, தப்பிலா தளாவு வனவுமா யைந்து தாதுக்க ளாகுமாற் றமசை, யிப்படி மேற் கொள் ளுவதுசத் துவமாஞ் சத்துவத் தினையடக் குவ து, செப்பிய ரசசாம் ரசசடக் குவதுந் திப்பிய சத்துவ மாமே. 4

இயம்புசத் துவத்தை யடக்குதற் றமசா மெங்கெ ங்கே தமசடங் கிடுமோ, நயம்பட வாங்கே ரசசுவர்த் திக்கு நவிலெங்கே ரசசடங் கிடுமோ, வயம்பட வாங் கே சத்வம்வர்த் திக்கு மாலெனப் பெயர்கொண்டு குண ங்கண், மயங்கியே மூன்றுங் கலந்து நிற்பதுவே மதி யின்மை யெனுமிருள் வடிவாம். 5

அருந்தொணு விதனைத் தமசென வறிக வதர்மரூ பாயகிர்த் தியத்தி, னிரக்கர் முடனே நிகழ்வதாம்

கலந்து நின்றதா மதத்தைச்சார் வடிவாம், பிரிந்திடு பூதங் களிலெலாம் பிறவி யெனும்வடி வுடன்பெரு முயல்வாற், பரிந்திடு பண்ட மாற்றுச்செய் வதுவும் பகர்பிர விருத்தியின் வடிவாய். 6

தெரிந்திடு மதுவே ரசமெனப் படுவார் சிரத்தை சோம் பின்மையுஞ் செகத்தில், விரிந்திடு பூதங் களி லெலா நொய்தாய் விளங்குதன் மேன்மையோர் கொண்ட, பொருந்துசத் துவத்தைச் சார்ந்திடு மிய லாம் புகலிதிற் கன்மரூ பங்கள், வருந்திடா தவற்றின் காரணந் தொகுத்தும் வகுத்துரைத் திடுவது மறிவீர்.

தணிவறு மயக்க மறிவின்மை வினைக டமினின்று மொழிகுவ தின்மை, துணிபின்மை தூக்கந் திகைப் பவா வல்ல னன்மையைத் தூறுத லச்ச, மணிநினை வின்மை கனிவின்மை நாத்திக் கியமுறா நாமதி கொள் ள, லெனும்பகுத் தறித லின்மைபா ராமை யிழிகுண மிழிவுறும் விருத்தி. 8

செயத்தகா ததைச்செய் தோமென்றுந் தெரியா ததனையே தெரிந்தன மென்றுந், தியக்குற வெண்ண லிணக்கம தின்மை திருந்துதல் பத்தியு மின்மை, மயக்குறு மூடக் கொள்கைசேர் ரின்மை வருநியா யமு நிரூ டிகளுந், தயக்கறி வின்மை தவிருத லீண்மை சாற்றமை வின்மையீ தனைத்தும். 9

தோன்றிய தமசா லாகிய குணங்க ளென்றுமே தொகுத்துரைத் தனவா, லான்றவிவ் வுலகி லினு மெவை கொள்ளாக் குணங்களா யுறைந்திடற் காமோ, வூன்றவை யாவுங் கூடவாங் காங்கே யுரைப்பன தாமத குணமாய், வான்றனில் வாழு மமரரை மறையோர் மறைகளை வழுத்துறு நித்தம். 10

சமைய தின்மை தியங்குதற் றொல்லை யெய்துத லெனதெனக் கொள்ளற், றுகமாய்ப் பொறுத்த வின்மையும் பொறாமை யாவும்பூ தங்களிற் றமசா, லாகிய சேட்டை யெனவெணப் படுவ தலதெவை வீண்முயற் சிகளோ, வேகவீ தெவைவீ ணீகைக ளாமோ வெவை பய னின்றியுண் பனவோ. 11

சுதெலாந் தமசின் விருத்திக ளெனவே யெணப் படு கின்றன வம்பு, வாதமூக் காறு டகந்தையு மசட்டை வயங்கிவை யாவுந்தா மதத்தின், கோதுறும் விருத்தி யென்பதே யாகு மிவ்விதங் கொண்டவ ராகித், தீதொடிவ் வுலகி லெவரினும் பாவச் செய்கைய ராய் வரம் பிகந்த. 12

மனிதரா யுளரோ வவரெலாந் தாம தர்களென மதித்திடப் படுவார், நனியெவர் தாழ்ந்த நரகுந்தரி யங்க நரகையுங் கொள்வரோ தமதாய்ச், பனுமந்தப் பாவத் தொழிலர்க்குப் பலிக்கும் பலங்களைப் பகருவ னவர்கள், சனிதமா மசரப் பூதங்க ளாயுஞ் சங்கமப் பசுக்களா கியுமே. 13

கெடுபுலால் புசிப்போ ராயர வங்கள் கிருமிகீ டங்க ளா கியும்பின், விடும்பறவைகளா யண்டசச் செந்து விலங்குகண் முழுவது மாகிப், படருறும் வெதிரர் மூங்கையர் மற்றும் பாவரோ கிகளுமாய்ச் செனிப்பார்,விடு படா திவணந் தமசினி லாழ்ந்த மிகுகுணத் தவர்கண் மென்மேலும். 14

தள்ளுறுந் தமது வினைகளால் வந்த தனியடை யாளங்கொண் டவரா, யெள்ளுறு மீன சிலராய்த் தமசி விழிந்துமே யிருத்தலா லிவர்கள், விள்ளுறுந் தாழ்ந்த வோட்டம துடையோ ராமென விளம்பிடப்

படுவா, ருள்ளவா றிவர்கள் புண்ணிய சீல ராகிநல்
லுலகங்க ளவற்றை. 15

நாடிடு வார்க ளென்றெவை யுளவோ நவின்றிடு
மவர்கண்மே லோட்டஞ், சேடுறக் கொண்டே யுயர்
கரை யேறு நெறியினைச் செப்புவ னிதன்மேற், பாடுறு
தவர்கள் கலங்கினும் பசுவாய்ப் பற்றிய வினையினின்
றுயர்ந்தே, பீடுதங் கடமை களைத்தள ராமற் பெட்புட
னடத்திடு பவரும். 16

விரிந்திடு சுபத்தை வேண்டிய வர்களு மிருமறை
விதித்தவேள் விகளைப், புரிந்திடு பவரு மாயவே தியரின்
புண்ணிய வாசனை கொண்டு, தெரிந்திடப் பின்பு மேல்
வரு கின்றார் செப்புநன் னெறியிருந் துயர்ந்தே, பரிந்
துவிண் ணுலகில் விண்ணவ ருடனோர் பாங்குண்மை
யடைகுவ ரெனவே. 17

வேறு.

மந்தி ரங்களாற் கேள்வியில் விதந்தடு மாறிய வவ
ர்தந்தஞ், சிந்தா றும்வினை களையுணர்ந் தவற்றினிற் றிரு
ம்பியல் பினராகி, யிந்தப் பூமியின் மானிட ராகியே
யிருப்பரீ தறிவீரா, லந்தப் பாவயோ னிகளைத்தா
னடைந்தசண் டாளர்மூங் கையரன்றி. 18

உளறு வாயரு மவிதமென் மேலுமுண் டாகிய
வருணங்கள், விளும்பி திப்படி மேவுவர் சூத்திரப் பிற
விக்கு மினிமேலே, தளர்வி லாதுசேர் பவருக்கு மினு
மெவை தாமச குணமென்ன, வுளவோ வோட்டத்தி
னவைகளி னடுவினிற் றமத குணத்தோடும். 19

மன்னி நின்றிடு வாரின்பங் களைப்பற்றி நிற்பதே
மாமோக, மென்ன வெண்ணப்பட் டுள்ளதா மிதிலிரு

டிகண்முனி வர்கடேவ, ரென்னி வர்களு மிச்சித்து மயங்குவ ரினித்தம சொடுமோகஞ், சன்னே யாம்பெரு மோகந்தா மிச்ரமுஞ் சாரந்த தாமிச்ரம். 20

வேறு.

ஓதிடுமிவ் வைந்தவற்றிற் குரோதந்தா மிச்ரமெனவுரைப்ப தாகும், வாதைதா மதகுணந்தான் வருணத்தாற் பிறவிசுய வடிவத் தானு, மேதமற முற்றும்விதிப்படியுமக்கு விப்பிரரே யியம்பப் பட்ட, தாதலா லெவனிதனை யறிந்திடுவா னெவனிதனை யடைவாய்க் காண்பான். 21

இல்லாத தனையிருப்ப தெனக்கொளலே தாமதத்தி னியல்ப தாகு, மொல்லாத்தா மதகுணங்கள் பல்வகையா யுரைப்பனமேற் கீழு முள்ள, பல்லாறு தமசையுள்ள படிபகர்ந்தோ மெந்நரனிப் பண்பை யென்று, நல்லாக்கண் டறிகுவனே யவனிவற்றி னீங்கியே நயமாயுய்வான். 22

குருகீதை
இரண்டாவதத்தியாயம் முற்றிற்று.
ஆகச்செய்யுள் 371.

குருகீதை
விட்சேபயோகம்.

## மூன்றாவதத்தியாயம்.

பிரமன் பகர்வான் மாச்செல்வம் பெற்ற சாதுத்தலைவர்களே, யுரமா யுள்ள துள்ளவணம் ரசசை யுங்கட் குரைத்திடுவன், றிரரா சசங்க ளாயகுண விருத்தங் களைநீர் தெரிந்திடுவீர், பரித வித்த லூக்கமின்மை மனிதுன் பத்தோ டுறுத்த லின்பம். 1

வெய்ய லோம்பல் வாதுசெய்தல் வெறுப்புத் தனித்தல் சேர்தலுட, லுய்யச் சகித்த லூக்கமதும் வலுமைமான மிருவுழைப்பு, குய்யக் கலகம் புரிதலவா பொறுமை கோட்சொல் போர்புரித, லைய மின்றி யெனதெனலாட் கொள்ளல் பந்த மதிசிரமம். 2

வாங்கல் மாறற் றொல்லையுறு வெட்டுப் பிளத்தன் மற்றிதனோ, டாங்கன் ணியர்தந் தலைசிதைத்த லன்றிக் கொடுமை யதிகோர, மீங்குத் தூறல் பிறர்வசையை யெடுத்து மொழித லூண்கவலை, வாங்கு முலகக் கவலையவ்வி யமுமே வம்பு வீண்கொடைகள். 3

நிந்தை விகற்பந் துதிவிதித்த னிகழும் பெருமையதுமொழித, லுந்து கீர்த்தி மேற்கொளலூ ழியஞ்சிசரூட்சை யடிமைசெயன், முந்தி நாடல் பேராசை யூகமவருத்தன் மொழியிழிசொல், வந்திங் கேற்ற னியாயமுடன் றவற லின்னும் வழுத்தலுறும். 4

ஓது கின்ற வாசனைக ளுலகத் துள்ள நரர்களிலும் பேதைப் பெண்களிலும்பூதங் களிலும் பொருள்களிலும்பெரிய, திதி லில்லங் களிலும் வெவ்வே றுயுள்ளனவோ செப்பவையு, நீதி யாருஞ் சந்தாவ மவாநம் பிக்கை தவநியமம். 5

யோக விருப்பா லியற்றுவதும் போக விருப்பாலுஞற்றுவது, மாகும் பற்பற் கன்மமுடனறைசு வாகா செய்வதுவு, மேரு நதியை யியற்றன்மிகத் திவச மிடுதல் வழங்கலினு, மோசை வேள்வி யியற்றுவித்தலோதல் வேட்ட லோதுவித்தல். 6

எற்ற லீதல் சாறுபிரா யச்சித் தங்க ளௌனதிதெனு, மூற்ற குணத்தர் லுளவாய பற்றுந் துரோக

முறுமாய,மாற்று மபகா ரங்கருவ மருவ ருப்புக் களவு
கொலை, யேற்று விழிப்புப் பரிதாபம் வேடந் திமிரோ
டினுங்காதல். 7

அலரும் பத்தி யாட்டமொடங் கறமோ தித்தன்
மிகப்பிரிய, முலக வாத மகளிருட னுண்டாங் காதல்
களுமாடல், பலவாய்ப் பாட லியங்கொள்ளல் பகரு
மிவற்றி னுயத்தோ, டுலவா வவையு மோதாம லொரு
ங்கே நிற்கும் வாசனையும். 8

இவைக ளெல்லாம் ராசசங்க ளெனவே யியம்பப்
படுவனவாம், புவியி லிறப்பு நிகழ்வுவரு வனவு மாய
பொருளையறம், விவரப் பொருளோ டின்பமென விரு
ப்ப மடைந்து விரும்பும்வண, மிவரும் விருத்தி கொ
ண்டவரா யிச்சை முழுதும் விளைவுறலால். 9

செருக்கி நிற்பா ரோவவர்கட் டிகழு நடுவோட்
டமதுடையார், சுருக்க மின்றி ராசதத்தாற் சூழ்ந்தோ
ராகிக் களிப்புறுவார், தரித்த வின்றி மாறாது சனித்
தோ ராகி மிகமகிழ்வார், மரித்தே யிந்த வுலகசுக
மீண்டுண் டாக்க மனங்கருதி. 10

ஈத லேற்ற லாற்றலா குதியா மிவற்றை வியற்றிடு
வார், கோதி லாது பலவாற்ற லுமக்குக் குறிப்பாய் ரச
குணத்தோ, டாதி யந்த மானவதின் விருத்தி யறைந்
தோ மெவனிந்த, வேதைக் குணத்தை யறிகுவனோ
விரைவா யிதனின் விடுபடுவான். 11

தருகீதை

மூன்றுவதத்தியாயம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 382.

ஸத்துவயோகம்.

# நான்காவதத்தியாயம்.

விதிதானு மிஃதேநாது மிதன்மேலிவ் வுலகிலுள மிகுபூதம் யாவுக்குமே, யிதமோடு மிகழ்ப்ப டாததுஞ் சாதுக்க ளின்சுபா வமுமாகிய, வதிகஞ்சி றந்தவம் மூன்றுங்கு ணத்தையு மறைவனு நந்தமன்பு, துதி மேன்மை தெளிவுவே தனையின்மை யழற்றலொடு சொ லுமழுக் கின்மையமைதி. 1

ஆதிக்கி யம்பொறுமை பிடிசமதை வதையாமை யஃகாமை யுண்மைநேர்மை, கோதுற்ற சினமின்மை சாமர்த்தி யஞ்சுசி குலவுரு விண்யோசனை, சூதுற்ற பயனிலா சாரமொ டடுத்தலாச் சிரமம்வீ ணொன்ற துணிபு, மோதுற்ற விவ்விதமெ வன்சில முளனெமுடி வில்லாத ததனையுறுவான். 2

எனதென்ப ததுவோடு நானென்ப துவுநீத் திலங் கவா நீத்தனைத்துந், துனுமொப்ப மாய்க்கொண்டு நசை யற்று நிற்பதே துகளிலா தென்றுமுறையுஞ், சினமி லாச் சான்றோர்சு பாவம்விசு வாசம்வெட் கஞ்சகனை துறவுதெளிவு, மனுமெலிவு மால்கொடுமை யின்மை யுயிர் காருணியம் வருகுற்ற மதுசொலாமை. 3

உறுகளிப் புப்பொறுமை யதிசயம்வ ணக்கநல் லொழுக்கமுடை மையோய்வதி, னறுவிய நிமித்தமுள மதனையா ராய்தனல் லறிவுநா டாமைநழுவ, விறுகின்ற நிகிலத்தை யுந்நீக்க லொவ்வாமை யெனதென்ப துவு மேக்கமு, மறநிற்ற லியல்புமா றுமையு மீனகுவீ ணறை கின்ற வேள்வியும்வீண். 4

வேதம்வீண் விரதம்வீ ணேற்றல்வீ ணில்லறந்தவமும்வீ ணென்றிவ்வித, மோதிடுஞ் சிலங்க ளுடையராய் வேதமாம் யோனியினி லூன்றியவரா, யாதரவொடிவ்வுலகி லறிவுடைய ராயெவர்க ளடைவரோ சத்துவத்தைத், தீதின்றி யவர்களே நன்மையைக் காண்கின்ற தீரரென வேயுறுவரால். 5

நிகழ்கின்ற வத்தீரர் பாவங்க ளியாவுமே நீங்கிடத் துயரமிலராய்த், திகழ்கின்ற விண்ணுலோ கஞ்சார்ந்து பல்வேறு தேகங்க ளைக்கொள்வராற், புகழ்கின்ற சுரலோக மதிலுள்ள சுரர்போற் பெருந்தன்மை பூண்டணியவா, ரிகலீசி தைவசிதை லகுதையாஞ் சாத்விக மெனுஞ்சித்தி களையெய்துவார். 6

இத்தன்மை பிரகிருதி யால்வேறு பட்டவர்க ளெங்கெங்கு மேவானிலே, பொத்தமர்ந் தவராகி யூர்த்துவசு ரோதசர்க ளுவரெனப் படுபவர்களா, நித்தமும் வைகாரி கத்தேவ ராவரென வேநினைக் குங்நிமலரா, நத்தியவெ லாமடைய வுடன்விட்டு நீங்கவு நவில்வன்மை யுடையராவார். 7

என்றுமிச் சாத்விக வொழுக்கமு முங்கட்கி யம்பிடப் பட்டதிதனை, யின்றுமுறை யவ்வணம றிந்தவன் விரும்பிடுவ தியாதெனினு மதனை யடைவா, னன்றியிப் பண்புகளை யெவனறிந் திடுவனோ வவனென்று மறையுமிந்த, வொன்றுங்கு ணங்கடமை யுண்டிடுவ னக்குணங் களுமவனை யுண்டிடாதே. 8

குருகீதை

நான்காவதத்தியாயம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 390.

## அவ்யக்தயோகம்.

# ஐந்தாவதத்தியாயம்.

சதுமு கனுரை பகருவன் குணங் களையுமே
தனித் தனியே, யிதுவி துவென வெடுத்தி யம்பிடற்
கியன்றி டாததே யவணம்,விதமு றுந்திரி குணம தாகிய
விரிவு றும்மவை களுமே, கதிய தாகவொன் றோடுட
னென்று கலந்த தாகக்காண் பனவே. 1

இனிய வைகளிவ் வணமே யொன்றினி லொன்றிச்
சைதனைக் கொளுமே, யுனுமொன் றின்பொரு ளினை
யொன்று நாடி யுய்ந்திடு மொன்றி னிடமாய்,நனியொன்
றோவொதுங் கியேய மர்ந்திடு நவிலொன்றை யொன்று
தொடரு, மனைய சத்துவ மெதுகா றும்முள தோவ
றையது காறும். 2

ஆங்கு ராசத மதனு டனுள தைய மிதனி னிலைகா,
ணீங்கெ துவரை தாம தகுண மிருக்கு மோவது காறு,
ஓங்கு சத்துவம் ராச தகுண முளவெ னச்சொலப் படு
மாற், றீங்கி லாதிவை யொரு திரளாகச் சேர்ந்து
டனினி தமர்ந்தே. 3

கார ணமுள கார ணமிலை யெனக்க ழறிடு முறை
யாற், சீரு டன்வசித் தேய வைகளுஞ் சேர்ந்து வாழ்
வடை வனவே, யோரு மிவ்வித மொன்றை யொன்று
தா னெருங்கி ருப்பன கலந்தே, யாரி டுமிவை களுக்கு
மேலே யருமு யரிட மகல. 4

அன்றி யேயனைய தான மனைத்து மகலுந் தாழ்
வுயர் விலையா, மொன்றிற் கொன்றேப் பாக வுளதா
மோது மிவ்வினை மென்ப, சென்றெங் கேதா மதமு

மேலாய்த் திரியக் கியோனி களிலே, துன்று றும்மியல்
பதனை யுறுமோ சொல்லங் கிரச சதுவும். 5

அற்ப மாயிடுஞ் சத்து வமதி லற்ப மாகவே யம
ரும், வற்கு டனெங்கு ரசசு மேலதாய் மத்திய யோனி
களிலே, யற்புட னேயத் தன்மை யடைய வங்குத் தம
சற் பமதாம், பொற்பு றுகின்ற சத்து வமதிற் புகலற்
பமதென் பர்களால. 6

ஓங்கிச் சத்துவ முயர்ந்தே யொளிரு மூர்த்துவ
யோனி களிலே, யாங்கு றுந்தன்மை யடைய வும்மதில்
ரசசு மற்பம தாமா, னீங்குத் தாமத மிகவு மேகுறை
வாகு நிறைசத் துவமுந், தாங்கி டும்விகா ரத்தா லாகிய
தனியகங் காரந் தனக்கே. 7

தோற்று றும்மொரு தான மும்புலன் களைத்து
லங்கச்செய் வதுமா, மேற்ற சத்துவத் தினைவிட வேறே
வியல்ப தாகவே றொன்றைச், சாற்ற வும்மிலை விதிக
ளாலுயர் சத்து வந்தனி லுளபே, ரேற்ற மதனை யெய்
திடு வர்கள் ராச தத்தினி லிருப்போர். 8

இருப்பர் கணடு நிலையினை யெய்தி யிழிவி னையுள
தமசாம், விருத்தி யுள்ளவர் தாழ்வை யுடைய மிகுபி
றப்பின ராவர், கருத்தி லுழவ ரிடந்தா மதமுங் காப்
ப வரிடம் ரசசு, மருத்த மாகுஞ் சிறந்த சத்துவ மறி
ஞர் களிட மாமே. 9

எனவே வருணா மூன்றி, னிலுமே யியம்பி டுங்குண
மூன்றுங், கனவி சேடம தாக வர்த்திக்குங் கலந்தி வை
கள்வி டாமற், றினஞ்சஞ் சரிப்ப தாயி னும்மவை திகழத்
தனியுள் ளனபோ, லுனவே தோன்று வதுவா றனு
மோதி டும்மறை களிலே. 10

வேறு.

தங்கு சத்துவம் ராசதந் தாமதந் தஙளித்தி ருப்பன வென்னும் விடயங்க, ளெங்கு மோத விலையுதிக் கின்ற தோ ரிரவியைக் கண்டு தீத்தொழி லாளர்க்கு,மங்குறும் பய மாகும் வெயிலினுல் வருந்து றும்வழி போக்கர்கள் வாடுவர், சிங்க விற்சத்து வழுந்தி னகரன் றீத்தொழி லோர் தமோகுண ராவரே. 11

வழிந டப்பவர் வாட்டம் ரசோகுண மன்னு சூரி ய னேயொளி யாகும்போ, தழிவிற் சத்துவ மாதபங் காயும்போ தறைர சகினி யல்பா மவனுக்கு,வழுவி லாப் பரு வங்களி லாகிய மங்க ருமதப் பண்பென் றறிவதாங், குழுவு சோதி களிலெலாஞ் சூழுமிக் குணங்க ளிவ்வித மூன்று மதனதன். 12

வருமொ ழுங்கி லதனதன் மார்க்கமாய் வர்த்திக் கின்றது தாவாந் தன்னிலு, மருவி யவ்வவ் வினம்புகற் ருமத மற்றி ரதமு தலிப ராசதம்,பரவு றுஞ்செழு மை யேசாத் விகமாம் பகலு டனிர வும்பட்ச மாதமும், பருவ மும்மய னஞ்சந்தி யாண்டுடன் பகர்வ தாகிநிற் கின்றதோர் காலமும். 13

மேவு மோரோர் தசையிலு மோரொரு மிளிரு மூவிதத் தன்மைய தாகுமான், மூவி தம்மதா யிதலு மேற்படு மூவி தம்மதாய் வேட்டலுண் டாகுமான், மூவி தம்மே யுலகங்க டேவர்கண் மூவி தம்மதாம் வித்தைகண் மூவிதம், மூவி தம்மே கதியு மிறப்பொடு முறைய தா க விருப்பதுண் டாவதும். 14

நல்ல றம்பொரு ளின்பம்பி ராணனு நவில பான வுதானமும் யாவையும், வல்ல விக்குணங் கண்மூன்றே யாங்காங்கு வரிசை கொண்ட வணமொழு கியாவுமே

யல்ல திக்குண மூன்றே முயன்றிடு மதுகொ டுகுணத்
தாலேயெக் காலத்துஞ், சொல்லு கின்ற சிருட்டிக
ளானவே தூய சத்வம் ரசசு தமசிவை. 15

நிகழு மூன்றுமொன் றோடொன்று மோதாது
நிலைத்து நிற்பதே நித்திய மாகிய, தகைமை யான பகு
திய தாகுமாற் றாமத மவ்வி யக்தஞ் சிவந்தாம, மிகலி
ராசத மியோனியெக் காலத்து மிருப்ப துபிர கிருதிவி
காரமு, மிகுபி ரளயம் பிரதான முற்பத்தி மேவி டும்
மர ணத்தோடுப் பாததும். 16

உலர்த லோடு ததும்பற் றத்தாதது முறைந்து
மேயுடை யாததுஞ் சத்தசத், தலரி வைகளிம் முக்
குணத் தாலாய வவ்வி யக்தமத் யான்மநிட் டைகொண்
டோர், குலவி ருபதை யும்மவ்வி யத்தத்தின் கோதி
லாவபி தானமென் றோரவு, நிலவு மவ்வியத் தப்பெயர்
யாவையு நேர்ந்த பண்புக டத்துவந் தம்மையும். 17

இங்கு நின்ற தனித்த கதிகளு மெவன றிந்து
கொள் வானே திரிகுணப், பங்கை நன்றா யறிந்துடன்
பண்புகள் பலவற் றாலும் பெறுந்தொல்லை யாவையுந்,
தங்கி டாமற் றொலைத்துக் களைந்திடுந் தனித்த காய
முடையவ னாகியே,மங்கி டாததோர் வீட்டினை யெய்து
வான் மன்னி டும்புகழ் மாவிப் பிரர்களே. 18

குருகீதை

ஐந்தாவதத்தியாயம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 408.

குருகீதை.

மகாத்மயோகம்.

## ஆருவதத்தியாயம்.

அயனுமோது மவ்வியத்த மதனினின்று மாதியிற்
பயிலவுற்ப விப்பதும் பகர்மகா மதியுமா [மே
மயர்விலாம கானெனும்மோ ரான்மாபண் பெவைக்கு
முயல்வோடாதி யாகநின்று முன்படைப் பெனப்படும்.

ஆத்துமா மகான்மதி யடுத்தவிண்டு விந்திர
னேத்துசம்பு பிரஞ்ஞைபுத்தி யினியவீ ரியமுள
ஞேத்துரைக்கி யாதித்ருதி வுவலப்திபு மிருதியென்
ருத்தர்களு ரைத்திடும்பர் யாபநாம சொற்களால். 2

சந்தமாச் செறிந்தமகா தத்வமே சிறந்ததாய்ச்
சிந்தனைசெ யும்மதனைத் தேர்ந்துநிட்டை கொண்டவ
னிந்தப்பூவின் மாலுருன தெங்குங்கால்கை கொண்டுமே
யுந்தவெங்குக் கண்சிர முறுசெவிவா யுற்றரோ. 3

உலகனைத்தை யும்மளாவி யுற்றுநிற்ப ததுபெரும்
பொலனுறும் பெருமையோடு புருடனென் றெதனிலுஞ்
சலனமின்றி யேயகத் திருப்பதுஞ் சமீபமு
மிலகுகின்ற லகிமைப்ராப்தி யீறிலாத சோதியும். 4

அழிவிலாத வீசரனு மாமெவ ரதைப்பிடித்
தொழிவிலாத்தி யானமுற்று நிட்டையோடு முண்மை
யில், வழுவலின்றி யுலகவின்பம் வர்ச்சனஞ்செய் தோர்
களும், பழுதிலாவத் தத்துவத்தின் பகர்விடய மாகவே.

அரியவித்தை யுள்ளதென் றறிந்துளோரு மாவரோ
விரைவிலின்னு மெவரவா விடுத்தவர்க ளாகியே
மருவழற்சி வென்றவர்க ளாய்த்தெளிந்த மனதுட
னொருவுகின்ற வெனதுநானெனன் பதையகற்றி யுண்மை
யாம். 6

மேதையுள்ள விவர்களியாரும் விடுபட்டோ ராகியே
கோதிலாம கத்தின்றன்மை கொள்வரம்ம கத்தெனும்
போதவான்மா வின்னுயர்ந்த புண்ணியக் கதியினை
யோதெவன்று ணோர்வனேவத் தீரனெவ் வுலகினும். 7

மயக்கம தடைந்திடானம் மாலெனப் படைப்பின்
முன், பெயர்ப்பிலாச சுயம்புவாய்ப் பிரபுவாவ ளிவித
மாய்த், தயக்கறுந் தகரவானிற் றங்குவோனும் பிரபு
வும்,வியக்குறும் பரன்புராணன் மேவுகின்ற புருடனும்.

பொருவிலாத விசுவரூபன் பொன்மயனு மாகிய
திரிபகன் மகாத்துமாவைத் தெரிந்துகொள்வ னேவவ
னருமையாகு மேதையோனு மாகுவ னதன்றியு
நிருமலமாப் புந்தியைக்க டந்துமே நிலைபபனே. 9

கருகீதை
ஆருவதத்தியாயம் முற்றிற்று.
ஆகச் செய்யுள் 417.

குருகீதை.

பிரஜாசர்க்கயோகம்.

## ஏழாவதத்தியாயம்.

ஆரணன் னறைகுவா னம்மகான் முதலிலே
வாரமோ டியாவனும் வடிவதைக் கொண்டுமே
தீரமாய் வந்தன னேவவன் செப்பகங்
காரனென் றேபெயர்க் கழறிடப் படுவனால். 1

ஏம்பனு னேயெனத் தோன்றிய வவனிரண்
டாம்படைப் பென்னவு மாவனுங் காரமுந்
தாம்பற்பூ தாதிவை காரிகன் றைசசன்
மேம்படுஞ் சேதன்ன் விதிபிர சாசர்க்கன். 2

எனவெணப் பட்டவ னின்சுரர் கட்கலா
லுனுமன திற்குமுற் பத்தியா ரும்பிடுங்
கனிவுறுங் தேவன்கர்த் தாதிரி வுலகினுக்
கனியமி னுமென வறையவற் றிணையெலாம். 3

வேறு.

ஆவ லாயபி மானிப் பவனென
வோவி லாங்கார மேயோதி டப்படுந்
தேவத் யான்ம வறிவிற் றிருத்தியை
மேவக் கொண்ட வருமேன் முனிகளாய். 4

குலவு மாத்துமப் பாவனை கொண்டுளோ
ரிலகு மத்யப னம்மத்வ ரங்களா
லலகில் சித்திபெற் றோர்களு மாகிய
வுலவி லாப்பெரி யோர்கட்கென் றும்முள. 5

பதவி யிந்தப் பனுமகங் காரமே
யுதய மாமுக் குணங்களை யுண்கின்ற
பொதியுஞ் சீவனுக் கேபுத்தி நாமெனுங்
குதியபி மானங் கொண்டுபூ தங்கட்கு. 6

முன்னந் தோன்றி மொழியும்பூ தங்களைப்
பன்னு றும்வடி வாக்கிப் படைப்பதா
மின்ன மும்விகா ரங்கொண் டெழுந்ததாய்
மன்னும் பல்லுல கங்களாய் வர்த்திக்கும். 7

ஆங்கு மவ்வண மேதன தாகிய
வோங்கு கின்ற வொளிரும்வி சும்பினு
ளீங்கி டாத விசுவத்தை யெநிதம்
பாங்க தாக விரும்பிடப் பண்ணுமே. 8

தருக்கை

ஏழாவதத்தியாயம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 425.

திருக்கீதை
வியவஸ்தாயோகம்.

## எட்டாவதத்தியாயம்.

அஞ்சவூர் தியுமறைவா னகங்காரத் திருந்துதன் மாத் திரங்க ளாய,மஞ்சிவர்வான் வளிவன்னி வண்கமல மண்ணிவைகள் வநத வன்றே,விஞ்சியவப பூதங்க ளாந் தினிடத் திருப்பனவா யிளிரு மோசை, யெஞ்சலிலாப் பரிசமுரு சுவைமணமென் பனவவற்றை யேற்பதற்கே.

மயங்கிமிகப் பூதமெலாங் கிடப்பனமா பூதங்கண் மடிய நேருந்,தயங்குபிர ளயமுடிவிற் சருவவுயிர்க் கச்சமது தானுண் டாகு,மியங்கெந்தப் பூதமெதிற் றோன் றியதோ வதனிலதி லாமற் போகு, முயங்குபூ தங்க ளெலாம் பிரதிலோ மங்களா யொடுங்கும் பின்னை. 2

அனுலோம மாயுதிக்கு மாதலின்ச ராசரமா யாம் பூ தங்க, ளுநுமிலய மாகுங்கான் மிருதிகொண்ட தீரர் களோ வொடுங்கா ரென்றும், பனுமொழியும் பரிசமுரு சுவைமணமா மிவைபகர்கா ரணரு பங்க, ளினுநித்தி யங்கள்பல காரியவச் சாய்ப்போக மெனுமிவ்வெல்லாம்.

அனித்தியங்க ளேனெனிலோ வாசையினு லாம் பிறவி யதனிற் றோன்றி, யினிப்பறுசா மானியமாய்ச் சத்தற்ப மேனுமிலா திதிலோன் றென்றை, யுனித் துருவி யோங்கிவளர் தசையுதிர பிண்டங்க ளுவையே யோதுந், துனுற்றவொளி யுருவங்க ளாதலினுல் வருந் துறசி விகளாய்ச் சோரும். 4

ஆதலினுற் பிராணனுடை பானவுதா னமுமடர்ச மானவ்யான,மோதிடுமிவ் வாதமைந்து முள்ளுருவை யூடுருவி யோடுகின்ற, தேதொடிவை வாக்குமனம் புத்திகளோ டுடன்கலந்திங் கெட்டென் றெண்ணுந்,

தீதில்வ யவமுள்ள நுண்ணுலக தாமெவர்க்குஞ் செவி தொக் கோடும். 5

விழிநாசி நாவிவைபு மடங்கியே மனமும்விசா ரிக் கப் பட்டே, நழுவாது புத்தியொன்றை நாடிநிற்கு மேலவற்கு நவிலிவ் வெட்டா, மழநீக்க ளொக்காலு மனதையழற் முவோவவ னந்த நித்ய, வழுவின்மங் களமாநிட்களமுடைவாளி தின்மீண்டும் வருத லின்றே.

விப்பிரரே பத்தொன்று விதமாயெப் புலன்களேயு மேன்மை யாகச், செப்புவரோ வகந்தையினி னின் றுதித்த வவற்றினையான் செப்புகின்றேன்,வைப்பாகுஞ் செவிதுவக்கு நாநாசி கண்குதங்கால் குறிகை வாக்கா, மிப்படியிம் மனதோடு மிந்திரியங் களின்வகையிம் முறையை முன்பே. 7

அடக்குதல்செய் திடல்வேண்டும் பின்பிரமம் விளங்குஞா னேந்திய மைந்தோ, டொடுக்கரிதாங் கன் மேந்தி யங்களவை யைந்தெனவு முரைப்பர் மேலோர், கடக்கிவற்றுள் செவிமுதலைந் ந்தயுநிசமாய்ப் புந்தி யுடன் கலந்த வென்பா, ருடுத்தவிசே டமதன்றியெவை யுளவோ வவைகருமத் துறவா கும்மே. 8

இரண்டுவகை யிலுமனதுண் டெனவறித லாம் புந்தி யிதுவோ தான்பன், னிரண்டாவ தாமெனவிப் பதினொன்று புலனிரையா யியம்புங் காணீர், முரண்டு படா திவ்ற்றையிவ்வா றறிந்துபண் டிதர்கரும முடிந்த தென்றே, யிரண்டுபடா தெனுவரெலாப் புலன்களும் பல் வகையிருப்ப தினிச்சொல் வேனே. 9

வேறு.

ஆகாய முதலாம் பூத மனுவத்தி யான்ம மாகி லாகுமே செவிய தாக வதிபூத மாகி யோசை

யாகின்ற ததிதெய்வம்மாய்த் திசைகளா மிரண்டாம்பூத
மாகிய வாய்வத் தியான்ம மாய்த்துவக் கதுவு மாமே. 10

பகரதி பூத மாகிப் பரிசமா மதிதே வாகித்
திகழ்கின்ற மின்னு மூன்று வதுபூதந் தேயு வென்பா
ரிகழிலா வதுவத் தியான்ம மாய்விழி யென்ப தாகு
மகலுறு வதிபூ தம்மா யுருவாகு மதிதே வாகி. 11

அலரிய நான்காம் பூத நீரென வறிதற் பாற்று
நலமுட னதுவத் யான்ம மாம்போது நாவே யாகுஞ்
சொலவரு மதிபூ தம்மாய்ச் சுவையாகு மதிதே வாகி
மலர்தரு மதியா மைந்தா வதுபூத மண்ண தாமே. 12

நவிலதிங் கத்தி யான்ம மாய்நாசி யென்ப தாகுங்
கவியதி பூதமாகிக் கந்தமா மதிதே வாகிப்
புவியினில் வாயு வாகு மிவணம்பூ தங்க ளைந்தில்
விவரமாய் மூன்று மூன்று யுளவிதி யுரைத்த தாமே. 13

ஈதலாற் புலன்க ளியாவு மினிப்பல வகையா நிற்ப
தோதுவன் றத்து வந்தே ரொள்ளிய மறையோர்கால்க
ளோடொடு மத்தி யாத்ம மென்கின்று ரதிபூ தந்தா
னுதமாய் மிதிக்குந் தான மதிதெய்வ விண்டு வாமே. 14

கீழ்நோக்க பான மாகுங் கிளர்குத மத்தி யாத்மம்
வாழதி பூதந் தானு மலசல விசர்க்க மாகுந்
தாழ்விலா வதிதெய் வந்தான் மித்திரன் சர்வ பூத
மூமிழொடுண் டாகுந் தான முபத்தமத் யான்ம மென்ப.

அதிபூதஞ் சுக்கிலஞ்சொ லதிதெய்வம் விரிஞ்ச
னுகுங், கதியொடத் யாத்மந் தேர்ந்தார் கைகளத் யாத்ம
மென்பா, ரதிபூதஞ் செய்கை யாங்கே யதிதெய்வம்
வலாரி பின்னர், மதிபூர்வம் விசுவ தேவர் களினின்று
முதித்த வாக்கை. 16

அழகொடத் யாத்ம மென்ப வதிபூத மொழியா
ராங்கே,பழலுந்தீ யதிதெய் வந்தா னகன்றிடைம் பூதந்
தம்மை, விழைவுட லாகக் கொண்டே விரியுல கதனை
யாட்டுந், தழைவுறு மனமத் யான்ம மதிபூத முஞ்சங்
கற்பம். 17

தண்மதி யதிதே சர்வ சமுசாரத் தினையுண்
டாக்கு, மண்ணகங் கார மத்தி யாத்தும மதிபூ தந்தா
னுண்ணிக முபிமா னஞ்சொ லுருத்திர னதிதே வாகு,
மெண்ணுமிந் நிரிய மாறு மின்பொடா ராய்ந்து செல்
லும். 18

தெளியும்புந் தியுமத் யாத்ம மதிபூதர் தேட லாகு
மளியுறும் பிரமா வாங்கே யதிதெய்வம் பூதங் கட்கு
நளியிருப் பிடமு மூன்றே நான்கிலே யவையாவென்றுற்
களிதரு தலஞ்ச லம்பேர் காயமென் றறிவ தாமே. 19

அப்படி யண்ட சம்முற் பிசஞ்சு வேத சத்தோ
டொப்பிய சராயு சம்மென் றுற்பத்தி நான்கே யாகு
மிப்படிப் பின் பிழிந்த வுயிர்புள்ளூர் வனவு மெனச்
செப்பிவை யண்ட சங்க ளெனத்தெரிந் திடுவ தாமே.

## வேறு.

இழிவுறு புழுக்கட் பூச்சிகண் முறையாச் சுவேதச
மென்பன விந்தத், தழுவுறு மிரண்டா வதுசன்ம மிக
வுந் தாழ்ந்ததாந் தலைமையந் தணரே, கெழுமிய பரு
வத் தாற்றரை யதனைக் கீழ்ந்துகொண் டெவைகளுண்
டாமோ,வழிவுறு மந்தப் பூதங்க டமையே வறைவருத்
பிசங்க ளெனவே. 21

செலுந்திரி யக்கு கதியுடை யனவுந் திரியங்கு மதி
யுடை யனவு, மலதுநாற் கால்க ளுடையவு மிரண்டு கா
லுடை யனவுமாய் முறையே, புலும்விகா ரங்கொள்

விலங்குகண் மனிதர் சராயுசப் பூதங்க ளாகும், பலன்றரு தவமும் புண்ணிய மென்னும் பகுப்பினை யுடையதா மென்றும். 22

உள்ளபூ தேவப் பிறவியுண் டாமென் றோர்ந்திடத் தருவதென் றன்றோர், கொள்ளுறு நியாய மாதலினந்த வேள்வியைக் குயிற்றிட வேண்டி, யொள்ளிதாய்ப் பிறந்தோ னவனுக்குக் கன்ம மோதுத லீதல்வேட் டெதலு, மௌ்ளுறு வறமே யெனப்பல வகையாயேற்பதான் றோர்வச னமதாம். 23

இதனையே விதியா மெவனறிந் தியோக நிட்டைபெய் திடுவனோ வவனே, யதமமாம் பாவ மனைத்தையும் விடுத்தோ னுருவ னென்னவே யறிவீ, ரிதமுடனிவ்வத் யான்மநிட் டையினை யிசைத்தன னுள்ளவாறுமக்குத், தகையுமிவ் வறிவிங் கறிஞர்க்கே யடையத்தருவதாந் தருமசீ லர்களே. 24

புலனொடு விடயங் களையும்பூ தங்க ளாந்தையும் பூட்டியே மனதால், வலமிலச் சினையை யிட்டிடல் வேண்டு மனதெலா மார்க்கங்க டமிலும், வலனுடனடக்கஞ் செய்பொழு திந்த வருபிறப் பின்பவா வுதலி, லலரறி வுடன்சேர் சத்துவ வறிஞர்க் கந்தப்பே ரின்பமுண் டாமால். 25

அப்புறநு னுகுந் தியானத்தை யுண்டு பணுஞ்சுபமாகிய வோய்வைத்,தப்பறு மெனிதா யருமையா யடையச் சருவபூ தத்தினு முளவா, மொப்பறு நெறியோதுவன்குண வோய்வை யுடன்றமீ இ விருப்பம தொழித்துத், துப்புடன் றனித்துத் தன்மய மாயோர் பதங்கொடு சுகமதா யிருத்தல். 26

என்னுமீ தேகன் மனோமய நெறியா மியம்புகூர் மமுமுறுப் பைந்து, முன்னியே யடக்கிக் கொள்வது போலக் காமங்க ளனைத்துமுள் ளடக்கிச், சொன்னவா றுண்மை யறிந்திரா சதத்தைத் தொலைத்தெலா வற் றினு மெவனே, துன்னுத லின்றி விடப்படு வானோ வவனென்றுஞ் சுகியெனச் சொல்வார். 27

அடர்ந்திடு காமங் களையுளே யடக்கி யவாவற நிட்டையை யடைந்து, படர்ந்திடு பூதங் களிலெலாஞ் சமமாம் பாவனை யுடையவ னழியாத், தடந்திகழ் பிரம மாவதற் குரியன் சாற்றிடும் பொருளையே நாடு, மடந் திகழ் புலன்க டமையொடுக் கியதால் வழுத்துறு முல கமு மடங்கி. 28

ஓய்வுறு மௌனி யின்வச மிருக்க வொளிறத்தி யான்மத்தீ யதிக, மீயெழுந் தெரியும் விறகினுன் மூட்டு மிளிரனன் மேற்கொடு மெழும்பி, யோய்விலாப் பெரிய வொளிகொடுங் கொளிரு மோவந்த விதம்புலன் பொ ருளை, மாய்வுறப் பற்றி மேலெழு மகானு மாத்துமா மாட்சிமை யடையும். 29

தன்னுளே பூதங் களையென்றுந் தெளிந்த மனதொ டுந் தானறி குவனே, லன்னபோ தந்தப் பரஞ்சுடர் சூ க்கு மத்தினுஞ் சூக்குமமென் றறிந்தே, யுன்னவே யெ ங்கும்பரவிடு மதற்கே யுருவன லோட்டநீர் பரிசம், வன் னிலை வாயு கொடுமலா சயமு மகிசெவி வானமு மாமே.

பிணியொடு பீடை களையுடை யதுவும் பேசுமைந் தருவிசூழ்ந் ததுவு, முணர்விலாப் பூத மைந்துசூழ்ந் ததுவு மொன்பது வாயில்க ளுளது, மெணுமிரண் டிறைவ ரிருப்பது மழுக்கே யிருப்பது மின்னமு மிகவு, முணரவொண் ணுத தநுந்திரி குணத்தோ டோதுமுத் தோடங்க ளுளதும். 31

13

கலவியி லன்பாய்க் கலங்கிநிற் கின்ற சடமதே காண்சரீ ரமதாகும், சலமுடன் சருவ னோக்கிலு மீது சத்துவத் திற்குரே ரான, விலதம சிணைக்கொண் டிருப்பதைப் பற்றிச் சரித்திடற் கரியதா மிதுதா, னிலவுமிவ் வுலகிற் காலசக் கரமாய் முயன்றிடு னேர் மையு ளீரே. 32

அருந்துயர் மோக மெனப்படு மீதோ ராழ்ந்ததும் பயந்தரு வதுமாம், பெருகட லிஃதே யமரர்க ளுலகும் பேசெலா வுலகுநீட் டிடவும், சுருங்கிட நினைக்க வல்லதா மிதன்மேற் சொலுபுலன் களையொடுக் குவதைப், பொருந்திடக் கொண்டு சினம்பயங் காதல் பொய்பகை விடமுடி யாமல். 33

உருத்திருக் கின்ற மயல்களை யொழிப்பா னியாவரே வுலகினி லிந்த, வருத்தியின் மூன்று குணங்களுந் தாது வைந்துட னமைந்தது லங்கள், கருத்துட னடக் கப் பட்டவோ பின்பா காயத்தி லவனுக்கே யழியாப், பெருத்ததோர் பரம பதம்பெறப் படுமைம் புலன்களா கியபெருங் கரையும். 34

மனமெனும் வேகங் கொண்டகொண் டாடல் வனமுமா லெனுமடு வுடனே, கனமுடன் பெருகும் விருத்தியா நதியைக் கடந்துமே காமக்குரோ தங்க, ளெனுமிரண் டினையும் வென்றிடல் வேண்டு மிதன்பின ரவனழுக் கணைத்துந், தனிலிருந் தகற்றி மனதினின் மனதைப் பூட்டியே தன்னிலே தன்னை. 35

காண்பவ ளுகி யப்பரம் பொருளைக் கண்டறி குவனலாற் சகல, சேண்படு பூதங் களிலுமே யெல்லாந் தெரிந்தவ னங்கங்கே பலவா, றெண்பட நின்றோர் விதமதாய்த் தன்னிற் றன்னையே யினிதறி கின்றான், மாண்ப

மை விளக்கி லிருந்தும்பல் விளக்கு வருவது போற்பல விதமாம். 36

உருவமும் வேறே ருருவத்தி னிருந்தே யுதித்தது வெனவறி குவனால், வருமவன் றனே விண்டுமித்திரனும் வருணனு முளரியும் விதியு, மருமையா யினுந் தா தாவிதா தாவு மாமெலாப் பூதங்க டமக்கு, மிருதய மாகு மெவ்விடங் களினு மெழின்முகப் பிரபுவு மவனே.

தோற்றிய மகானு மாத்துமா வாகித் துலங்குகின் றனவன் றனையே, போற்றிசெய் மறையோர் தேவர்க ளசுரர் புகலியக் கர்கள்பிசா சிவைக, ளாற்றல்சால் பிதுர்க்கள் கருடார்க் கதர்க ளாகிய பூதர்க ளொன்றுந், தோற்றம தில்லா விருடிக ளெவரு மென்றுமே தொழுதிடுகின்றார். 38

தருகீதை

எட்டாவதத்தியாயம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 463.

குருகீதை.

ஐசுவரியயோகம்.

## ஒன்பதாவதத்தியாயம்.

அயனறைவான் மானிடர்க்கு ளிரண்டாஞ் சாதியரையன்ரச குணப்பிரதா னத்தோ னவன், கயமூர்திகட்குளிறை கான கத்திற் கலந்துவாழ் விலங்கவைகட்கீசன் சிங்க, மியல்பசுக்கட் காடும்வலை யினிலே யுள்ளவெவைகட்கு மரவுந்தே னுக்கட் கேறு, நயப்பெண்டீர்க்குப்புருட னரச னவ னவிலிலவு சிலைசிறுதேக் கறு காற் காம்பு. 1

மூங்கிலிலை மரவகையின் முதன்மையாகு மொழி
யிமயஞ் சகியமொடு பாரியாத்ரம், பாங்குவிந்தி யந்திரி
கூடஞ்சுவேதம் பகர்நீலங் குருக்கந்த மயிந்த்ரம் பாச,
மோங்குமால் யவன்கோட்ட வன்குன்றியாவு முரைமலை
கட் கிறையாகுங் கணங்கட் கெல்லா,மீங்குமருத துவரி
ரவி கிரகங்கட்கே யிறைமதியோ வுடுவினங்கட் கெல்
லா மீசன். 2

தென்றிசையோன் பிதிரருக்கு நதிகட்கெல்லாந்
திரையாழி நீரெவைக்கும் வருண னவான், வென்றி
மருத் துவர்தமக்கு விண்ணோர் வேந்தன் வெப்பங்கட
மக்கிரவி சோதிக் கெல்லா, நன்றியுள மதியாகும் பூதங்
கட்கு நவிலனலி மறையவர்க்கு வமைச்ச னீச, னொன்
றியவோ டதிகட்குப் பதியாஞ்சோம முறுவலிவுள் ள
வர்களிலே சிறந்தோன் மாலாம். 3

செய்யவடி வியற்றுபவர் களிலேதேவ சிற்பியிறை
பிராணிகட்குச் சிவனே யீசன்,மெய்யான தீக்கையுள க
ருமங்கட்கு வேள்விபதி தேவருக்கு மகவா னீச, னய்ய
மிலா வாசைகட்குத் தரங்கர்த்தாவா மந்தணர்க்கு மகி
மையுள்ள சோம ராசன், றுய்யபதி யரதனத்துக் கள
கையாளி சொலும்பிரசை கட்கீசன் விதியு மாமே. 4

இவைபூதங் கட்காசா கியவுற்பத்தி யெவ்வுயிர்க்
கும் பிரமரூ பன்று னுண, சவிமகா னும்யானே யெனி
லுமாயோன் றன்னிலுமே லாம்பூதந் தானென் றில்லை,
யிவையன்றி பிரமமய மானமாலு மெல்லார்க்கு மிராசா
தி ராச னவான், றவகடவுட் டன்மையனுய்க் கருத்தா
வாகத் தான்றேன்றி யாகவுமே வகுத்தே யோர்வீர். 5

நார்கள்கின் னரரியக்க ருரகரர்க்கர் நவிலமரர் காந்
தருவ ரசுர ரோடு, முரமிகுதா னவரிவர்கள் யாவருக்கு

மோதுமவ ரேயீசன் காமியானோர், புரிவுடனே தொடர்
கின்ற மகளிர்க்கெல்லாம் பகர்வாம லோசனைமா தேவி
யென்னும், பருவதபுத் திரிமாகே சுவரியென்னும் பார்
ப்பதியை யரசியெனப் பகரு வாரே. 6

மன்னுலகின் மகளிர்தமக் கரசியாய மங்கலையா மு
மையவளை மதித்தேயோர்வீர், பன்னுமிர திகட்கரசு ப
ணத்தோடுள்ள பாவைகள்ருபிணிகட்குளரம்பை மாத
ர், துன்னரச ரறத்தைவிரும் பினவராய்பூ சுரரறத்தை
க் கட்டுகின்ற வணைகளாவா, ருன்னியவா றரசனுமந் த
ணருக்கென்று முதவிபுரி தலின்மிகவு முயல வேண்டும்.

எவ்வரசர் நகரமதின் மேலோரானோ ரிருப்பரோ
மதிப்பறவ் வரசருந்தந், தவ்வவிலாக் குணங்களா வி
யாவற்றுலுந் தாழ்ந்தவராய் மறித்துமா னிடமாய்த்
தோற்ற, மிவ்வுலகின் மாறிச்செல் வார்களந்த வியலர
சர் நகரமதி லுளசாதுக்க,ளவ்வியமில் லாவுதவி யடைவ
ரோவவ் வரசர்களிவ் வுலகின்மிகக் களிப்பை யார்ந்தே.

மறித்துமே சுகம்பெறுவார் பெரியதன்மை மரு
வினவ ராயிதன்மே லழிவிலாத,வறத்தினிய லதையறை
வோ மஙிஞ்சைதானு மதிகவுத் தமமாகு மறமலாத,மற
த்துடன்செ யிமிசையது பாவமென்னும் வடிவுடைய
தமரொளி வுருவுளோர்கள், வறப்புறுமா னிடர்கன்ம
வுருவமுள்ளார் வான்சத்த வுருவம்வளி பரிசரூபம். 9

சோதியுரு வுடையதுநீர் சுவைசொரூபஞ் சொலு
ம்பூதம் யாவையுமே சுமக்கும் பூமி,யோதுமணத் தினை
யுருவாக் கொண்டதாகு முயிர்மெயிலக் கணபாடைக் கு
ருவஞ் சொல்லாம், போதுமனஞ் சிந்தையுரு வாகுஞ்
சிந்தை புத்தியுரு வாகுமெனப் புகல்வதாகும்,போதம

னத் தாஎிஃனத்த பொருளையெல்லாம் புத்தியா லிவ்வி டநிச் சயிக்கின்றனே. 10

புத்தியுநிச் சயமென்னும் வடிவமாகும் புகலுமி தி லேயமிலே சித்தத்திற்கோ, வொத்தியா னம்வடிவா மவ்யத்தத்திற் குயர்தெளிவு வடிவாகும் யோகத்திற் கோ, சுத்தபிர விருத்திவடி வறிவதற்கோ துறவுருவ மாமறிவை முன்னிட்டேதான், வித்தகனிவ் வுலகத்திற் றுறவுகொள்ளல் வேண்டுமெறி வுடனலமாய்க் கலந்த நீத் தோன். 11

சிறந்தபத வியைப்பெறுவான் றமசைத் தாண்டிச் சேர்மரண மூப்பிவற்றை யொழித்தோ னாகி, யறைந்த விரண் டின்றியுள தைதக்காண் கின்ற னன்றியற மிலக் கணத்தோ டைடவாய்ச் சொன்னோம், மறந்தவிரு மு னிவர்கா ளிதற்குமேலே வழுத்திடுவன் குணங்களின் கொள் கையைநன் றக, வுறைந்தபிரு திவிகந்த முகரு நாசியோதுநா சியிலுள்ள வுலவை தானும். 12

வேறு.

பார்த்து நாற்றங்கொள் வதிலவ்வா றேவினி யோ கிக்கப் படுகின்ற, தீர்த்தத் தின்வடி வாயென்று முடை யது செழுஞ்சுவை யதுதானுங்,கூர்த்து நாவினுன் மாத் திரங் கொளப்படுங் கோதினு வினிலுள்ள,வீர்த்த விண் மதி சுவையுரு சிப்பதி லேவிடப் படுவானே. 13

குல்வுந் தேயுவின் வடிவொளி யிதுக்கணுற் கொளப் படும் விழியாரு, மிலகு சூரிய னுருவினைக் கவர்வதி லேவிடப் படுவோனு, முலவு மாருதம் பரிசமாந் துவக் கினு லோர்வதா மெக்காலுஞ், சொலுந்து வக்கினுல் வளியது பரிசத்தி லேவிடுந் துகளின்றி. 14

வானி னுள்ளது மொழியிது காதினல் வாங்கிடப் படுங்காதிற், ருனு ருசைகள் சத்தத்தைக் கவர்தலிற் ருன்செலுத் திடலாகு, மான தத்தின்பண் போசிந்தை பிரஜையா லதுமதிப் புறலாகும்,தீன மின்றியே யிருத யத் திருந்திடுஞ் செய்யசே தனதாது. 15

பளகிற் சிந்தையைக் கொள்வதி னியமிக்கப் படும் புந்தி யதுதானும், தெளியு நிச்சய மெனுமறி வான் மிகச் சிறந்ததே யாமென்ப, வுளவு றுதியாற் கொளப் பட்ட தாயின வுண்மையிற் கொளக்கூடா, வளவி லவ் யத்த வடிவமே யதுவிதி லையமு மிலைப்பாரீர். 16

குலவு றும்மவ னேகுறிக் கொண்டுமே கொளப் படா தவனுஞ்சீ, ரலகி னித்திய நிர்க்குண சுபாவனு மாகிய சேத்ரஞ்ஞ, னிலகி டுங்குறி யில்லவன் கேவல மறிவியல் பாயுள்ளோ, னலரும் பண்பெலாந் தோன்ற லு மறைதலு மாய்நிற்கு மவ்யத்தம். 17

ஈது சேத்திர மென்பதா குவததி லென்றுமே யிருந்தேநா, னேத மின்றியே பார்க்கின்றேன் கேட் கின்றே னெங்குமே யறிகின்றேன், றீதி லாப்புமா ன தனைக்கண் டறிதலாற் சேத்ரஞ னெனவாவான், கோ தி லாவவ னுற்பத்தி யாயவெவ் வோர்குண விருத்த த்தை. 18

கண்டு மேவரு கின்றனன் முதலிடை கடையெ னும் வரம்போடு, மண்ட சேதன மாகவு முள்ளது மா க்குவ ததனலும்,பண்டி டையிடைப் படைத்திடப் படு வன வாகும்பண் புகளந்த, வண்டு தற்கருஞ் சேத்ரஞ ஞகுமான் மாவைத்தா னறியாதே. 19

மருவு முக்குணங் கட்குமே லெதுநல மகத்துள தோவந்த, வரிய சத்பதார்த் தைச்சேத் திரஞனே யறி

வன்மற் றெதுமோராத்,தருமந் தேர்ந்தவ ஷிகத்தினிற்
குணங்களுஞ் சத்துவத் தையு நீத்துத், திருகு குற்றம
தற்றவ னுய்க்குணு தீதனு கியபின்னர். 20

வேறு.

செய்யதோர் சேத்திரஞ் ஞ னிடஞ்சேர்வா
னவனு மன்றி, யையமாந் துவைத புத்தி யறைநதி
சுவாகா காரம், வெய்யதென் றிவைவிட் டோனுய்ச்
சலிப்பின்றி வீட்டை நீத்துப், பையச்சேத் திரஞ்ஞ
னுகிப் பரமப்ர புவுமா வானே. 21

ஒன்பதாவதத்தியாயம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 484.

குருகீதை

ஆத்தியந்தயோகம்.

## பத்தாவதத்தியாயம்.

இயல்ப தாகவே யிவைக்கு மேலுறபி தான மும்
மரிய வியலுட, னுயர்வ தாகவுள தும்முதற் கடையொ
டிடையை யும்முரிய ததுவுமாய்ச், சயம தாகவதை
யேற்ப தற்குளதொர் தந்தி ரங்களவை யுள்ளவோ,
பயனு றும்வணம தத்து வங்கடமை பகருவன்பர விரி
ஞ்சனே. 1

முன்னு கின்றபகன் முன்னதா மிரவு பின்னதா
மொழியு மதிகளி, லுன்னு கின்றதொரு சேட்ட மா
தம துடுக்க டம்மிறிரு வோணமாந், துன்னு கின்றபரு
வங்க டம்மிலிறை சொல்லுபின் பனிய தாகுமான், மன்
னு கின்றபல மணம வைக்குமுதல் வதியு மண்ணென
வகுப்பதே. 2

உருசு வைக்குவன மாதி பானுவெனு மொளியு மாதிபல வுருவினுக், கரிய வூறுக டமக்கு வாயுமுத லறைபொ லிக்காசு வானமே, பொருளை யோடு மிவை யைந்து பூதமதி லுள்ள தானமிகு பண்புகள், பரிவ தாகவெகு பூதவாதிலை யினித்தொ டர்ந்துபகர் வாமரோ.

வேறு.

ஒளிகட்கிறை சூரிய ஞயிடுவ னேனும்பூ தங்க டமக்கிறைதான், மினிரக்கினி வித்தை யெவைக்குமிக மேலாங்கூ யத்திரியே முதலாம், விளுமச்சுரர் கட்கெவை யும்முதவும் மேலாம்பிர சாபதியே முதலாங், கொளுபன் மறைகட்கு முதன்மையுறுங் கோதற்றிடு பிரணவ மேமுதலாம். 4

மொழிகட்கினி யோது பிராணனது முதலா மெம்திவ் வுலகந்தனிலே, கழியாதுறு கட்டு ளகப்படுமவ் வெல்லாங்கா யத்திரி யாகுமரோ, வழியாதநல் பண் மறை யாப்பவைகட் கரிநாங்கா யத்திரி யாதியுமாம், நழுவும்முயிர் வர்க்கம வைக்குவரும் நாளென்னும் விருத்தியு மேதலையாம். 5

வேறு.

விலங்கெவைக்கு மாவாதி மிருகமானி டருக்காதி
பலன்றரும கீசுரனும் பட்சிகட்குப் பருந்தாதி
கலந்தருவேள் விகடமக்கு ணவிலுமா குதியாதி
தலந்தனிலூர் வனவெவைக்குஞ் சர்ப்பமுதல்விப்பிரரே.

கிருதமுத லுகங்கட்குக் கிளருநவ மணிக்கெல்லாந்
தரும்பிரபை பொன்னுதி தானியத்தில் யவமாதி
வரியவுணர் வுணவுகட்கோ யன்னமுதல் மாந்துகின்ற
பிரியரசங் கட்குதகம் பேசிடுமுத் தமமாமே. 7

தாவரங்க ளாயுள்ள சருவபூ தந்தமக்கு
மேவுபொது வாம்பிரம மிகவும்புண் ணியமான
மூவிலாச் சேத்திரமு முதற்பிரயா கையதாகு
மோவிலா நான்சர்வ வுயர்பிரசா பதிகட்கும். 8.

ஆதியிதி லையமிலை யலதெனக்கு நினைக்கரிய [லோக
வோதுந்தன் மையைக்கொள்ளு முயர்விண்டு முத
ளாதியிலே தனிற்றுனுண் டாயினவ ரெனப்படுவா
ரீதலான் மலைகட்கு மேருவிறை யெனப்படுமால். 9

ஆசைக்கும் விதிக்கிற்கு மலர்மேலுள் ளவற்றிற்கு
மாசில்கீட் டிசைமுதலா மலம்புநதி கட்குமுதல்
காசின்மூ வழிச்செல்லுங் கங்கையவ் விதமேமி
மூசுதடா கங்கட்கு முதற்பிறந்த துயராழி. 10

அண்டர்தா னவபூதர் பேய்களர்க் கதருரகர்
மண்டுநரர் கின்னரர்கண் மாவியக்க ரிவர்க்கெல்லாம்
பண்டாய பிரபுவா மீசுரனே பதிவிசுவ
வண்டத்திற் குப்பிரம மயமாம்விண் டதிபதியாம். 11

ஈவனைவிடப் பெரும்பூதந் திரிலோகத் தில்லதுபோ
லிவனுச்சி ரமங்கட்கு மில்லறமே முதலாகு
மவமிலா வுலகெவைக்கு மவ்வியத்த மாதியதாம்
புவனமதி லீனத்திற்கும் பொருவிலந் தமுமாகும். 12

பகற்பாநு வத்தமதைப் பகர்முடிவாக் கொண்டதுவாஞ்
சுகமாகு முதயமதைச் சூழிரவு கொளுமுடிவாய்த்
துகளிலர்ச் சுகத்திற்கே துக்கமது முடிவாகுந்
துகண்மருவு துக்கத்திற் கேமுடிவு சுகமாகும். 13

சொல்லுஞ்சேர்க் கைகளழிவைச் சூழிறுதி யாய்க்கொளுவ, தொல்லுமுயர் வதுவிழிவை யுடையதுவா மந்தமதாய்ப், புல்லுவது மிரிவுதனைப் பொருந்து

மிறு தியதாக,நல்லுயிர்ப்பு வீதலேயே நண்ணியிடு மந்த மதாய். 14

பொங்குபலக் கன்மமெலா மிறுதியிற்பொன் றிடு வனவா, மிங்குச்சனித் தவர்க்கிறப்பு மிறுதியிலுண் டிவ்வுலகிற், றங்குசரா சரங்களொன்றுந் தானிறுதி யைக்கொளுமால், சங்கையிலாக் கொடைவேட்ட றயித் தற்கற் றதுநோன்பு. 15

கொள்ளுநிய மங்களெலாங் கொண்டதெவை ய வையெல்லா, முள்ளவே யிறுதியினை யுயாறிவுக் கிறுதி யிலே, யள்ளுநறி வுடனேயவை யடைந்தெலாப் புலனை டக்கி, விள்ளுரா னெனதெனல்விட் டவன்விடுத்தோன் பாவமெலாம். 16

குருகீதை

பத்தாவதத்தியாயம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 500.

குருகீதை

கிருகஸ்தயோகம்.

## பதினொன்றாவதத்தியாயம்.

எழிற்கஞ்ச னுரைப்பான் புத்தி யென்கின்ற சார ங் கொண்டு, வழுவுறு மனதெ னுந்தூண் வதிந்திடப் புலன்க ளென்னுங், கழிவுறு பூட்ட லும்மா பூதங்க ளெ லுங்கைக் கோலும், விழுமமாம் விடய மென்னும் விடு திக டமையுங் கொண்டே. 1

விஞ்சிய மூப்புந் துன்பும் விருப்புடன் குடியி ருக்க, வஞ்சிடு பிணியும் பீடை யும்பிர சவம தாகச், செஞ்ச

லைவ தேத கால மேல்விசா ரணையைச் செய்ய, வெருசு
விற் களைப்பு ளைப்பு மிடைவிடா தொலித்து நிற்க. 2

பகலுடனிரவுஞ்சேர்ந்தே பழுதுபார்த்திடச்சித்தத்தோ
டிகல்வெப்புங் கூரை மூடப் புரிவிட வின்புந் துன்பும்
பகர்கின்ற பசியுந் தாக மும்பழு முளைய டிக்க
நிகனிழல் வெயிலு மங்கு நிலந்தனைக் கிளர மாதோ. 3

நிமிடமுன் மிடமி ரண்டு நிலைகளாய்க் குவிய நில்லாக்
குமியுறு மயக்கந் தானுங் கொணர்ந்துநீ ரதனை யூற்ற
வமையுறு சடமாம் பூதங்களும்பங்க மதைக்குழைக்கக்
கமனமா மதியும் பட்ச மிரண்டுமே கணக்கைப் பார்க்க.

சனங்கள்சஞ் சரிக்குமேடு மவனுமாய்த் தமசென்கின்ற
வினமுறும் படைக டம்மை விராசத மிணிதெ மூப்ப
மனுங்குணச் சேர்க்கை கூடு மாவகங் கார வீடுந் [டும்.
துனுந்துன்ப ரேழியோடுந் தொல்லையாங் கொல்லையோ

தீவினை யென்னுஞ்சால கமுந்திகழ் வேட்கையென்னும்
பாவுறு கூடத் தோடு பருமவாக் கூடல் வாயு [ண்டு,
மேவுறு மூலை யாய்ப்பல் விதக்கொள்கை யிதனுங் கொ
தாவுறு மயக்க மச்ச மடுத்திடுஞ் சனங்க ளாகி. 6

பூதசம் மோகந்தன்னைப் புதுப்பித்தோ னுகக் கொண்டு
கோதுறுங் களிம கிழ்ச்சி குடிகளாய்ச் சினத்தி னோடு
காதலு மொன்றி லொன்று கலக்காம லேம கத்தா
மாதியாய் விசேடங் காறு மகன்றிடாத் தடிப்ப தாக. 7

பொன்றலும் பிறப்பு முன்பின் புறங்களாய் மனத்
தின் வேக, நன்றதாய் மனதிற் கேற்ற நாதனாய் விளங்
கிச் செல்லு, மென்றுமிக் கால நேமி யிருந்துமே வரு
வலிந்தத், துன்றிய கால நேமி துவந்துவத் துடனே
சேர்ந்த. 8

சடசரீ ரந்தா னீது சுரர்முதற் சகத்தை யெல்லார், திடமுடன் கூட னீக்க நெறிவிக்க வுஞ்செய் தேகு, நெடியவிக் கால நேமி பிரவிர்த்தி நிவிர்த்தி தம்மி, லடருண்மை யறிந்தோன் பூத மவைகளின் மால்கொள்ளானே. 9

தவலெலாச் சம்ஸ்கா ரங்க ளால்விடு பட்டே சர்வ, துவந்துவங் களுநீத் தெல்லாப் பாவமுந் தொலைத்தோனாகி, யவமறு மோக்கந் தன்னை யடைகுவ னிதற்கப் பாலே, தவறிலாச் சிரமநான்குந் தகவுடன் சாற்றுந்தானே.

கார்கத்திய முதல தாக வுள்ளதைக் கழறு கின்றே
னோரிந்த வுலகில் வேத விதியென வுரைப்ப தாமோ
சிரத னந்தங் காறுஞ் செல்வது நன்றென் றீது
சாரென்று முள்ள கீர்த்தி யாதியிற் சம்ஸ்கா ரத்தால்.

செப்பம தடைந்தோ னாகிச் சீர்விதி விரதந் தன்னைத், தப்பிலா தியற்றிச் சன்ம குணத்துடன் சார்ந்த பின்ன, ரொப்பிலா வுண்மை யோர்ந்தோ னுய்ச்சமாவர்த்த னத்தை, மெய்ப்புட னியற்றிக் கொள்ள வேண்டுமிவ் வுலகி லென்றும். 12

தன்மனை வியின்மே லன்பு சார்ந்துசான் றோராசார, நன்மையாக் கொண்டு நாளுஞ் சிரத்தையாப் புலன டக்கிக், கன்மமாம் பஞ்ச யாகங் களையனுட் டிக்க வேண்டும், வன்மையாய் வைதி கக்கன் மங்களில் வதிந்தோ னாகி. 13

சத்திக்குஞ் சுத்தத் திற்குந் தாமிணங் கவுந் தேவர்க்கு, நத்திடு மதிதி கட்கு நல்கியெஞ் சியதுண் போனு, யெத்திக்கும் புகழும் வேள்வி யீகைசெய் திருத்தல் வேண்டும், பத்தியாய்ப் பாணி பாதம் பகர்கண்வாய் மெய்ப்ப தட்டம். 14

அற்றவன் மனன சீல னெனற்கிட்டார்க் கழக தா கு, மற்றென்றும் புரிமூன் ருனான் மார்பனு யிருத்தல் வேண்டுஞ், சுற்றுறு சுசிக லிங்க முடன்சுத்த விரதத் தோனாய்க், குற்றமி லடக்க மீகைக் குணமுடன் கொ ண்டெக் காலும். 15

தெரிந்திடு மறிவு ளோர்பாற் சேர்ந்திடல் வேண் டுஞ் சிச்ஞே, தாங்களை யடக்கிச் சிட்டர் தருமொழுக் க ங்கொண் டோனாய், நிரந்தர நேயத் தோடு நீர்க்கமண் டலமுங் காம்பின், விரும்பிய கோலுங் கொண்டே வெ ளியினிற் செல்லல் வேண்டும். 16

ஓதலோ துவித்தல் வேட்ட லொழுங்குடன் வேட்டு வித்த, லீதலேற் றிடுதலென்னு மறுதொழி லியற்றல் வேண்டு,மோதுவித் திடுத லோம முஞற்றுவித் திடனல் லோர்பா, லாதரவாக வேற்ற லாகிய கருமமூன்றும். 17

அந்தணர்க் கெல்லாஞ் சீவ னார்த்தமா யுளதென் றோர்வீர், விந்தையா யீத லோதல் வேட்டலென் றிடு மிம் மூன்றுஞ், சந்தத மவர்க்குச் சாலத் தருதியாய்க் கலந்த தாகு, மந்தமா மறந்தேர்ந் தோனு மடக்கம தடைந்து ளோனும். 18

அன்பொடு பொறுமை யுங்கொண் டாகிய பூதந் தம்மின், மன்பொடு சமம தாகச் சரித்திடு மனன சீல, னின்புட னியற்றம் மூன்று கன்மங்க ளிதிலே தேனும், வன்புடன் வழுவு கின்ற வகையினைச் செயலா காதே. 19

சத்திமீ ருதீ தெல்லாஞ் சந்ததங் கைக்கொண் டோ னாய்ச், சுத்தியாய்க் கடுந்த வத்தைச் சுகமுடன் கொண் டிவ் வண்ண, முத்தியா யுசிதமான வுயர்நெறி யதிலே நின்ற, வித்தைசே ரில்ல றத்தோன் விண்ணினை வெல் லு வானே. 20

குருகீதை
பதினென்ருவதத்தியாயம்முற்றிற்று.
ஆகச்செய்யுள். 520.

தருகீதை

மோக்கதருமயோகம்.

# பன்னிரண்டாவதத்தியாயம்.

கஞ்ச ஞேனுவா னிவிதமேற் கழறிய நெறியுடன் முறையாக, விஞ்சு தன்வலிக் கேற்றிடு தியானமும் விதியுடன் புரிகின்றே, னஞ்சி டாமலே பிரமசா ரியமதை யடைந்தவ னாகின்று, னெஞ்சி டாதுதன் கடமை யோ டிருந்துமெய் யறிவையேற் றவனாகி. 1

மன்ன சீலனாய்ப் புலனெலாம் பிணித்தென்றும் வழுத்திடுங் குரவற்குத், தினந்தி னம்பிரி யத்தையு மிதத்தையுஞ் செய்பவ னாயென்றும், வினவு மெய்ம்மையாம் பண்பினிற் பற்றுடன் மிகச்சுசி யுடையோனா, யனக சற்குரு வாஞ்சையா விழிவுரை யகற்றியூண் கொளல்வேண்டும். 2

உரையி ருப்புட னிலைத்திடற் புறஞ்செல லுடையனா யவிசோடும், புரையில் யாசக வனமிவற் றினைப்புசிப் பவனுமாய் மாசின்றி, யொருமை நிட்டையோ டிரண்டு கா லமுமெரி யோமஞ்செய் திடல்வேண்டும், பரவு கூவி ளம் பலாசபா தவங்களின் கோற்பரித் திடல்வேண்டும்.

பட்டு வாசமும் பருத்திநூற் றுணியலாற் பயிலுமான் றோலெனுங், முட்டச் செய்யதாங் காவிசா யத்துணி யாவது முனிவோர்க்குத், திட்ட மாகிய கலிங்கமா முஞ்சையாற் றிரித்திடு மரைஞாணுங், கட்டி டுஞ்சடை யுடன்சதா தீர்த்தமுங் கைக்கொண்டவ் விதமாக. 4

திரித்த முப்புரி நூலுடன் முயற்சியாய்த் திகழ் மறை களையோதல், விரித்த வாசையை நீத்ததி சுக்கமும் விரதமா யிருந்தேபின், றிருத்த மாய்வடித் தெடுத்திடும்

புனலினூற் செவ்வனே யெப்போதுஞ், சிரத்தைத தன்னுட னியமமாத் தேவதா தருப்பண மதுசெய்யும். 5

இந்த மாணிதான் புகழ்ந்திடப் படுவனு மிவ்விதம் பிணிப்புண்ட, வந்த மாகிய புலன்களோ டியோகமு மனுசரித் ததின்மூன்றுஞ், சந்த வாசிரம முளோனுல கனைத்தையுஞ் சயித்தவன் றனிமோக்கஞ், சொந்த மாகவே யடைந்தவ னுய்ச்சன்மங் களிலினிச் சுழலானே.

வேறு.

தருமெலாச் சம்ஸ்காரங் களினூலுஞ் சம்ஸ்கிருத னுயவ் வாறே,முரணிலா மாணியா யூரைவிடுத் தடவியிற் போய் முனியாய் நின்று, வருதுறவைக் கொண்டவனு யமர்ந்துமே மாவுரிமான் றோலும் பூண்டு, கருதுகின்ற காலைசந்தி நீராடி யெப்போதுங் கடத்தி னின்றே. 7

பின்பென்று மூருக்கு ளேகொணு ததிதிகள்பாற் பேசுங் காலத், தன்பினு லருச்சித்தே யவர்தங்க விடமது மளித்தல் வேண்டு, முன்புகனி சருகுகிழங் கானுணவு செய்வித்தே மொய்த்தே யோடு, மின்புறுநீ ரொறியுங்கா லிலைகளைக்கொண் டாரணியத் திருத்த லே போல். 8

எல்லாங்கொள் ளவுந்தீட்சா விதமாகச் சோம்ப றனை யினிது நீத்து, நல்லாப்ரா சனநடத்தி வரவேண்டு கவிலுமவன் களிகள் தங்க, ளெல்லாமிங் கிதலா லனுக திதி களையருசித் திடலும் வேண்டு, மல்லாமற் றனக்கு ணவே தாமதனை மகிழ்வுடனே யளிக்க வேண்டும். 9

தேவரதி தியரிவர்க்கு முன்னுக வாய்புதைத்துத் திகழெக் கானு, மாவலற வெதிரிடையின் மனமுடைய னுய்த்தேவ வன்பு ளோனுய்த், தாவின்மித மாய்ச்

சிறிது புசிப்பவனு யிருந்துண்ணு றுனும் வேண்டும், வீவிலா வடக்கமுடன் பொறுமைமுடி மீசையினை விருத்திசெய்தே. 10

உண்மைநெறி யினிலுழைத்த லோமமோ தூத் திவற்றை வோம்பு வோனுய்ப், பண்மையாய்ச் சுசியு டற்கொண் டடவியினி லிருப்பநற்கே பழகி நில்லாத், திண்மையா மனம்புலன்க ளடக்கிடும்வா னப்பிரத்தன் றிகழிவ்வாறு, விண்ணதனை வென்றிடுவா னெனமறை கள் விகசிதமாய் விளம்புமேலும். 11

எவன்மோக்கம் விரும்புவனே வவன்முதன்மூன் றச்சிரமத் துளனு னுலும், தவறிலாச் சிறந்தநிலை யாஞ்சன்னி யாசமதைச் சார லாகும், திவளுகின்ற பூதங்கள் யாவுக்குஞ் சுகஞ்செய்து சினேகங் கொண்டு, மவுடியமா மிந்தியங்க ளனைத்தினையு மிகப்பிணித்து மனனங் கொண்டோன். 12

பொருவிலாப்பூதங்கட்கபயமளித் தேதுறவு புரிய வேண்டும், மருவுகாலையிலலது தூமமோய்ந் தேமனிதர் மகிழ்ச்சி யாகப், புரிவாகப் புசித்தபினு வதுவிரக்கப் போவதற்குப் புரியொணுதே,புரிமையறத் தற்செயலா னேர்ந்திடுபிச் சையையெடுத்தே யுண்ணல் வேண்டும்.

ஆனுலுங் கலன்கழுவ வகற்றியபின் முத்திநெறி யதனி னிற்கு, மீனமிலாத் துறவியைய மேற்றிடுதற் கெண்ணுவனு லினுமா தாயந்,தானினைந்து மகிழ்தனட் டந் தனைநினைந்து வெறுத்திடலுந் தகுதி யாகா, வூன மிலா வுயிர்பிழைக்க வேண்டியதற் கியன்றதையே யுனிக்கொள் வோனுய். 14

அதிகமா யையமெடுத் திடலாகா துயிர்த்திருத்த லதனுக் காக, வதிகாலந் தனைநோக்கிக் கவனமுட னைய

மதை வாங்க வேண்டும், விதியாகப் பிச்சையின்று தாய மதை வழக்கமாய் விரும்ப லாகா, துதியோடு பூசனை செய் தாலுமொரே யிடமதனிற் றுய்க்கொ ணுதால்.

வண்ணமுறுஞ் சன்யாசிப் பூசித்து நீத்தவைகண் மறுத்தல் வேண்டு,முண்ணுகின்ற வனமுங்கைப் புவர்ப் பிவைக ளுடன்கலந்தே யுண்ண லாகா, வண்ணிடிலவ் வணமதுர விரதமுண்பா னுயிர்த்திருத்தற் களவை யோடு, மெண்ணமுட னுணவேண்டுந் துறவிபூ தங்க டமக் கிமிசை யின்றி. 16

அய்யமேற் றிடவாசை கொளல்வேண்டும் வே றெந்த வனமா ஞலு, மய்யவெந்த விதத்தாலுங் கொள லாகா தெத்தருமத் தையுமொன் றேபோற், பய்யவியற் றுதலாகா பாமுடவி மரத்தடியா றிவற்றைப் பார்த்தே, யய்யமிலா தடைந்துசரித் திடல்வேண்டுந் தனிநிலையா யவாவற் றேனாய். 17

இருப்பதற்கு மலைமுழைஞ்சி லிருக்கலா மூரதனி லிருக்க வென்றால், வருத்துமுறு முதுவேனி லோ ரிரவே யோரூரின் மழைநா ளாகி, லிருப்பதனாற் குற்ற மிலை யிரவியுடன் வழிநடைதா னெண்ணற் பாற்று, முருக்கமாய்ப் பூச்சிகள்போன் மகியினூர்ந் திடல் வேண்டு முயிர்க டப்பால். 18

மருவுகா ருணியமுடன் பூமியைப்பார்த் தடியதனை வைத்தல் வேண்டும், விரிவாய்வைத் திடலாகா தன்பு கூர்ந் தண்டுதனும் விலக்கல் வேண்டும், பரிவாக வடிக் கட்டு நீர்கொடனுட் டானமது பண்ணல் வேண்டு, மரியவென்று மோக்கவறத் துளனெடுத்து விடுநோ லாட வேண்டும். 19

வேறு.

வதையாமை புணராமை யுண்மையுட னேர்மை யும் வழுத்துசின மதுகொ ளாமை, பொறிபொறுமை குற்றமது கூறுமை யென்றுமே புல்லுமொ ரடக்க முட னே, விதியெண் குணங்களொடு கட்டுண்ட பொறிக ளொடும் விரதமுள ளாக வேண்டுஞ், சதிபாவ நேரின் மை களவினைவக ணீக்கிச்ச தாசஞ் சரித்தல் வேண்டும்.

வேறு.

என்றுமே யெதிலு மாசை யின்றிநேர்ந் திடுமன் னத்தைக், கன்றலின் மனத்தி னோடு முண்டுமே களித் தல் வேண்டு,மன்றிநல் லுயிர்த ரித்தற் காமள வருந்த வேண்டு, மொன்றிய தரும மாகக் கிடைத்ததை யுண் ணல் வேண்டும். 21

எண்ணிய வணமுடே யினிமையாய்ப் புசிக்க லாகா, தெண்ணன மாடை யன்றி வேறொன்று மேற்க லாகா, வண்ணுற வெவள வண்பா னவளவே யேற்றல் வேண்டு, நண்ணியன் னியர்பா லேற்ற லீதலோர் நாளு மாகா. 22

பரவுறு மறிஞன் பூதங் களிலென்றுந் தீன பாவ, மொருமையாய்க் கொண்டு நன்று யொழுங்குடன் வகுத் துப் பார்த்தே,யுரியவன் னியர்க ளர்த்த மொருபோதுங் கொள்ள லாகா, பிரியமாய்க் கோரி டாது புசிப்பையும் பெறக்கூ டாதே. 23

யாதுமோர் விடய வின்ப மனுபவித் ததனை மீண்டு நீதமாய் விரும்ப லாகா மிருத்திகை நீரோ டன்னங் கேதமில் பலம்புட் பாதி கிடைத்திடி லிவைக ளாலே யோதுகா ரியங்க ளுண்டே லொளியுடன் பெறுதல் வேண்டும். 24

ஒருதொழி லினைக்கைப் பற்றிச் சிவித்த லொல்லா தொண்டெர, ஞெருபோதும் விரும்ப லாகா துபதேசம் பகையு மாகா, கருதிய சயனம் பாத்ரங் கையினிற் கொள்ள லாகா,வருமுயற் சியினுற் சுத்த மானதை பார்தல் வேண்டும். 25

வேறுகா ரணங்க ளைத்தான் மெல்லவே விலக்கல் வேண்டு, மூறுசெய் விருத்தி யினென் றெண்ணியொன் றிலுமொட் டாது, கூறுசெய் யெல்லாப் பூதங் களிலுங்கூட் டுரவ தின்றி, விறிலாக் கொடுமை கோறல் மிகுபொல்லாங் குளவியா வுண்டோ. 26

அதனையு மூராா் சேர்க்கு மறமுந்தான் செயலு மன்றிந,குதுகலத் துடன்மற் றோரைக் கொண்டுசெய் தலுங்கூ டாது, சதிரொடெண் ணங்க ளித்துச் சராசர மாம்பூ தங்க,டிதையெவை களிலும் பேத மறநெய் தாத் துறக்க வேண்டும். 27

வேறு.

ஒருவனிடம் பயப்படுவ தொருவனையுஞ் சுறச் செய்த லொல்லா தாகுஞ், ச ரு வ பூ தங்கட்கு முத னேசன் முத்தனெனச் சாற்று வாரான், மருவவரா ததையெதிர்பார்த் திடுதல்சென் றதைநினைத்தல் வழு வா திட்டை, நிருணயமாய்க் கொண்டேகா லமும் விரும்பி நிகழ்வதையு நினைக்கொ ணுதே. 28

செவ்வியகண் மனம்வாக்கா லோர்தீங்குஞ் செயலாகா தெரிந்துந் தேறு, தெவ்விதமுந் தீதியற்று தாமையங்க மைந்தினையு மெழிலாக் காக்கு, மவ்விதமைம் புலன்களையு மடக்கியவை யழிந்திடவே மனமுந் தேற, வெவ்வமிலாப் புந்திநிட்டை கொளச்சருவ வுண்மையறிந் தீகை நீத்தே. 29

குளிருநதி துவைதமா குதியொடுநா னெனதென் னுங் கொள்கைசேர்த்த, லளியுடன்காத் திடுதலெனு தலையகற்றிச் சுயவுருமாத் திரமாய் நின்றே, யெளி மையதாய்க் கோருதலுங் குணங்கூட்டு நாட்டமென்ப தெல்லா நீக்கே, யொளியாந்தன் னுடன்கூடி யுண்மை யறிந் தோய்ந்தவன்முத் தனுமா வானே. 30

அய்யமிதி லில்லைகரங் கான்முறுகு தலையகடோ டுறையுமிந்த, நய்புமுறுப் புகளிலநுங் குணகருமங் களுநீங்கி நன்றாய்த் தானே, செய்யதிரு மலமாகித் திரமாகி விடய மைந்துஞ் சேரா தாகி, வெய்துபசை தசையிவற்றைக் கொள்ளாது டுருவியெங்கு மிருப்ப தியாதோ. 31

வேறு.

கவலைகால னிரண்டுமற் றேயுயிர் களினிருதயா காயத்தி லென்றுமே, யவிரவ் வான்ம சொரூபத்தை யாவர்காண் பார்க ளோவவர் மாண்டவ ராயிடார், நுவலு மச்சொரூ பத்தி னிடம்புந்தி நுட்ப வைம் புலன் றேவர்கள் வேதங்கள், விரவு யாகந் தவங்க ளுல கங்கள் விரதங்களிவை யொன்றுஞ் செல்லாவரோ. 32

அதனி டமறி வைக்கொண்ட பேர்தமக் கறிகுறி யிலாக் கொள்கை தனைக்கொண்டு, குதியு டன்பிராப்தி கூறுவ தாதலால் குறியி லாத வறத்தை யறிந்துமே, விதிய றத்துண்மை யையா சரித்திடல் வேண்டு மில்ல றத் தைச்சேர்ந்தோ னாகவே, சதிரு டனறிந் தேகொ ண்டோன் விஞ்ஞான சரியையையா சரித்திடல் வேண் டுமே. 33

புகழு மாவில னாயினு மாலுளோன் போலிருந் தில் லறத்தை யிகழ்ந்திடா, தகம கிழ்வாய்ச் சரித்திட

லன்னிய ரவனை யென்று மலட்சிய மாயெனும், தகை மை யாகத் தளர்வுடை யோனுமாய்ச் சாற்று மான்றோர் நெறிக ளழித்திடா, திகழ்வி லாதுநிற் குநெறி பற்றி யே யினிமை யாக வொழுகுதல் வேண்டுமால். 34

நெறியொ டிவ்வித நிற்பவன் யாவனோ நிகழவன் சீர் பெறுமுனி யாவனாற்,பொறிக ளோடுவி டயங்க ளும் பெரும் பூதமைந்து மனதுடன் புந்தியும், பொருவி லா வகங் காரம்ப்ர தானமும் புருட னோடுந் தனித்தனி யாகவே, விறலொ டோர்ந்துபின் சர்வபா வங்களால் விடுபட் டோனுய்ச் சுவர்க்கம தெய்துவான். 35

மெய்ய றிந்தவ னாயிம் முடிபிற்கு மேவுங் காற் றனி யாநிலை கொண்டுமே, யய்ய மின்றித் தியானித்தல் வேண்டும்பி னாச்ரயமற் றகிலப்பற் றுக்களாற், பய்ய விடுபட் டேவிண்ணில் விசிடும் பவனம் போல விடுபடு வானிவ, னய்யச் செய்திடுங் கோசங்கள் யாவுமே நழுவ நன்மன தாக விருந்துமே. 36

வேறு.

ஒன்று மஞ்சம்பு லீர்க்கினை யுருவிப்பார்ப் பதுபோற்
றுன்று பாதிக ணித்துள சுயவடி வதனைச்
சென்று பார்ப்பவ னுய்த்திரு சியமெலா மதுவே
யென்று பாவித்துப் பரத்தின துண்மையெய் துவனே.

குருகீதை

பன்னிரண்டாவதத்தியாயம் முற்றிற்று.

ஆகச் செய்யுள் 557.

## ஞானவிஞ்ஞானயோகம்.

# பதின்மூன்றுவதத்தியாயம்.

உறையும் பிரமனு மறைவா னிசமதை யோர்ந்தே யோதிடு முயரறிவோர், துறவைத் தவமென மொழி வா ரவ்யத் தோபா சகரெனுமறையோரு,மறிவே நிறை வுறு பரமப் பொருளென வறைவார் மறைவித் தையை நாடி, யறியப் படுபிர்ம மதிதூ ரத்துள ததனுற் றுவித மு டன்பண்பும். 1

எண்ணத் தகுவதோர் தன்மை யிவைகளை யில்லா ததுமல ரெப்போதும், பண்ணோ டமர்வது மேலாயுறு வது மாகும் மனைய பரம்பொருளை, நண்ணும் மலமறு முணர்வாய் நின்மல ராய்நீங் கியரச சுடனித்ய, மண் ணுஞ் சுசியுள ராகுந் தீர்க டவசா லலதறி வாலறி வார். 2

எய்துந் துறவினி லன்புற் றவர்களு மென்றும் பிரமவி சாரமதைச், செய்தே வருபவர் களுமா கியநரர் சீராய்த் தவமதை மேற்கொண்டே, யையம் மறவுய ரீசன் றனைச்சுப நெறியாற் சென்றடை கின்றாராற், றய்தாமறமதைப் பயிலா சாரமாந் தவந்தி பமுமெனச் சொல்வாரே. 3

அறிவே யதனினு மதிகந் துறவது மிகமே லாந் தவ மெனவறிக, வுறவா யெவனியல் பாகத் துணிபுட னோதென் றுந்தடை தனைநீத்தச்,செறிபூ ரணசுக வறி வே யுலகுயிர் களினுஞ் சேர்ந்துள வான்மாவென், றறி வா னேலவ னனைத்துஞ் சென்றவ னுமென் றேயெ ணப் படுவானே. 4

கூடற் பிரிதலு மொருமைப் பன்மையுங் குறியா
ய்ப் பார்த்தெவன் வருவானோ, வீடும் நோவதி னின்
றே நீங்குவ னெவனென் றினையுமே விரும்பானோ,
நீடொன் றையுமெவன் வெறுக்கா னோயிந்த நிலமே
லிருந்ததொர் படியேதான், றேடும் பிரமந னுண்மைக்
கேயவன் றெளிவோக் கிபமுள ளுவானே. 5

## வேறு.

நல்லபிர தானமொடு பண்பிவைக டத்துவங் களை
யுநவில் சருவ வுயிரின், புல்லியல் புரிந்துநா னெனதெ
ன்ப தற்றவன் போயடைவன் முத்தி யதனைச், சொல்லு
மிதி லையமிலை யின்னுந் துவந்துவந் தொழுதலொடு
வருசி ராத்த, மொல்லையிவை களைமொழித் தொழிப
டைந் தென்றுமே யுள்ளதும் மிலைதன் றியே. 6

பிரிவுறுந் துவிதமொடு பண்புகளு மற்றப் பெரும்
பொருளி னைப்பெறுகுவான், றெரிதரு குணங்களானன்
மையொடு தீமையாஞ் சேர்வினையெலா மகற்றிப், பரிவு
றுஞ் சீவனுள் ளதுவெபன் பதையுமே பார்த்துவிடு
தலையை யடைவான், விரவுமிதி லையமிலை யவ்யக்த மெ
ன்கின்ற மிளிர்விதையி னைக்கொண்டதோ. 7

மனுபுத்தி யாகியங் கவையொடு வளர்ந்ததும் மாவ
கங் காரமென்னு, மினமான கிளையொடு புலன்பொரு
ளெனுந்தளிர்க ளும்பொரு திபைந்ததுவுமாய்ப், பினும்
பெரும் பூதமென் னும்பறவை யும்விசே டமதெனுங்
கொம்புகளுட, னினுமிலைகண் மலர்களொடு நன்மைதீ
தாங்கனிக ளென்றுமே மருவியுளதாய். 8

எகிடுஞ் சருவபூ தங்களுறை யிடமதா யென்றை
க்குமுள்ளதுவுமாய்க், தேகமே யென்கின்ற பாதவம

துளதாங் தெளிந்திடுத லறிஞனிதனை, போகைசே
ரறிவெனும் வாளினாலே யிசித்தே யொன்றிய பிறபிறப்
பும், சோகமா மூபனையு மிவற்றினா லாகிய துகள்
பாச முந்தொலைத்தே. 9

காமெனது மாகிய தகன்றுமே முத்திபினை நண்
ணுவ னிதிற்சங்கையி, லீனமா மீதினி லிணக்கமு
மயக்கமும் மெய்தியன வாயிரண்டா, மூனமறு பகி
யவை யென்றுமே யுடையவா மோதிவைக ளுக்கு
வேறாய்த், தானிருந் திடுவனேற சேதனன் னவனென ச
சாற்றிடத் தகுவ னனரே. 10

வழுத்துமவ னேசத்வ ஞானமுன மின்றியே மய
க்கினவ னும்மாகின், னழுத்தமாய்ப் பின்புசத் துவ
ஞானி யாயந்த ராத்துமா வாகி நின்றே, தொழுத்தகு
நல்வினை யறிகின்றனன் னன்றிச் செயலும் புந்திகளையு
மோங்கே, பழுத்ததோத் திரமென்று குணாதிக
னுய்ச் சருவ பாவங்க டமைவிடுவனே. 11

தநகீதை

பதின்மூன்றவதத்தியாயம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 508.

தநகீதை

சத்துவபுருடவிவேகயோகம்.

## பதினான்காவதத்தியாயம்.

சிலரிந்த மரந்தனையே பிரமமென்பார் சிலர்பூதத்
தாம் வனந்தனையே பிரமமென்பார், சிலரவ்வி யகத
மதே பிரமமென்பார் சிலரகந்தமே வுள்ளநிரு மேலா
னை, விலகுகின்ற புருடனையே பிரமமென்பா ரினை

யெலா மாயையிலுற் பத்தி யான, கலகமார் விகாரமி
லாப் பிரம மென்றே கஞ்சனுமம் முனிவ ருக்குக் கழறு
வானே. 1

## வேறு.

முடியும் வேளையில் யாவ னாயினு மூச்சு விடுமள
வாயினுந், தொடரு சமரச முடைய னாகுவ னேயவன்
சுப மாகிய, வடிவ மதனொடெ ளாவி முத்தியை மருவ
வரியவ னவனன், மடிவி லாதிமை நேர மாகினு மன
தைத் தெளிவுறு புந்தியில். 2

இருத்தி நிட்டைய தெய்து மாகி லிவன்ம னம்
மிக வுந்தெளிந், தருத்தி யாயழி வற்ற மேதையர் பதவி
யடைகுவ னொருபதும், விரித்த பன்னிரண் டோ
டிருபதின் மேலிரண்டென மேதையோர், தெரித்திடும்
பிர ணவ மங்களால் சேரவேயிடை யிடையினில். 3

ஒளிர்பி ராணனை யும்மடக்கிப் பினேது மிருபதி
னொன்கின்மே, லுளதை யிவ்வண மேதெ ளிந்திடு
மொருமை சேர்மன முடையவன், றளர்வின் முன்
பெத னெதனையேமிகத் தகுதி யாகவே நினைவனே,
மிளிர வதுவது வாக வும்மதை மேவு வன்றிர மாகவே.

அவ்வி யக்தம தையு முத்தியே சத்து வமு
மே விட்டதா, பொவ்வ வேயிற வாதிருந்திட வரியதா
மென வேயிவன், செவ்வை யாயறிந் தோர்சிறந்தது
செப்பு சத்துவ மதைவிட, வெவ்வி டத்தினு மில்லை
யேயென யிதனையே புகழ்வார்களே. 5

இந்த வேதுவி னைப்பிடித்தே யிலங்கு சேத்திர
ஞன்னாறு, நிந்தை யில்லதோர் சத்து வத்தினை நாடி
னேனென நினைதார், விந்தை பாயினி வேறு நெறிக

ளான் மிளிரும் விப்பிர ரோஷி, லந்த மாப்புரு டனை யறிந்திட லையமின்றியா காதரோ 6

வேறு.

பொறுமை யூக்கம் வகைமையாமை புகலுஞ் சமபா வனையுண்மை, நடுநே ரறிவு துறவுபினர் நவிலு மொழிவு மிவையெல்லாந், திறசாத் வீகச் சீலமெனத் தேர்வ ரறிஞ ரிக்குறிகொண், டுறசத் துவமும் புரு டனையு மோர்வர் தனியே யையமில்லை. 7

ஆராய் வதனிற் றிறமையுள்ளா ரவர்க ளெனவே சிலவறிஞர், பேரோ சேத்தி ரஞ்ஞனுட னிகழ்சத் வத் திற் குழ்முரிமை, யாராய் வின்றி யோதினரங் குசிர மாகா ததனிலுமே, யோரார் சத்து வமும்வேறு மையை மின்றி யேற்பதுவே. 8

உண்மை யாக வதனோடு முதித்த தெனினும் வேறெனவே, நிண்மை யுடனோர் திடத்தகுமவ் விதமே செப்புங் குணகுணிகட், கண்மை பொருமை பன்மையுமுண் டாமீ தறிஞர் நியாயமுமாங், கண்ணத் தியிலார் புழுவவைகட் கொருமை பன்மை காண் பனவே. 9

தடநீர் மீன்போற் றுமரையிற் றண்ணி ரிணக்க மதுபோலுஞ், சடமு மசட மாமவைக்குந் தகுதி யென வே கொள்வதெனத், திடமாய்ப் போதித் திடவினவுஞ் சேட்டப் பிரம விருடிகளு, முடனே யைய மடைந்த வரா யுயர்வே தாவை வினவுவரே. 10

தருக்கை
பதினொன்காவதத்தியாயம் முற்றிற்று.
ஆகச்செய்யுள் 578.

## ஜிஞ்ஞாசாயோகம்.

# பதினைந்தாவதத்தியாயம்.

நிகழுறங்க டமக்குளெது வநுட்டிக்கச் சிறந்த தென நினைக்கற் பாற்றே, மிகுதருமங் களிலொன்றுங் கொன்றுமுரண் வதுபோல வெகுமார்க்கத்தைத், திகழு றவே காண்கின்றேஞ் சிலருடற்குப் பின்னென்பார் சில ர்களீது, சகமதினி லிலையென்பார் சிலர் சங்கைக் கேவி டயந் தானென் பாரே. 1

உலகினிலே சிலரெல்லா மையமின்றி நிச்சயமா யுள்ள தென்பார், நில்லவே யொருவரனித் தியமென்பா ரினுமொருவர் நித்ய மென்பார், சிலரொன்று மிலையெ ன்பார் சிலரிருந்து மில்லாத தேயென் பாரகள், சிலரொ ன்றே யிரண்டாயு முள்ள தென்பார் செப்புமிதிற் சிலர் கள் வேறே. 2

உள்ளதுமில் லாததுஞ்சேர்ந் தொன்றுமென் பாரு ண்மை யறிஞ ராய, வெள்ளலிலா விப்பிரரே சிலர்பிரமந் தனையொன்றென் றெண்ணு கின்றார், மெள்ளவே சிலர் களும்வே றென்கின்றார் சிலர்களோ வெகுவென் கின றார், கொள்ளவே சிலர்காலந் தேசமுட னிரண்டுமெ னக் குறிக்கின் றாரே. 3

சிலரவைக ளிரண்டு மல்லா ததுவென்பார் சிலர் சடையுஞ் சருமங் கொள்வார், சிலர்கண்மூண் டிதஞ் செய்வார் சிலர்கணீ ராடலதைத் திரஸ்க ரிப்பார், சிலர் முழுகல் விரும்பிடுவா ரிவ்விதமெல் லாமெய்யைத் திர மாய் நோக்கி, யிலகுநூ லறிந்திடுமே தையபாரகு மந்த ணரே யெண்ணு வாரால். 4

சிலர்தேவ ருண்மையையோர்ந் தவரென்பார் சிலர்ம றையோ ரேயென் பார்கள், சிலர்பிரம ஞானியென்பார் சிலர்கள்புசித் திடுதலையே தினமிச் சிப்பார், சிலரருந் தா விரதத்தி லுள்ளவர்கள் கன்மமதைச் சிலர்பூ சிப் பார், சிலமொழிவைப் புகழ்ந்திடுவார் தொழுதிடுவார் முத்தியினைச் சிலர்க டாமே. 5

சிலரனந்த விதப்போகம் போற்றிடுவா ரர்த்தம தைச் சிலரிச் சிப்பார், சிலர்மிடியை விரும்பிடுவா ருபா ஸ்திக்குச் சாதனந்தான் சிலர்கொள் வாரரற், சிலரு பாஸ் தியதில்லை யென்றிடுவார் சிலர்வதையா மையிற் பற் றுள்ளார், சிலர்வதையிற் பற்றுடையார் சிலர்கள் புண் ணியநெறியிற் செல்கின் றரரால். 6

சிலர்புகழு நெறியதனிற் செல்கின்றார் புகழறமுஞ் சிலரில் லென்பார், சிலர்நன்று யறிந்துளதி லமர்ந்தவர் கள் சமுசயத்தி லமர்ந்தோரர் சில்லோர், சிலர்துக்க மதனாலே முத்தியென்பார் சுகத்தைவிடல் சிலர்வீ டெ ன்பார், சிலர்தியா னத்தினின் றெழிவதே முத்தி யெனச் செப்பு வாரே. 7

சிலமறையோ ரெக்கியமே சிறந்த தென்பார் சிலர் கொடையே சிறந்த தென்பா, ரலதொருவர் தவமென் பார் மற்றொருவ ரனுதினமு மோத லென்பார், வெனு மறிவார் துறவதே மேலென்று ரொருவரினு மிருபூ தங் கள், பலவற்றைச் சிந்தனைசெய் யிபற்கையே சிலர்மே லாப் பகர்கின் றரோர. 8

யாகமுத லீறுயுள் ளவைகளெலா மொருவர்மே லாமென் கின்றார், வாகுடனே யாவுஞ்சேர்ந் தானுமே லன்றெனவே வகுப்பார் சில்லோ, ராகையாற் பலவித மாய்ப் போதிக்கு மறமிருக்க வதின்மா லாகி, யோகை

யிலா தோர்துணிபு மடையாது நிற்கின்றோ முயர்ந்த வேசா. 9

இதுவதிக மிதுவதிக மெனப்பல்வகை யுடைத்தாகி யிருக்க மாந்தர், பொதியுமெவ னெவ்வறத்தி லமர்ந்தவனோ வவனதையே போற்றுகின்று, னதனு லெங் கட்குமனம் பல்வகைப்பட் டெதிற்றுணிபு மடைய வில்லை, யெதுமேலோ வெடுத்துரைக்க வேண்டுகின்றோஞ் சாதுசிரோ மணியே யின்னும். 10

அதற்குமே லெதுமிகவு மந்தணமா யுள்ளது வோ வதையுஞ் சத்வ, மதற்கு மிந்தப் புருடனுக்கு மிணக்க மெந்த வேதுவினு லருள்வா யென்ன, விதற் கந்த முனிவரர்க்குச் சிறந்தவறி வோடுலக மெல்லா மாய்ந்து, விதித்திடறச் சிலனும் பகவ னுள்ள துள்ள வணம் விரிவாய்ச் சொல்வான். 11

குருகீதை
பதினைந்தாவதத்தியாயம் முற்றிற்று.
ஆகச்செய்யுள் 589.

குருகீதை
பராபரயோகம்.

## பதினாறுவதத்தியாயம்.

திசைமுக னுரைப்பான் கேட்டர்கா ளெனைநீர் திகழவே கேட்பது மெதுவோ, வசைவிலாக் குருவா லடுத்திடுஞ் சீடற் கறைவதும் யாவதோ வதனை, வசையற மொழிவ னறிகுவீ ரீங்கே யெதுவருத் துரைப்ப தோ வதனை, நிசமதாய் வினவி நினைவொடா ராய்ந்து நிச்சயங் கொள்ளுதல் வேண்டும். 1

எவ்வுயிர் களையுங் கொலைசெயா திருத்த லேயுயர் கன்மமென் பதுவாஞ், செவ்வனே யீது பயமறு பதவி சிறந்தவீ தறத்தின தியல்பா, மவ்வலிய மில்லா மெய்ம் மன வறிஞ ரறிவுமே னுக்குமே லென்பார், திவ்விய தூய வறிவினுற் பாவ மனைத்திலுந் தீர்ந்திடப் படுவார். 2

எண்ணுல கெவர்க ளிம்சையி லுளரோ வெவ ரொன்று மில்லையே யென்று, மெண்ணங்கொண் டவரா யவாமயக் குறுவோ ரவரெலா மெய்துவர் நரகந், திண்ணமாய்ப் பயனை யெணிப்பணி களையே செய்வரேற் சோர்வின்றி யவரே, கண்ணக னுலகி லடிக்கடிப் பிறந்து களிப்பினை யடைகுவர் காணீர். 3

பயனெதிர் பாரா தெவர்முறை யெனவே பற்றியே கருமங்க ளறிந்தே, நயமுட னியற்றி வருவரோ வவர் நன் னேக்கங்கொ டாரா நயமார், தயவுறுஞ் சாது வர் யர்கா ளினிச்சத் துவத்திற்குஞ் சேத்திர ஞனுக்கும், பயிலுடன் புணர்ப்பும் பிரிதலு மெவ்வா றுள்ளவோ வவைபகர்ந் திடுவேன். 4

ஓதிய புருடன் விடயிசத் துவமோ விடயமென் றெண்ணப்பட் டுளவா, லாதலிற் சத்து வத்திற்கு மீங்கே யறைந்திடும் புருடற்கும் விடாபி, கோதறு விடய பாவசம் பந்த மென்னவுங் கூறிடப் படுமான், மீது கற் பனையான் மிளிர்மச கோதும் பரநியா யமும்விளக் கியதால். 5

அசேதன மான ததுபற்றி யென்றுஞ் சத்துவ மனுபவிப் பதனை, விசையுட னறிதற் கேயியலாத தனை யெவ னுண்பனே யாது, நசையுட னுண்ணப் படுமோ விவ்விரண்ட னிலுமிவ் விதமென யாவன், வசையிலா

தறிவா னேவவன் வேறும் வழுவில்சத் துவமுமே
யென்றும். 6

துவந்தத்திற் கலந்து நிற்பதென் றறிஞர் சொல்லு
வார் சேத்திரஞ் ஞானமோ, துவந்துவங் கலைகாலங்
குணஞ் சொரூப மிலான்சம மாயத னதன்பே, ருவந்து
மேற் கொண்டே யறையந்தப் பூதங் களினெல்லா முறை
பவ னாகித், தவழ்ந்திடு நீரிற் றாமரைக் குழைபோற்
சதாசத்து வத்தைபே துய்ப்பான். 7

தெரிந்தவ னதனாற் பண்புகளோடுஞ் சேர்ந்துந்தா
மரைக்குழை யதனிற், பரம்புநீர்த் துளிபோற் பற்றுறு
னதனாற் பகிர்தி லேபமு மிலையா, லுபாதிகழ் புருடற்
கதிசய மாக வுள்ளதோர் பொருளதே யிங்குந், திரங்
திகழ் சத்வ மெனத்துணி பிவிதந் திரவிய மதனுடன்
கருத்தா. 8

சேரவற் றினுக்குச் சம்பந்த மெவிநந் தீபங்கொண்
டிருளினி லொருவன், றீரம தாகச் செல்வனே வதைப்
போற் சிறந்ததை நோக்கவிச் சிபபோர், சிறிய சத்வ
விளக்கினைக் கொண்டு செல்லுகின் றனரெது காறு, மா
றுறு திரவி யமும்பண்பு முளவோ வமமட்டும் விளக்கு
நன் கெரியும். 9

திரவியங் குணமுங் குன்றிய போது தீபமு மறைந்
திடு மவிந்து, பரவியில் விதமா யுருவுகொண் டெழுந்
தாகிய சத்துவப் பண்பு, முருவம தின்றி மறைவினி
லுளதாற் புருடனென் றுன்னிடப் படுமாற், றெரிகுவி
ரிதனை நன்குவிப் பிரரே செப்புவ னினுமுங்கட்
கெடுத்தே. 10

அழிவுறு மதிபோ லுயிரத் தானு மறிவினை
யடைவது மிதாங், குழுவுநான் கினிலோர் பாகத்

தைக் கொண்டுங் கொள்ளுவன் சுகத்தைநல் லறிஞ, னெறியிலிவ் விதமே யறத்திற்குங் கருவி யுபாயத்தா லறிந்திடல் வேண்டு, மிறிவிலாச் சூழ்ச்சி யறிந்தநுண் ணறிவோ னிறுதிய தநுசுகம பெறுவான். 11

வேறு.

உணவுந் துணையு மின்றிவழி யொழுக முயலு மொருவன்மிக, வணையுங் களையொ டிடையினிலெங் கேனும் விழ்வ னதைப்போல, நணுகுங் கரும வழிக ளினி னலதுந் தீது நன்குறையும், புணையாஞ் சிரேய சாம்பயன்கள் பொருந்தா வெனவே யறிவதுவே. 12

காலா னீனும் வழியொருவன் கடப்பா னேவவ் விதமுண்மை,நூலா ராய்ச்சி யிலாதிருந்த வறிபா நெறியி னுவலூக்கஞ்,சாலப் பற்றி சரிபடதுபோ லாமவ் வழியே தருபுரவி, யேலப் பூட்டுங் கதியிரத்து மேவித மெனினேதா வவ்விதமே. 13

சொலுமிக் கன்ம நெறிதத்வ நூலாய்ந் தோர்க் குச் சுலபமதா, நிலவு நேரே நிமிரவரையை நேர்ந்தே யேறுங் காலெதுவு, மிலகு விதுந் தோன்றும விரதமூர் வோன் றிகைப்பினையுற், றலருஞ் சமநு மியைச சார்ந் தே யதனை மதியா ததைப்பாரீர். 14

எதுகா ரிரதம் போம்வழிநா னுளதோ வியம்பு மதுகாறுஞ், சதுரராய்த் தேர்கொண் டேகிடுவான் றவிர்ந்த போதோ வறிவுடையோன், றிதமாய்த் தேர் நீத் தேகிடுவான் றிகழிவ் விதமாய்ப புநதியுளோ,னதிநூ லாய்வு மதனுபயோ கமுநன் கறிந்தே குணவா னாய். 15

மிகவு மேலாஞ் சாத னங்கள் மேவிச செல்வான் விளப்பொருவன், பகரும பெரிய பரமைவதனைப் பட

இல் லாமற் பாகுவினுற்,சகச மாக நீந்தவதிற் றொடங்கு வானே சங்கையற,விகழு மவனே யழிந்திடலே யிசகிக் கின்றே னுருவனே. 16

அறிந்த வொருவ னல்லதுப் பமைந்த படகா லேவின்றிப், பறிந்து நீரி லாழ்ந்தமடு வதனைக் கதி யாய்ப் பாய்குவனுற், செறிந்த படகை நீத்துநம தென்னு மெண்ணந் தீர்ந்துடனே, கறங்கு மந்தக் கரை சேர்வா னென்றே முன்னேர் கற்பனையில். 17

கொண்ட வனைப்போற் கொண்டவனு மாவா னெனவே கூறுவதாற்,பண்டைப் படகு கொண்டதிலே படகு கார னெந்தவித, மண்டி மயங்கித் திரிகுவனே வவிதஞ் சேத்தி ரஞ்ஞனுமே, மண்டுஞ் சாத்வி கத்தி னிட மெனதென் றபிமா னமும்வைத்தே. 18

நலத்த ஞானச் செல்வமதை நாளுங் கொண்டே யலமருவான், றலத்திற் படகே றிச்செலுதல் சாத்ய மாகா தவ்விதமே, சலத்திற் றேரே றிச்செலுந் தகா தே யோது மிந்தவணம், விலக்க மாகந் தனித்தனியே விடயங் களிலே யுள்ளதுவாய். 19

இந்தக் கன்மம் பல்விதமா யி ய ற் ற ப் பட்ட தா மெவித, மிந்த வுலகி லிக்கன்ம மிந்த வுயிரா லியற்றி யதோ, வந்த விதமே யிவ்வுலகி லுள்ள வதனை யவ னடைவான்,சந்த மாக வெதுவோசை முதலேந் தினையுந் தணந்ததுவோ. 20

அதையே புந்தி யாற்கொண்டு மறைவார் முனிவர் மூலமெனா, வெதிரி லந்தப் பிரதான மெழிலவ் யக்த மெனப்படுமால், விதியு மவ்வி யக்தபதின் கன்ம மகதத் துவமகத்தாங், கதியார் பிரகி ரகிரூதந் தனக்குக் கன்ம மகங்காரம். 21

ஓது மகங்கா ரத்தினின் றுதித்த மாபூ தங்களு மப், பூதந் தம்மின் பகுதிகளாம் பொருந்து தன்மாத் திரங்களுமாஞ், சாத மாக வவற்றிலே தனியே பூதங் கட்குளவோர், காத லாகும் விடயமெலாங் காரி யங்க ளாமெனவே. 22

எண்ணும் வண்ண மிவையனைவா மினியவ்வியக்த மதுதானே, யொண்ணு மேது தன்மமுங்கா ரியதன் மமுமா யுள்ளதுவா, நண்ணு மகதத் துவமதுவு நற்கா ரணதன் மத்துடனே,பண்ணுங் கன்ம தன்மமுமா யுளதென் றெமக்குப் பகர்கேள்வி. 23

ஆங்கா ரமுமே விதைதன்ம மாகி யுளது மடிக்கடியே, பாங்காய்ப் பிரச வத்தரும முளது மாகும் பரபூத, மீங்கே யைந்தும் பிரபிர சவதன் மங்க ளியைந் ததுவாம், வீங்கும் பூத மைந்தினது விசேடங் களுமோ விதைதன்மம். 24

ஏற்ற தென்பா ரவைகளுமோ வியற்றும்பிரச வத்தையுமே,யாற்ற வவற்றின் பிரசவஞ்சித் தமதா மவற்றி லோர்பன்மை,யேற்ற தாகு மாகாய மிரண்டு குண முள் ளதுவாயு, சாற்று மூன்று குணந்தேய்வாஞ் சல நாற் குணமுள் ளதுவாமே. 25

வேறு.

நிலவுசரா சரங்கவெலாஞ் சூழ்ந்துநன்மை தீமையுமே நேரே காட்டிக், குலவுகின்ற பூதமெலாம் பொறுத் துவரும் பூதேவி குணமைந் தாகு, மொலிபரிசம் வடிவுசுவை மணமைந்து மண்குணமென் றோர்தல் வேண்டு, மலதென்று மண்குணமு மணமேயாம் மணம்பல்வித மாகுந் தானே. 26

அனையமணும் பல்விதமா யெனற்பால தலைத றவ னனிட்ட மிட்ட, மினிதுபுளிப் புளதுநெடி நிண

நாற்றம் வெடிப்போடு மெண்ணைப் நாற்ற, மனியவறட்சியுங்குளிர்ந்த மணமுமெனப் பத்துவகை மண்ணின் கூறு, நினையுமொலி பரிசமுரு திரவமென விவைநான்கு நீரின் பண்பாம். 27

மதுரத்தி னிலக்கணத்தை வகுத்துரைப்பன் பல்வகையா மதிப்ப தாகு, மிதமாக வினிதுபுளிப் புடன் காரங் கைப்புதுவர்ப் புவர்ப்பே யென்ப, மிதமாயிவ் விதமாறு சுவையாகக் கடன்மயமா விரவி நிற்கும், வதியுமொலி பரிசம்வடி வெனமூன்று பண்புளவவ் வன்னி யாகும். 28

தேயுகுண முருவமதா முருவமும்பல் வகைசெம்மை கருமை வெண்மை, யாய்நீலங் குறுகனெடி லரிசனமம் புயவர்ணம் பருமை மென்மை, யேயமுத வுருவுகளுஞ் சதுரம்வட்ட மெனவடிவிவ் விதிய தாகத், தேரோயுமிந்தப் பன்னிரண்டின் விரிவுளது சுடுகனலின் சொரூபந் தானே. 29

மெய்ம்மொழியு மிபலறிந்த வேதியரே யிஃதறியுமோலோ ராவார், வய்யமதி லொலிபரிச மெனவிரண்டு குணமுளது வாயு வாகு, மய்யமில்வா யுவின்குணமும் பரிசமந்தப் பரிசமும்பல் வகையாமென்ப, வெய்வறட்சி குளிர்கானற் பிசுப்புத்தேற் றம்பாரம் விள்ளுஞ் சோர்வு. 30

மெழுகுறுதி மிருதுதிரி மணலெனவே பன்னிரண்டு விதப்பண் பாகு, மொழிவிலா மெய்யறியு மந்தணர்தா மிக்குணங்க ளொன்றோ டொன்று, தழுவியே நிற்கின்ற பூதங்கட் கேயெனவுஞ் சாற்று கின்றார், குழுவுமா காயமொரு குணமாகு மதுவொலியாங் குறிக்குங் காலே. 3

அந்தவொலி யின்குணங்கள் யாவும்விரித் தறைந் திடுவன் சட்ச மேறு, சந்தமாங் காந்தார மத்தியமம் பஞ்சமந்தை வதநி டாத, மந்தமுறு மிட் டமுட னனி ட்டங்கூ டுதற்பிரித லாகப் பன்ஞென், றிந்தவகை யா காயத் தூதித்தவொலி யிருப்பதெனவெண்ணற்பாற்றும்.

ஆகாயம் பூதங்க டமிற்சிறந்த ததற்குமே லுளதா ங் காரஞ், சேகான வதற்குமேற் புந்தியதன் மிசையு டையோன் சேத்தி ரஞ்ஞு, ஞகாரிற் பானவன்மே லவ் வியக்த மவ்வியக்த மதற்கு மேலே, வாகான புருட னுளன் சீருவகன் மங் களின்விதியை வகுப்பா யோர்ந்

வேறு. தே.

விள்ளுஞ் சர்வபூ தங்கட்கு மேலினுங் கீழு முள்ள தோர்ந்துயி ரெவையினு முள்ளவான் மாவாய்த் தள்ள லிற்றனைப் பாவிக்குந் தனிமன முடையோ னெள்ள லின்றியே யழிவுறாச் சொரூபமெய் துவனே.

குருகீதை
பதினாறுவதத்தியாயம் முற்றிற்று.
ஆகச்செய்யுள் 623.

---

குருகீதை
சித்தியோகம்.

## பதினேழாவதத்தியாயம்.

அயனு முரைத்திடு வானினி பேசிய வைம்பூ தங் களையே, வயமொடி டிறுக்கவு நீக்கவும் வல்லது மனமே யென்பதுதான், பயனுட னெவ்வித மாகவே யோர்வ தோ பகருவ னவ்வணமே, யியலுறு மனமே சொலுபூ தங்கட் கெல்லா மான்மாவாம். 1

அனவரதமுமாபூதமெ னைக்கு மதிட்டா தானம
மாம், வினவு பகுத்தறி வதனர சியலாம் விடலரி தாம
துவே, நினைவுறு சேத்ரஞ னென்னவு மாக நிகழ்த்திட
வும்படுமால், பனுமொரு மனமது சாரதி நலமார் பரிக
ளை யோட்டுவபோல். 2

போது புலன்களை யோட்டிடு மப்புல னெடுமென
மதுபுந்தி,யோதினை யென்றும் பிரக்ஞப னென்னுமொ
ருயர்சேத் திரஞன்பா, லாதர வோடு கலந்துறு மைம்
புல னுகும் புரவிகளைத், தீதறு புந்தி பிடித்து நடத்தத்
திகழ்தனு ரதமேறி. 3

பூதாத் மாவாஞ் சேத்ரஞ னெங்கும் போவான்
பொறிகளெனும், தீதார் பரிகளை புந்திய னென்னுஞ் சீ
சா ரதியென்றுங், கோதறு துணிபாங் கடிவா ளத்தாற்
குறையற வேகட்டி, நீத நிறுத்திட பிவ்விர தமுமே நிக
ழ்மேன் மையதாகி. 4

வேறு.

விளிவறும் பிரமரூப மேயாகு மிவிதம் யோகந்,
தெளிவாய்க்கொண் டெவ்வி வேகி திகழுமிவ் விரதந்
தன்னை, யளவிலாப் பிரம மாக வறிபவன் றீர ஞகி,
வளமுறுஞ் சருவ பூதங் களினுமே மயக்க மெய்தான்.

எள்ளலி லவ்வி யத்த முதல்விசே டங்க ளீறு
யுள்ளதுஞ் சராச ரங்க ளுடனிருப் பதுவு மென்று
மொள்ளிய சோம சூரி யர்களொளிப பெற்ற தாயுந்
தெள்ளிய கோட்கண் மீனுற் றிகழலங் கரித்த தாயும் 6

பொருநதி வரைக ளானு மெங்கும்பூ சிபப தாயும்,
வரும்வெகு விதங்க ளாய நீர்களால் வழுத்தெப் போ
தும், பொருவறும் புகழ்ச்சி செய்யப் பட்டதும் பூத

மெல்லா, மருமையா யடுத்துச் சீவிப் பதற்கிருப் பிடம
தாயும். 7

கலங்குறு மெல்லாச் சீவன் கட்கெலாங் கதிய தா
யு,மிலங்கவே யென்று முள்ள திருபிர்ம்ம வனமே யெ
ன்ப, வலங்கிள ரதிற்சேத் ரஞ்ஞன் வருகின்றான் சரித்
தே யிந்தத்,தலந்தனி லெந்தச் சத்வஞ் சரமச ரங்களா
யும். 8

உள்ளவோ வவைக ளெல்லா முதலினி லொளிக்
கும் பின்னர்க், கொள்ளுறு பூதந் தம்மாற் குயிற்றிடுங்
குணங்க ளப்பாற், றள்ளுறு பஞ்ச பூதந் தாமுமே
யொடுங்கிப் போகும், விள்ளுறு மிதுதான் பஞ்ச பூதத்
தின் மேன்மை யாமே. 9

தேவர்கந் தருவர் மாந்தர் திகழும்பே யசுரர் முன்னு
பாவுறு மிவர்க ளெல்லாந் தத்தம்பா வனைக ளாலே
யாவலா யுண்டு பண்ணப் படுகின்ற ரஸ்தே யன்றி
யேவுறு கருமத் தாலு மேதுவி னாலு மின்றே. 10

விரிந்திடிவ் வுலக மெல்லாம் விதிக்கின்ற விதிக
ளெல்லாந், திருந்திய வவற்றி னின்றே செனித்தவ
ராபூ டேட, பொருந்திய விர்ப்ப விப்பர் புகன்றிடு மவ
ர்க ளந்தப், பரம்பிய பஞ்ச மாபூ தங்களி லேயே மீண்
டும். 11

அலைகட லுதித்த வார மதன்கணே யொடுங்கு மாபோ
மலர்தரு காலஞ் செல்ல மறைகின்ற ருலக மாக்கு [ன்
மலமரும் பூத மெல்லா மறைந்தபி னதற்கு மேலே
வலமிகும் பஞ்ச மாபூ தங்களு மறைந்து போமே. 12

ஒப்பிலா யோகி யப்போ தைம்பூதங் களையொ ழி
த்தே, யப்பர கதியைத் தானே யடைகுவன் பிரம தே

வன், செப்புமிவ் வுலகை யெல்லாஞ் சிருட்டித்தான் மனதி னலே,யப்படி முனிவர் தேவர் களைத்தவ சதனு லின்றார். 13

வேறு.

தவவொ முங்கின் முறை சாற்றுகனி கந்த மயினுந்
திவிய பண்பொடு சமாதியடை சித்த ரவர்க
ளவிரு மூவுலகு மாற்றிடு தவத்தின் வலிவா
லிவித மானதென விவ்விட மிருந்த றிவரால். 14

வேறு.

பிணியி லாததற் கேதுவாய்ப் பேசிடு மருந்து
மணியும் பல்வித மாகிய வித்தைக ளனைத்தும்
பணுந்த வத்தினற் சித்திப்ப தாதலின் பகரி
லெணுந்த வம்மதே மூலசா தனமதா மின்னும். 15

எவைபெ றுவதற் கியர்பிடத் தொடுவதற் கரிதா
யவைய னைத்தையுந் தவத்தினற் சாதித்த லாகு
மவமி லாத்தவ மோவதிக் கிரமித்தற் கரிதாங்
கவனு முஞ்சுரா பானனுங் கொலைஞன்கள் வனுமே. 16

வேறு.

கருவ ழிப்பவன் குருமனை புணருவோன் கழறிய விவ்வைந்து, பெரிய பாதகர் களுநன்று யியற்றிடும் பேசருந் தவந்தன்னு, லரிய தாகுமப் பாதகங் களினு மே யகனுவ ரலதின்னுஞ், சருவ மாந்தரும் பிதிர்சுரர் விபசு சராசர மிவையாவும். 17

என்று நற்றவ முடையாரய்ச் சித்தியை யென்று மே பெற்றுகின்று, ரன்றி யவ்வணந் தவத்தினற் சால நா ளளவுமுள் ளவாகித், துன்று தேவர்கள் விண்ணுல

கடைந்தனர் சொலும்பய னதுதன்னைக், குன்று முதெ
திர்ப் பார்த்திட லோடுடன் கூடிய கன்மங்கள். 18

அழுங்க லற்றெவ ரியற்றிடு வார்களோ வவர்களு
னென்றுள்ள, வழுங்க லின்றிய நினைவொடுஞ் சதுர்
முக னருகினி லமர்வார்க, ளழுங்கி லாமகான் மாக்க
ளுஞ் சுகியதா நற்றவ மதனுலே, சழுங்கு நானென
தற்றுமேற் பெரியபே றதனையே சார்கின்றார். 19

செய்ய தியானயோ கம்பிடித் தென்றுமே தெளி
மன முடையோராய்ப், பொய்யி லான்மலித் வரர்கள்
பே ரின்பமா மவ்யத்தம் புகுகின்றார், துய்ய தியான
யோ கத்தினி லிருந்துநா னெனதெனுந் துகளீத்தோ,
ரய்ய மின்றியே திரும்பியவ் யத்தத்தி லாழ்ந்திங்கே
சிறப்பான. 20

வேறு.

ஒப்பற்ற பெரியோர்க ளுலகதனைப் பெறுகின்றார்
தப்பிலா வவ்யத்தந் தனினின்று முண்டாகித்
திப்பியசாம் யாவத்தை யைக்கொண்டுந் திரும்பியே
அப்பாந்தா மதரசசின் தொடர்புவிடு பட்டவனும். 21

சத்துவமா மொன்றினையே கொண்டவனுஞ் சாற்
றென்று, மெத்தவெலாப் பாவங்க டமினின்றும் விடு
பட்டே, சித்தமுட னிட்களமா யுளவெல்லாஞ் சேத்தி
ரனு, னத்தமுட னுக்குவனென் றவனையறிந் திடவேண்
டும். 22

அவனைப்பெவ னறிகுவனோ வவன்வேத வித்தா
வன், விவாமதாய் நன்மனதான் மெய்யறிவைத் தா
னடைந்து, குலிகின்ற மனதுடனே முனிசிட்டை
கொள்ளவேண்டு, மவனியிலெவ் வணாசிட்டை யடைகு
வனே வானைந்த. 23

ஈதென்று மிருக்கின்ற மந்தணமாம் விரித்துரைக்கி
ஞேதவ்வி யக்தமுதல் விசேடமீ ருகவுள [னு
கோதறுமிக் காட்சிருணங் கலைக்கொண்டு கண்டெனி
மேதமுறு மவித்தையா மெனுமொன்றே யெனவறிவீர்.

வேறு.

இயம்புமிருத் தியுமிரண்டே யக்கரங்க ளுளவாகு மென்று முள்ள, வயங்குபிர மமுமூன்றே யக்கரமா மிருத்யுமம வென்ன லாகு, மியங்கென்று முளமுத்தி நமமெவன வேயீங்கே யியம்பற் பாற்ரு, முயங்குமதி கொளுமாந்தர் களிற்சிலர்தாங் கன்மமதை வழுத்து வாரே. 25

பொருவிலாப் பெருந்தகைகொண் மூதறிஞர் கன்மமதைப் புகழ மாட்டார், கருமத்தாற் பஞ்சவுருக் கொண்டுசோ டசவவயங் களுல்வ தாகி, விரவியே பிறக்கின்ற வச்சீவன் றனைவித்தை விழுங்கு கின்ற, துரிய வஃ தமுதுண்ணுந் தேவுருணத் தக்கதா யுள்ள தாமே.

எவருலகிற் கரையேற நெறியார்க்குந் தன்மையரோ விந்தச் சீவன், கவறில்வித் யாரூப னேயன்றிக் கன்மவடி வினனன் றென்றே, யவரிந்தக் கன்மத்திலன்புகொளா ரெவனிவித மழிவி லாது, மிவையென்று முளதும்பற் றிடமுடியா ததுமெங்கு மிருப்ப தாயும்.

ஆசையகற் றியதாயுந் தனக்குத்தா னேயடங்கி யதுவு மாய, மாசிலா வான்மாவைப் பார்த்தறிந்தோ னவனென்று மாய்ந்தோ ருகான், பேசமுனி லாதவனுஞ் செயப்படா தவனும்பின் னில்லா தோனு, மாசுறய்ய மற்றவனு மாகியவான் மாவை யெவ னறிகுவானே. 28

மற்றெவனிவ் வான்மாவைப் பற்றிடலா காதவனு மருந்தை யுண்ணு,மற்றமிற்றன் மையனுயு மறிகுவனோ வவனிவ்வே துக்க ளாலே, பற்றுதற்கா காதவனு மமு தனுமா யென்றுமுளப் பளகி லாத, வுற்றநாறும் பொரு ளாயு மாவனெலாப் பாவனைக டமையு மொன்ருய். 29

இணைத்துமன மதைப்புந்தி யிடமிறுகப் பிணித் துமே யெதனி னின்றுந், தணைத்தலுடன் றிரும்பிவர மாட்டானோ தகுமந்தச் சுபம தான, திணுக்கமுறும் பரம்பொருளைத் தேர்ந்திடுவான் சித்தமது தெளிந்த போதே, சிணுக்கமாங் கலக்கமறு திலைப்பெறுவான் றேற்றத்தி னழகு தானும். 30

வேறு.

கனவிற் காண்கின்ற காட்சியைப் போலவே
பனுஞ்ச கத்தையும் பார்ப்பது தானிது
சினமின் முத்தர்கள் சென்னெறி யாவர்மெய்
யனக ஞானத் தமர்ந்தவ ராவரோ. 31

யாவர் ப்ரவிர்த்தி யாவு மவித்தையி
னேவி லாவேறு பாட்டா லுதித்தவென்
ருவ லாயவை காண்பர்க ளோவந்த
தேவி ரத்தர்கள் செல்வழி யீதரோ. 32

என்று முள்ள வறமென்ப தீதிது
நன்ற றிந்தா ரடையு நலமிதா
மொன்று நிந்தை செயாத வொழுக்கமாம்
பொன்றி டும்மெலாப் பூதங்க டம்மினும். 33

வேறு.

சரியுறக் கலந்தே யாசைக ணீத்துச் சமமதா யெங்குமே யெண்ணந், திரிபறக் கொண்டு யார்த்தறி

பவனு விக்கதி சேர்ந்திடத் தருமாற், பரிவுறும் விப்ர
சேட்டர்கா ளென்னு லினைவெலாம் பகர்ந்திடப் பட்ட,
வரியவா மிவற்றை விரைவினி லியற்று வீரதாற் சித்தி
யை யடைவீர். 34

இவ்வணம் விதியா லியம்பிட வினவு மெழின்
மிகு மம்முனி வரரு, மவ்வண மியற்றி யதனைக்கொண்
டறிஞ ராகியே பேற்றினை யடைந்தார், செவ்விய மா
பாக் கியமுள நீயு மென்றனுற் செப்பிடு மிந்தத்,திவ்விய
பிரம வாக்கியம் வினவித் தினமுநன் காசரித் திடுவாய்.

சுத்தவான் மாவா யதுகொடு சித்தி துரிதமா
யடைகுவா யென்னும், புத்திசேர் குருவா னுத்தம
தருமம் போதிக்க வினவுமச் சீடன், பத்தியா யப்போ
தியாவுமா சரித்தான் பகருரும் புகழ்கெளந் தேயா,
சித்தமா யதனுன் முத்தியை யடைந்தோ னுகினன்
சீடனப் போதே. 36

வேறு.

இயற்கிரு தார்த்த னுகி யெங்கடைந் தவன்முன்
மீண்டுந், துயரடை யாதே வந்தத் துய்யநற் பதியைப்
பெற்றான், பயன்றருங் குருகு லத்திற் றிலகனே யென
வும் பார்த்த, னயமுடன் றுதிசெய் தேத்தி நலமுட
னவிலு வானே. 37

எபிரபோ சனங்க ளாற்பிரார்த் தித்திடுங் கண்ணு
வந்தச், சுபமுள மறையோன் யாவன் சொலுமந்தச்
சீடன் யாவன், விபரமா விதுவென் னுலே வினவிட
லாகு மாயி, னபலமி லதைநா யேனுக் கருளென வறை
வா னுயன். 38

நரர்களிற் சிறந்த வாகு தனஞ்சயா நான்று னந்தக்
குருவென்றன் மனந்தா னந்தக் கோதிலாச் சீட னென்
யுரமுட னிதைநீ யோர்வா யுன்னிடத் தன்பா லிந்த[றே
விரகசி யமுமு னக்கே யியம்பிடப் பட்ட தாமே. 39

என்றுமே யுனக்கு மென்ற னிடத்தன்புண் டாத
லாலே, யன்றியிவ் வத்யாத் மத்தை வினவியவ் வணமே
நிற்பாய், துன்றுநல் விரதங் கொண்டோய் துணிவொ
டிங் கெறியி லுற்றே, நின்றதின் மேலே சர்வ பாவமு
நீத்தோ னகி. 40

ஓர்தனி நிலையா முத்தி பெறுகுவா யுனக்கு முன்
னம், போர்செய வாய்த்தி ருந்த போதுமே யென்ற
னாலே, கூர்மையாய்க் கூறப்பட்ட திதுவேயாங் குலவு
கின்ற, நீர்மையா யிதனி லுன்றன் மனத்தினை நிறுத்து
வாயே. 41

அரும்பிர பென்பி தாவைப் பார்த்துநா னனந்த
மான, தருமையா மமைதி நின்பா லாயபி னதற்கு
மேலே, பரிவுட னவனைப் பார்க்கப் பாண்டவா விரும்பு
கின்றேன், பரதரிற் சிறந்த நல்ல பற்குன வென்றும்
வாழி. 42

ஞானகாண்டம், குருகீதை
பதினேழாவதத்தியாயம் முற்றிற்று.
ஆகவத்தியாய முப்பத்தாறிற்குச்
செய்யுள் 665.

குருவே துணை.

DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS-41

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 4 | 19 | திருமாற் | திருமால் |
| 6 | 6 | யுன்றனு | யுன்றன |
| 6 | 21 | யலமறு | வலமரு |
| 9 | 21 | யென்ளை | யென்னை |
| 19 | 16 | டதை | டெதை |
| 28 | 18 | னந்த | னெந்த |
| 37 | 14 | தியல் | கியல் |
| ஷை | 29 | யிஃ | விஃ |
| 41 | 21 | டாகு | டாகுந் |
| 42 | 13 | மோரிதுவே | மோரிஃது |
| 44 | 12 | வாயு | வர்யு |
| 45 | 2 | யியல் | யோகம் [ஸையு |
| 51 | 6 | மறிகிலனேஸையு | மறிகிலன்சொ லோ |
| ஷை | 7 | முணர்கிலேனெண் ணா | முணர்கிலேனோர் சங்கற்ப |
| 53 | 15 | யிர்ப்பன | முயிர்ப்பன |
| 54 | 24 | லாவெவ | லாலெல |
| 60 | 11 | வுற்றாள் | வுற்றான் |
| 70 | 3 | வுன்ள | வுள்ள |
| ஷை | 8 | நருவீர் | நகுவீர் |
| ஷை | 28 | தானென் | தானெண |

# பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 71 | 10 | தானெரிங் | தான்றெரிங் |
| 72 | 30 | விதிபடி | விதிப்படி |
| 82 | 3 | யேற்று | வேற்று |
| 94 | 8 | அலரிய | அலரியா |
| 98 | 9 | பெரு | பெருங் |
| 100 | 5 | மருத | மருத் |
| 105 | 27 | யன்ன | வன்ன |
| 106 | 19 | லிவனு | லிவனு |
| 108 | 7 | நிகனிழல் | நிகழ்நிழல் |
| 117 | 4 | தவை | மவை |
| 121 | 15 | நல்வினை | நலறிவை |
| ஷை | 16 | திரனென்று | திராஞெடு |
| 127 | 4 | மவ்வவிய | மவ்விய |
| 131 | 14 | பர்பூத | டல்பூத |
| 139 | 25 | யார்ய்ச் | யாராய்ச |

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY.
TIRUVANMIYUR :· MADRAS-41